வாதபுரச் சுரம் a variety of fever.

வாத பேதம், பூவரசு, Portia tree.

வாதபோதச் சயோகி, பலா, Indian jack tree - Artocarpus integrifolia.

வாத போதம், பலாசு, a tree - Butea frondosa.

வாதப் பவுத்திரம் a variety of fistula in ano.

வாதப் பாண்டு, தாகம், பசி, நீர், மலம் நிறங்கெட்டு கருகி வயிறு பொருமி புறங்கால் வீங்கி, கைகால் ஓய்ந்து காணும் ஓர் விதப்பாண்டு, an anaemia accompanied by swelling in the legs, thirst, hunger, weariness of the limbs gurgling in the abdomen and change in the colour or urine and faeces.

வாதப் பிடிப்பு contraction due to rheumatism.

வாதப் பிரமி, மான் deer.

வாதப்பிர மேகம், கோசம், பீசம், அடிவயிறு இவ்விடங்களில் வலித்து, கட்டியாக சீழ் வடிந்து பசு மூத்திரம் போல் நீரிறங்கும் ஓர் மேக நோய், பெண்கள் மோகத்தினால் தாது கெட்டு மூளை, இளநுங்கு, சளி இவைகளைப் போலவும் இன்னும் பலவாறாகவும் தாது வெளிப்பட்டு வழுவழுப்பாய் விழும் ஓர் மேக நோய், a venereal disease affecting the urinary system marked by pain in the scrotum & lower abdomen, urine resembles that of cow with solid pus, and sometimes with semen.

வாதப்பிரமேகம், The type of Premegham produced by an aggravated condition of the bodily Vayu. There are considered as most incurable in as much as no kind of medicines can restore the fleet course, deep diving Vayu which advances in its work of disintegration. அஸ்தி மேகம் is one of the four types of this kind as per Ayurvedic Science, which invades the bones and the marrow. See எலும்புருக்கி.

வாதப் புரட்டுக்கல், இராச வர்த்தக்கல், semi precious stone - Lopis lazuli.

வாதப் பெருக்கம், வாதப் பெருக்கு, increase or aggravation of wind humour.

வாதப் பெரும்பாடு, Menorrhagia of Vatha type is marked by pain in the waist below the navel, in the sides and in the chest or breasts. The menstrual flow continues sometimes for the whole month or even two. In some varieties the sympotms are burning sensation and pain. In the eys palms of the hand and the vagina. The discharge is mixed with slimy secretions. It may also appear at an interval of 3 or 4 months or even longer than that. The breasts may become neavy and swollen and body emaciated.

வாதமக்கி, மேக சஞ்சீவி a plant.

வாதமடக்கி, தழுதாழை a tree - Clodendron phlomoides.

வாதமடி, வாதத்திற்கு அடிப்படையாயுள்ள, 1. உமிழ் நீர்; 2. சிறுநீர்; 3. மலம்; ஆக மூன்று the base of wind humour are; salive, wrine, and faeces.

வாத மண்டிகம், see வாதமடக்கி.

வாத மயக்கம், giddiness caused by wind humour.

வாதமய வுப்பு, கறியுப்பு common salt.

வாத மரம், வில்வ மரம், a scared tree - Bael tree - Aegle marmelos.

வாத மலடு, நீர் இரத்தம் போலிறங்கும் ஓர்வித மலட்டு ரோகம், a variety of sterlity.

வாதமல பந்தம் constipation caused by wind humour.

வாத மறுக்கின்றோன், மிளகு pepper - Piper nigrum.

வாத மாந்தம், குழந்தை வயிறு பொருமி அழும் ஓர் நோய், a disease of children caused by indigestion marked by pain and flatulence.

வாத முடக்கம், contraction and impairment caused by wind humour (Gout).

வாத முடிக்கின்றோன், சவர்க்காரம் soap.

வாதமுறை, 4. விதம்; 1. நீற்றினம், பற்ப மார்க்கம்; 2. உருக்கினம்; 3. ஏற்றினம், சத்து ஏற்றுதல்; 4. இறக்கினம், சத்து இறக்கல் alchemy consists of four processes as mentioned above.

வாத முட்டு, Rheumatic artheritis.

வாதமூத்திர கிரிச்சரம், disurea due to vitiated wind humour.

வாதமூலம், Piles due to the action of the aggravated vayu. They resembles Kadamba flowers in structure and are either tubular or sharp pointed like a needle sometimes assuming the shape of the wild Thundikeerai flower.

வாத மையவுப்பு see வாதமய வுப்பு.

வாத மேகம்.

வாதம், உந்தியின் கீழ் பிறந்து உடம்பு முழுவதிலும் பரவி சுவாசம். பசி, தாகம், முதலியவைகளுக்கு ஆதாரமாக விருந்து கொண்டு பல விகாரங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் முப்பிணிகளிலொன்று, one of the three humours occupying the region below the naval. It is responsible for all movements in the body; spreads through out the body and causes respiration hunger, thirst etc., without itself under going any change. 2. நரம்பு துவாரங்களில் கெட்ட நீர் தங்கி தசையில் ஊறி அதினால் வாயு அதிகரித்து சர்வாங்கத்தையும் பற்றி நிற்குமோர் நோய்; இதனால் கை, கால், உடல் உளையும் pain in the body caused by wind humour which is aggravated by some bad fluid in the nerves. 3. உடம்பிற்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடி எங்கும் பரவி தாதுக்களையெல்லாம் பாதுகாக்கும் ஓர்வித சக்தி, that is the energy or power that prevails all over the body keeping the various tissues in good condition; 4. வாயு, wind air; one of the three humours of the body inducing melancholy, hypochondriacus; rheumatism, gout, etc. when vitiated; 5. இரசவாதம், alchemy; இரும்பு முதலிய உலோகங்களைக் கொண்டு பொன் செய்யும் வித்தை, art of transmuting metals; 6. முப்பிணியிலொன்று, one of the three humours; 7. வில்வம், a sacred tree - Bael tree - Aegel marmelos; 8. அணுதத்துவ ரூபமாய் பாத முதல் நாபி வரை வியாபித்து உடம்பைக் காப்பாற்றி சுபாவரூபமாய் இருக்கும் ஓர் சக்தி; 9. எருக்கிலை, leaf of madar - Calotropis gigantia.

வாதம், 1. உச்சி வாதம், 2. எரிவாதம்; 3. தானாத்திரம் வாதம்; 4. ஈரல் வாதம்; 5. கடுப்பு வாதம்; 6. முடங்கினி வாதம்; 7. திமிர் வாதம்; 8. முழங்கால் வாதம்; 9. கழல் வாதம்; 10. தண்டு வாதம்; 11. சுரோணித வாதம்; 12. குடல் வாதம்; 13. கிளிகை வாதம்; 14. குளிச வாதம்; 15. சூசிகா வாதம்; இதன்றியும் வாதம் மேலும் 80 வகையாம்; Vatha diseases are 80, names of some are given above.

வாதம் கதித்தல், வாதம் இருக்க வேண்டிய மாத்திரை அளவிற்கு இரண்டு பங்கு மிகுந்திருத்தல் aggravation of the wind humour twice than normal.

வாதம் கொட்டை, வாதுமைக் கொட்டை, almond - Prunus amygdalis.

வாதம் கொட்டை யெண்ணெய், வாதுமைப் பருப்பெண்ணெய்

almond oil. It is of two kinds sweet and bitter.

வாதம் சமைக்கின்றோன், வாதம் சமைக்கும் வாதி, நவச்சாரம், sal ammoniac.

வாதம் சமைக்கும் லவணம், கல்லுப்பு rock salt.

வாதம் பிசின், ஓர் பிசின் gum of almond - Gum of Traganth.

வாதம் போக்கி, anti - rheumatic.

வாதம் வந்தக்கல், இராச வர்த்தக்கல், a semi precious stone.

வாதம் வந்ததெனல், பொன் செய்யத் தெரியுமெனப் பொய் சொல்லல் to claim that he had transmulated base metals.

வாதயந்திர பிரநாலி, nervous tissues.

வாதரக் காய்ச்சி, வாத நாராயண மரம், a tree - Delonix elata.

வாதரக்கி, see வாதறக்கி;, 2. பாஷாணம் arsenic.

வாதரக்தம், ஓர் சரும நோய், குட்டத்தைப் போன்ற ஓர் கடுமையான சரும வியாதி, a disease in which the lower extremities cannot bear the beast touch - Hyperaesthesia - It is alos attended with a sort of pricking pain or piercing pain in the region, the legs become withered or atrophic and lose all sensibility to touch. It is due to the vitiated blood and vayu by such causes as over eating of things which are difficult of digestion and heat making in their potency or ingestion of food before the digestion of the previous meal - Tubercular leprosy.

NOTE: Men of mild and delicate constitution or those who are stout or of sedantary habits and people who are addicted to unwholesome and incompatable food etc, are also succeptable to an attack of this disease.

வாதரங்கம், அரசு, a sacred tree - Ficus religiosa.

வாத ரங்கிகம், அரசு a religious tree - Ficus religiosa.

வாதரசம், இரசம், mercury.

வாதரம், இலந்தை jujube tree - Zizyphus jujuba.

வாதரவி, உடம்பின் கொழுப்பு, adipose tissue.

வாதராசன், நவாச்சாரம், sal ammoniac; 2. கோடாசூரி a kind of arsenic.

வாதராசன் பூடு, துளசிப் பூண்டைப் போல் வாசனையுள்ள பூடு, a plant which smells like holy basil.

வாதராசாங்கத் தைலம், உடம்பிலுள்ள வாதத்தைக் கேட்கும் ஓர் வகைத் தைலம், a medicated oil useful for vitiated wind humour.

வாத ராட்சதக் குளிகை, 80 வித வாத நோய்களையும் போக்கும் சித்த முறையில் செய்த ஓர் குளிகை, pill of Siddha preparation for all 80 varieties of Vatha disease.

வாத ராட்சத ரசம், a medicine.

வாத ராட்சதன், ஓர் மருந்து a medicine; 2. ஓர் பூடு (சூலைக்குபயோகிக்கும்) a plant.

வாதராயணம், வாத நாராயணன் a tree - Delonix elata.

வாத ரோக அரி, பேய்ப் பீர்க்கு, a climber - bitter ribbed gourd - Luffa amara.

வாத ரோகக் கூட்டம், பலவித வாத ரோகக்கலப்பு, a group of different varieties of Vatha diseases.

வாத ரோகசமனி, செம்முள்ளி, a thorny plant - red variety of Ammaranthus spinosa.

வாதரோக நிவாரணி, that which relieves rheumatism - Anti-rheumatic.

வாதரோகம், வாத நோய் nervous disease; 2. நரம்புவலி neuralgia; 3. வாதப்பிடிப்பு rheumatism.

வாதரோகரி, பேய்ப்புடல் wild snake gourd, which see.

வாதரோகி, வாயுரோகி, a rheumatic patient.

வாதலம், அதிமதுரம், a plant; a wild liquorice.

வாதலா, பம்பந்திராய், which see.

வாத லிங்கநாசம், கண்களின் புரையில் வாயு தங்கி பார்வை புகை கம்மியது போல் தோற்றுமோர் கண்ணோய் an eye disease where in the sight appears to be Amoky.

வாதலிங்கி, வாதரோகி rheumatic patient.

வாத லோபன், முப்பு வாதிகள் which see.

வாத வஸ்தி, a disease in which bodily vayu in the locality aggravated by a voluntary repression of urine enters into the bladder and obstructs the retention of urine with an oppressive pain in the bladder and the loins. It is extremely hard to cure.

வாத வருக்கம், substances or drugs that cause Vatham.

வாத வலி, Rheumatic pains.

வாத வறட்சி, dryness due to wind humour.

வாத வறட்சிக் கரப்பான், இடுப்பு, கை, கால் திமிர்ந்து வீங்கி உடம்பு வெடித்து புண்ணாகி வருத்துமோர் நோய், (யூகி - 1200) a skin disease marked by fissures, and ulcers in the body.

வாத வாந்தி, மண்ணீரலிலிருந்து வாதநீர் இரைப்பையில் அபரிமிதமாக விழுவதினால் காணும் நிலைமை vomitting.

வாத வாயு சூலை, பிடரி, கழுத்து, மூட்டு முள்ளந்தண்டு, நெஞ்சு, விலா, துடை இவைகள் உளைந்து குத்தி வலித்து வயிறிரையும் ஓர் சூலை, a rheumatic disease marked by pain in the thighs, sides, chest, and joints.

வாத வாரிதிராசன், நவச்சாரம் sal ammoniac.

வாத வகாரம்

வாத வித்திரதி, வாதத்தினால் ஏற்பட்ட ஓர் வகைக் கட்டி, an abscess caused by wind humour.

வாத வித்தை நுட்பம் secrets and intriacies of alchemy, some are given below; which see.

I. சாரத்தை விட்டால் சய நீரில்லை

தாரத்தை விட்டால் களங்கு இல்லை
வீரத்தை விட்டால் மணிகள் இல்லை
பூரத்தை விடடால் குருவுகள் இல்லை.

II. செம்புதனை விட்டால் வாதமெல்லாம் பொய்யாய் போகும்
சவுக்காரம் தனை விட்டால் நீற்றினங்கள் எல்லாம் போகும்
துருசுதனை விட்டால் நீற்றினங்கள் எல்லாம் போகும்
தங்கத்தை விட்டால் கனகமது இல்லை யாகும்
கல்லுப்புதனை விட்டால் நாதமெல்லாம் இல்லை யாகும்
சாரம்தனை விட்டால் செய நீரில்லை

(யூகி முனி)

III. பேதிப்பதற்கு ஆதிச் சரக்குகள் - 18, கௌரி, கெந்தி, மனோசிலை, தாளகம், வீரம், சிங்கி, இலிங்கம், வெள்ளைத் தொட்டி, பொன்னம்பர், கபரி, கோழித் தலைக்கெந்தி, நிமிளை, இராச வர்த்தம், கார்முகி, குதிரைப்பல், பஞ்ச பட்சி, எருமைத் தொட்டி.

IV. நீற்றினத்திற்கு ஆதிச் சரக்குகள் - 9, புனுகு, வீரம், குருவண்டு, உரம், சூதம், கார்முகில், சவர்க்கார சுண்ணம், சூடம்.

V. செந்தூரத்திற் காதிச் சரக்குகள்-5, நவலோகங்கள், பாஷாணங்கள், காரம், சூதம், உபரசங்கள்.

VI. சத்துச்சரக்குகள் 7, மால்தேவி, மனோசிலை, கெந்தி, கௌரி, அப்பிரகம், துத்தம், வெடியுப்பு.

VII. வர்ணத்திற்கு ஆதிச்சரக்குகள் 4. உப்பு, நாதம், தங்கம், நிமிளை.

வாதவித்தை முடிக்கின்றோன், சவர்க்காரம், soap.

வாத வியாதி, disease of the nervous system, marked by brown such as convulsions, hysteria, paralysis, siatica, cephalgia etc.

வாதவிரணம், Ulcer due to wind humour marked by brown or vermillion colour. It exudes a thin slimy & cold secretion and is largely attended with tension and throbbing pricking and piercing pain.

வாத விளைவு, வாதாதிக்கம், aggravation of wind humour due to eating excessive cold substances.

வாத வுட்சுரம், internal fever.

வாத வுப்பு potassium iodide.

வாத வுளைச்சல், வாதக் குடைச்சல் neuralgic pain from wind humour.

வாத வெண்குட்டம், உடம்பில் பல இடங்கில் கருஞ்சாயலான வெளுப்பு நிறங்காட்டும் வெளுக்காத இடங்களில் அழுக்கு நிற முண்டாகும் Leucoderma.

வாத வெப்பு, வாத சுரம் vatha fever.

வாத வைரி, ஆமணக்கு castor plant - Ricinus communis; 2. வாதத்தைக் கொல்லு மருந்து, anti - rheumatic.

வாத வைகிருத சுரம்.

வாதற வாணி, சேராங் கொட்டை; marking -nut Semicarpus anacardium.

வாதனாசனி, கொடிக்கள்ளி, creeping milk hedge - Sacrostemma brevistigma; 2. புன்னை, which see.

வாதனாசி, முடக் கொற்றான் smooth leaved heart pes - Cardiospermum halicacabum.

வாதனை, see வேதனை pain.

வாதாக்கினி, சதுரக்கள்ளி, square spurge - Euphorbia antiquorum.

வாதாங்கம், அரசு a religious tree - Ficus religiosa.

வாதாங் கொட்டை, வாதுமைக் கொட்டை, almond nut - Prunus amygdalis.

வாதாசனி, கீரிப்பூடு a plant, which see.

வாதா சீரணம், (வாத + அசீரணம்) வாதத்தினால் ஏற்படும் அசீரணம், indigestion caused by excessive wind humour.

வாதா சுமரி, gravel of stone.

வாதாடு காளி, மணித்தக்காளி, night shade - Solanum nigrum.

வாதாஷ்டீலம், a knotty stone like tumour of considerable density whether fixed or mobile and appearing below the navel and having an elevated shape which is always found to be extended in an upward direction, from its name it implies that the disease is due to the action of local deranged vayu and it obstructs the emission of flatus and impedes the evacuation of faeces.

வாதாணம், தேக்கு teak.

வாதாதிக்க தோஷம், வாதத்தினா லேற்பட்ட குடைச்சல், boring pain caused by excessive wind humour.

வாதாதிக்கம், வாதப் பெருக்கு, வாதக்கதிப்பு, aggravated wind humour acute; Rheumatism.

வாதாதி சாரம், அதிசாரபேதி, தொப்புள் முறுக்கிக் கடுப்புண்டாகி, மலங்கறுத்து இரத்தம் வீழ்ந்து நுரை மிகத் தள்ளிக் காணும் diarrhoea marked by (sulai) colic supression of urine rumbling sound in the intestines frequent passion of black motions with blood and froth, accompanied by curciating pain, in the umbilical region.

வாதாதி மந்தம், கண்புருவம், நெற்றி ஆகிய இவ்விடங்களில் மத்தைக் கொண்டு கடைவது போல் வலித்து வாயுவினால் காதுக்குள் ஓயாத இரைச்சலை யுண்டாக்குமோர் கண்ணோய், an eye disease marked by pain as if churned with a firebrand and is attended with sounds in the ear and cutting and piercing pain in the head, fore head, & eye brow.

வாதாஸ்திலம், a swelling below the navel in which the stools and urine are stopped.

வாதாபி சூதனன், அகத்திய முனி Saint Agastya.

வாதா மோதம் மான்மதம் bezoar taken from deer.

வாதாயம், இலை, leaf; 2. பச்சிலை green fresh leaf.

வாதாயனம், Fenestra.

வாதாயு, மான் deer.

வாதாரி, ஆமணக்கு castor plant - Ricinus communis.

வாதாரி மாத்திரை, (வாத + ஹரி) இரசம் கந்தகம், சாதிலிங்கம் காந்தம், அயம் இவைகளைச் சுத்தி செய்து சேர்த்து கையான்சாறு தகரைச் சாற்றினால் அரைத்துருட்டிய மாத்திரை. இதனால் வாத ரோகங்கள் போம், a pill containing mercury, sulphur cinnabar, leadstone and iron ground with the juices of Eclypta prostata and Cassia. It is prescribed by vadha diseases.

வாதாலம், ஓர் மீன் a fish.

வாதாவி, புல்லூரி a parasitic plant.

வாதாவிப்பூடு, நாய்ப்பாகல், a plant - Bryonia mysorensis.

வாதாளை, காட்டாமணக்கு a plant - Jatropha goosypifolia.

வாதானாசி, தாமல பத்திரி, a tree which see.

வாதி கெந்தியுரி பாஷாணம், கௌரி பாஷாணம், a kind of arsenic; 2. வெடிகாரம், salt petre; 3. வாதஞ் செய்வோன், alchemist (உலோகத்தைப் பொன்னாக மாற்றுபவன்); இவன் உலகத்தோர் அறியாதபடி வாழ்பவன், He lives without being known to anybody in the world.

''உரைக்கிறேன் உலகத்து வாதி வாழ்வை
உணர்வாகக் குருமுடித்துப் பதனம் பண்ணி
உரைக்கிறேன் என்று சொல்லிச் சோறு கேட்பன்
ஏழையென்பான் கடன்படுவான் இரந்து திரிவான்
பரைக்கவே பணிபூணான் ஆடை சாத்தான்
நீணிலத்து மானிடரோ டொத்த வாழ்வான''

''போற்றுவாய் பூவுலகில் ஞான கட்கு
புகழாக வாதமது வந்த தென்றால்
நேர்த்தியால் பணிபூணான் கடனும் வாங்கி
நீணிலத்தில் மானிடர் போல் வாழ்க்கை செய்வான்
வார்த்தையால் பிரட்டுவான் மானிடர்க்கு
மயக்கமது வருமென்று மதுக்கள் ளுண்ணான்
தேற்றியே பணங் கேட்பான் எளியனென்று
திறமாக அவர் பாதம் திருத்தி வாழே''

(உரோமரிஷி - கரு - சுருக்கம்)

வாதிக சண்டன் one who has no tresticles and so impotent.

வாதிகம், ஓர் நோய் a disease; 2. செம்பு copper; 3. சோப்பு soap.

வாதி கலந்தகல், அண்டக்கல், which see.

வாதிக்கல், Philospher's stone.

வாதிக்காரம், வெடிகாரம், a kind of salt.

வாதிங் கணம், சேம்பு a plant - Caladium nymphae folium.

வாதிங்காரம், படிகாரம் alum.

வாதிமகன் வைத்தியன், It is said that the son of an alchemist is a physician 'திரமான வாதி - வைத்தியனாகில்'

வாதியர் கெற்பம் பூரம், sub-chloride of mercury.

வாதியுப்பு, வழலை, efflorescence grown on the soil of the fuller's earth.

வாதியென்றபூ.

வாதி ரசஸ்தாபம் தலையைப் பற்றி நிற்கும் வாதம், vadham pertaining the head.

வாதிராசன், நவச்சாரம் sal ammoniac.

வாதிரியம், செவிடு deafness.

வாதிவம், வஞ்சி, which see.

வாதினிலா, சேவகனார் கிழங்கு which see.

வாதுகை, நிலவாகை, a plant - Cassia angustifolia.

வாது புட்பகம், இலந்தை, a thorny tree - Zizyphus jujuba.

வாதுமை, வாதுமைப் பருப்பின் மரம் almond tree - Prunus amygdalis.

வாதுமை, இதன் கொட்டை வாதம் கொட்டை, இது இரண்டு வகை; தித்திப்பு வாதுமை; கசப்பு வாதுமை; இதன்றியும் நாட்ட. வாதங் கொட்டையும் உண்டு. இந்த மரம் மேல் ஆசியாவில் (ஐரோப்பா) ஆதியில் உற்பத்தியாகி, இப்பொழுது பஞ்சாப் காஸ்மீரம், பாரசீகம் ஆப்கானிஸ்தானம் முதலிய விடங்களில் பயிரிடப்படுகிறது. மேற்கண்ட இரண்டு வகைக்கும் வித்தியாசம் மிகவும் கிடையாது. தித்திபபு வாதுமை தேகத்திற்கு குளிர்ச்சியும் TONIC குணமும் உண்டு, தேகத்தை போஷிக்கக் கூடியது. இதை சர்க்கரை வேலம்பிசின் இவைகளோடு சூரணம் செய்து சாப்பிட பலவீனம் தீரும். இதன் தைலம் மேக ரோகங்களில் குணத்தைத் தரக் கூடியது. இதன் ஓடுகளை எரித்து கரியாக்கி உப்புக் கற்களோடு கலந்து தூள் செய்து பல் பொடியாக உபயோகிக்க பல் வலிகளைப் போக்கும். கைப்பான வாதுமையோ கீல் வாய்வுக்குப் பற்று போட வுதவும்.

ஐரோப்பா, பார்பரி, சிரியா முதலியவிடங்களில் பயிராகிறது. கசப்பு வாதுமையிலிருந்து எண்ணெய் எடுத்து களிம்பு எடுக்க உபயோகிக்கலாம். தித்திப்பு

வாதுமையினால் உஷ்ணத்தையும் தப தோஷங்களையும் நீக்கலாம். இதனை மது மேகக்காரர்களுக்கு ரொட்டியாகச் செய்து கொடுக்க நலந்தரும். இருமல் மூத்திர கிரிச்சரம் இவைகளுக்குக் கொடுக்கலாம். இதிலிருந்து எடுக்கும் எண்ணெயை சாராயத்திலும் ஈதர் குளோபாரம் இவைகளிலும் விடக் கரையும். இதற்கு அந்தர் ஸ்நித்தகாரி குணம் உண்டு a few uses of Almond nut, and other parts are given here. Silver baspam with sweet almond oil (a few drops) stops incontinence of urine (by C.D)

வாதுமை வகைகள் Varieties of Almond:

1. நாட்டு வாதுமை Country almond - Terminalia catappa.
2. பாரசீக வாதுமை Persia almond - Prunus amygdalus.
3. கசப்பு வாதுமை bitter almond - Amygdalus communis (amara).
4. தித்திப்பு வாதுமை sweet almond - Amygdalus communis.
5. காட்டு வாதுமை wild almond - Hydrocarpus venenata.
6. ஜாவா வாதுமை java almond - Cannarium commune.
7. பிறபீஜ வாதுமை Foreign almond; African almond - Brahejum stellatum.

வாதுமைக் குழம்பு Almond mixture; வாதுமைப் பருப்பைச் சூரணம் செய்து சீனியை விட்டரைத்து குழம்பாக எடுத்து ஜலத்தில் கரைத்து மெல்லிய துணியில் வடிகட்டி, வைத்துக் கொண்டு இருமல், தாபன ரோகம் ஸ்நித்த காரியாக உபயோகிக்கலாம்.

வாதுமைக் குழம்பு, வாதுமைப் பருப்பைச் சூரணம் செய்து சீனியை விட்டரைத்து, குழம்பாக எடுத்து ஜலத்தில் கரைத்து மெல்லிய துணியில் வடிகட்டி வைத்துக் கொண்டு இருமல், தாபன ரோகம் நித்தகாரியாக உபயோகிக்கலாம்.

வாதுமைக் கூட்டுச் சூரணம், powder with almond as chief ingrediant.

வாதுமைக் கொட்டை, வாதுமை மரத்தின் கொட்டை, வாதுமை விதை, almond fruit.

வாதுமைக் கொட்டைப் பிசின் வாதுமை மரத்தின் பிசின், gum of almond tree - Prunus amygdalis.

வாதுமைப் பருப்பு, வாதுமைக் கொட்டைக்குள்ளிருக்கும் பருப்பு, விழிப்படலம், விரணக் கொழுமை போம், கலவியில் விருப்பமுண்டாம், the kernel of the almond nut. It is useful in certain eye diseases and disease of nose.

வாதுமை நெய், அடப்பம் நெய், Almond oil there are two varieties; sweet and bitter.

வாதுமைப் பசை, a magma of bitter almonds, alchohol white of egg and rose-water used to soften the skin, and prevent the hands and lips from chapping.

வாதுமைப் பிசின், இதுவே அடப்ப மரப்பிசின், gum of almond.

வாதுமை யெண்ணெய், see வாதுமை நெய், Almond oil.

வாதுமை ரொட்டி, நீரிழிவினால் பீடிக்கப்பட்ட நோயாளி சாப்பிடும், வாதுமைப் பருப்பின் மாவினால் செய்த ரொட்டி, a variety of bread made from almond for use by diabitics - Almond bread.

வாதுரச பியந்தம், பால் milk.

வாதுலன், உன்மத்தன் a mad man.

வாதுலி, வௌவால் bat.

வாது வர்ணம், பொன்னாங்காணி, a porstate edible plant used as greens, good for eye disease - illecebrum sessile.

வாதுவிடசேடனம், இருள் செடி, which see.

வாதூகம் சேம்பு colocasia - Colocasia antiquorum.

வாதூகிகம், மெழுகு பேய்ப் பீர்க்கு; நுரைப்பீர்க்கு, loofa- Luffa aegyptiaca.

வாதூயம், பலகறை cowri.

வாதை, நெய் pain.

வாதைப் படல், பிணிப்படல் fall sick.

வாதை ரசம், ரசகற்பூரம் Subchloride of mercury.

வாதை வரி, ஆமணக்கு, castor plant - Ricinus communis.

வாதோதரம், disease of the abdomen produced by the excited wind.

வாத்தன்று, எருக்கிலை, leaf of madar - Calotrois gigantia.

வாத்தியச் சுரை சின்னரிச் சுரை bottle gourd used for making musical instruments.

வாத்தின் விந்து, கற்பூரச் சிலை Ammonia - Alum.

வாத்து, பெருந்தாரா goose.

வாத்து ஈரல், liver of goose.

வாஸ்துகம், Chenopodium album; 2. தாரா, duck.

வாத்துகா, மெழுகு பீர்க்கை loofa - Luffa aegyptiaca.

வாத்துக் கறி, விரணம் அதிகரிக்கும், கோழை, அருசி, விந்துத் தம்பனம் உண்டாம். இரத்தத்தைத் தேய்க்கச் செய்யும், flesh of goose not good for health; brings on several disease.

வாத்துக் கொழுப்பு, பெருந்தாராக் கொழுப்பு, Adeps amserensis.

வாத்து முட்டை egg of goose.

வாந்தகி, மூவிலை முன்னை, a variety of Premna.

வாந்தம், வாந்தி vomitting - anacatharsi; 2. ஓர் சிறிய சாதிக் கோழி, a small kind of fowl.

வாந்தி, ஒக் காளம் vomit - Anabole.

வாந்தி, Vomiting due to the derangement of bodily doshas (humours) arising in a man addicted to incompatible food and drink. This is said to happen when உதான வாயு comes in combination with வியானன், Several are the causes which bring about vomiting viz - impalatable or over salted food or one taken at unproper time or in an inordinate quantity loathsomeness, mental agitation, pressence of worms in the intestines, early pregnancy, (morning sickness). The symptoms differ according to the function of the three humours - வாத வாந்தி, பித்த வாந்தி, சிலேட்டும் வாந்தி; The premonitary symptoms are: - desire or tendency to throwout or eject the contents of the stomach, saline and watery secretions from the mouth disgust for food and uneasiness in the throat and chest, the vomit will be pungent, bitter and sweet resectively.

வாந்திக் கால், நாகன்வாயு, one of the ten winds responsible for vomiting.

வாந்திக்கு வாங்கல், வாந்திக்காக மருந்து சாப்பிடல், to take an emetic. It should be taken once a month.

வாந்தி சுரம், ஓர் வகைப் பித்த சுரம், a fever accompanied by vomiting due to biliousness.

வாந்தி சுரதாகநாசனி, வெட்டி வேர், khus khus vetiveria, Zizanioides.

வாந்தி சோதினி, கருஞ்சீரகம், black cumin - Nigella sativa.

வாந்திதம், வாந்தி மருந்து emetic.

வாந்தித்தல், வாந்தி செய்தல், to vomit.

வாந்தித் திரவியம், substances that cause vomiting.

வாந்தி நிறுத்தி, வாந்தியைத் தடுக்கு மருந்து, Anti - emetic.

வாந்தி பண்ணல், வாந்தியெடுத்தல், vomiting; 2. சத்தி spew.

வாந்தி பிராந்தி, வாந்தி பேதி மயக்கம், spasmodic, cholera; 2. வாந்தியும் பேதியும், vomiting & Purging.

வாந்தி பேதி, ஓர் பெருவாரி நோய் an epidemic disease - Cholera - Choleramorbus.

வாந்தி பேதி, Cholera. The main facts regarding the epdemiology and control of cholera have been known from a long time. The recent theory is that it is caused by an organism 'Comma bacillus' or 'Comma vibrio' which is given out in large numbers in the motion and the vomitted material of Cholera patient. The usual mode of infection is through the transferrence of the organism either to drinking water or to food and its subsquent ingestion by healthy human beings. Infection is also said to take place through flies and bathing in village tanks where water

is not well protected because the clothes and untensils used by the patient are washed in this tank or well out of ignorance. These are endemic centres of cholera such as Kaveri delta in Madras State. Where it breaks out in every year at the appropriate cholera season. Some priniciple sources of infection are the use of domestic vessels which have been cleaned with water infected by cholera germs. The drinking of unfiltered and unboiled water, milk or other beverages diluted with water drown from contaminated wells, tanks, rivers etc., the eating of unwashed or uncooked food and vegetables unripe or over ripe fruits stale meat or fish especially such as those exposed for sale in the bazaar and liable for infection by flies.

The contagious character of this disease is so great that the disease spreads so rapidly from a single person to several of the inhabitants of the locality in the form of an epidemic. In Sanskrit it is known as Visuchikam *(விசுசிகம்)* Simultaneous vomiting and purging are the ordinary symptoms. The stools soon become watery (like rice washed water) and smell like rotten fish. Pain in the stomach, suppressed urine, sunken eyes, change of features, blue lips, prominent nose, cold and contracted extremeties cramps of the limbs, paleness, perspiration, weak pulse, excessive thirst, sometimes hiccups, delusion, and delirium restlesness, tossing of the head on the pillow, optical illusions coldness of breath, blue skin quick pulse gradually sinking and becoming imperceptible are the general symptoms.

Following are the symptomes of recovery; Subnormal temperature (96^0) less of purging and vomiting, stools with bilious secrections, regular, brathing, decrease of thirst, tendency to sleep, appearance of normal complexion, passing of urine etc.

The duration and cure cannot be determind as it may last from a few hours to a period of 2-4 days within which it may and fatally or in recovery.

In Siddha medicine,. காடிகார்ர செந்தூரம், கஸ்தூரி சண்டமாருதம், have marvellous effects, Pills consisting of camphor, opium, asafoetida, pepper are given. See வாந்தி பேதி மருந்து Mustard poultice is applied to the abdomen and sugar cane juice is advised to check vomiting and promote urination - Rubbing of wine or turpentine in the body may check cramps.

வாந்தி பேதிக்கிலி, Choleraphobia.

வாந்தி பேதிக்குரல், vox cholerica.

வாந்திபேதி மருந்து, வாந்தி பேதியை நிறுத்தும் மருந்து, மிளகு, பெருங்காயம், அபினி வகைக்கு 10 குன்றி எடையாகச் சேர்த்தரைத்து 12 மாத்திரைகளாகச் செய்து பெரியவர்களுக்கு ஒரு

மாத்திரை சிறியவர்களுக்கு அரை மாத்திரையாக 1 மணிக்கு ஒரு தடவை வாயிலிட்டு விழுங்கச் செய்யின் நிறுத்தி விடலாம். medicine for cholera - Pepper, asafoetida, opium each 10 Kundri grind them all and make 12 pills. One every hour for adults - 1/2 for children Stop the medicine if vomiting & purging stops. Cholera mixure (English) Acetic acid dilute, 2 drams spirit ether nitras 60 drops Spirit camphor 15 drops, Aqua 3 ounces.

வாந்தி மருந்து, வாந்தியாதற்கு சாப்பிடு மருந்து, an emetic.

வாந்தியம், தான்றி a tree - Terminalia bellerica; 2. வாலுளுவை - Celastrus paniculata.

வாந்தியுப்பு, வாந்திக்காகக் கொடுக்கும் ஓர் வகையுப்பு, a kind of salt - Tartar emetic.

வாந்தியுப்பு சாராயம்.

வாந்தி யுறை, வாந்தி மருந்து, emetic (வமனி)

வாந்திரியம், தான்றி, a tree - Terminalia bellerica.

வாந்தி ரோகம், சத்தி குன்ம ரோகம் dyspepsia; 2. வாந்தி யெடுத்தல், vomiting.

வாந்தினி, வாந்தியை யுண்டாக்கு மருந்து, emetic. See வமனகாரி.

வாந்துதம், பெருமுத்தக்காசு, which see.

வாபம், வித்து seed.

வாபிதம், ஓர் வகைத் தானியம் a kind of grain; 2. வரகு kodo millet - Paspalum Scrobiculatum.

வாபீகம், சாதகப்புள்; வானம்பாடி, a bird - sky lark.

வாப்பியம், கோஷ்டம் Arabian costus - Costus speciosus.

வாமகம், முடிமாமிசம், flesh of the head.

வாமகலை, சூரிய கலை vital air assing through the right nostril.

வாமகோதய வாஞ்சி, மண்ணீரல் spleen (அடியீரல்).

வாமசலம், தகரம் tin.

வாம சுக்கிலம், பொன்னாவிரை, a plant - Cassia auriculata.

வாமண சலம், தென் பூமிசலம் water of the southern parts.

வாமத் திராவகம், சங்குத் திராவகம், an acid.

வாமத்துடரி, ஒட்டை an animal - Camel.

வாமத்துடையாள், பசு, an animal - cow.

வாமநாசி, அரத்தை a drug - Galangal.

வாமநீர், தலைப்பிண்ட செயநீர், pungent liquid extracted from the head of the first foetus; 2. காம நீர் semen.

வாமபாகத் தீமூட்டல்.

வாமபுர கோபம், துத்தம், copper sulphate.

வாமசபூசனை, கொங்கணவர் கடைக்காண்டத்தில் சொல்லியுள்ள 40 முக்கோணம், 40 angles told in Konganavar's "Kadai Kandam".

வாமப்பால், ஒரு முலைப்பால், milk of one breast.

வாமப்பூ, பூநீர் salt grown on the soil of fuller's earth.

வாமம், அழகு beauty; 2. ஒளி light; சிவன் ஐந்து முகத் தொன்று one of the five faces of God shiva which indicates illumination; 3. சூரியன், the sun; 4. சாராயம், arrack; 5. சிலந்தி, an insect; spider; 6. விந்து, semen; 7. தொடை, thigh; 8. ஓர் பாம்பு, snake; 9. முலை breast; 10. சரகண்ட பாஷாணம், a kind of arsenic; 11. சங்கு conch.
வெட்பாலை யரிசி, which see.

வாம ரோதயம், ஈரல் liver.

வாமலோ சிகம், கற்றாழை aloes.

வாமல், கற்றாழை, aloes.

வாமல் மேனி, சோற்றுக் கற்றாழை Indian aloes.

வாமறானிதம், கோஷ்டம் Arabi costus - Costus speciosus.

வாமனம், நீர்விளா which see அழகு, beauty 3. ஓர் வகை சால கிராமம், a variety of Shalagraman

வாமனோ பாதம், மருக்காரை a pla - Randia dumetorum.

வாமன்னியம், பருத்தி cotton.

வாமாச் சாரம், black magic.

வாமா வர்த்தம், இடம்புரிச் சங்கு, a conch turning to the left.

வாமி, வெள்ளைக் கிலுகிலுப்பை a plant rattle wort - Crotolaria laburnifolia.

வாமிகம், சரீரக் கொழுப்பு, adipose tissue.

வாமித் திட்டம் அப்பிரக பாஷாணம், a kind of arsenic.

வாமினி யோனி, பிரசவித்த ஆறு அல்லது ஏழாம் நாளில் கருப்பையிலிருக்கும் கோழை கபத்தை யோனி வழியாய் ஒழுகச் செய்யும் ஓர் வாயு, a disease of the female genitals which occurs on the 6th or 7th day after delivery causing great discharge.

வாம்பல், மூங்கில் bamboo.

வாயகன்ற குப்பி, wide mouthed bottle.

வாயகன்ற பாண்டம் ஓர் பாண்டம், a wide mouthed earthern ware; basin.

வாயசம், காக்கை crow 2. காக்கைக் கொல்லி.

வாயசி, செம்மணத் தக்காளி, red variety of Solanum rubrum.

வாயச்சரம், sore in the month.

வாயடைப்பு, வாய்க்கட்டு, gag; 2. உணவு, food; 3. தூக்கம் நடை ஆகியவிக் குற்றங்களினாற் பிறந்து நரம்புகளில் அனுசரித்து மூடிய வாயைத் திறக்க வொட்டாதபடி செய்யுமோர் வாத நோய் a disease which prevents the opening of the mouth. This is generally caused by sleeping during the day which aggravates Vayu.

வாயது பேசாமல், ஒருவரிடமும் வார்த்தையாடாமல் அதாவது மௌனங் கொள்ளல், to keep silence.

வாய முர்தம், சுத்தசலம் saliva.

வாயவியல், வாய் வெந்து புண்ணாதல் - Canker oris.

வாயழற்சி, வாய் வேக்காடு inflammation of mouth.

வாயறியாமல் நின்றல், மிதமிஞ்சிப் புசித்தல் eating excessively.

வாயாலெரையுடன் தேவாங்கு an animal - Sloth.

வாயால் குதட்டுதல், வாயிலிட்டு அதக்குதல், pressing softly after receiving into the mouth as done with penis or lips by a woman. This is a kind of perverted sexual act.

வாயாவி, மூச்சு - breath - respiration.

வாயுக்குர சத்துவம் ஓர் பல் நோய் a disease of the tooth.

வாயிலடக்கல் to keep in the mouth.

வாயிலப்பு, 1. வாய் நீரூறல்; ஓர் நோய், excessive salivation; 2. வாய் நீர் saliva; 3. மகோதரம் ascities.

வாயிலைப்பு, வாய் அரோசித்தல், சுவையின்மை, bad taste in the mouth.

வாயிலெடுக்கல், வாந்தி யெடுத்தல், vomiting.

வாயிலெடுத்தல், வாயிலெடுக்கல், which see.

வாயிலெட்டு, ஓர் யூனானிப்பூடு, பனப்ஷா, violaodorata a plant used in Unani medicine.

வாயில், ஐம்பொறி, the five sense organs; 2. நவத்துவாரம், the nine opening.

வாயில்லா சீவன், மிருகங்கள் dumb animals such as cattle.

வாயில்லான், ஊமை a dubm person.

வாயினிப்பு, sweetness of the mouth.

வாயீளை, saliva and mucus discharge from the mouth.

வாயு, மூச்சு breath; 2. காற்று, wind, air; 3. வாயு, wind in the system; 4. வாதம், flatulency, 5. நரம்பு மண்டலங்களிலிருந்து ஓடும் உணர்ச்சிக்குறி, nerve force; 6. தசவாயு, the ten kinds of vital airs controlling the action in the human system they are; பிராணன், வியானன், உதானன், சமானன், அபானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

NOTE: Vayu and Prana are one and the same principle and they are indentical. It is the Universal store of energy. In the physical world it is known by the name vayr but in the living world it is called Pranan.

வாயு, Vital or nerve force of self begotten in origion. It is so called from its coursing through out the Universe. It is the primary factor which determines the principal of cause and effect in all forms of created things. It determines the growth, origin and disintegration of all animated organisms.

It is instantaneous in its action and radiates or courses through the organisms in constant currents. It has its primary field of action in the intestinal tract and the rectum.

In its deranged state, it is the principle factor wich lies at the root of all diseases and so termed sometimes as 'King of diseases' It its normal condition it maintains a state of equilibrium between the different humours and the root principles of the body. It also tends to maintain uniform state in the metabolism of the body and helps the organs to discharge their specific functions.

The bodily Vayu is grouped under 10 heads and of these five are important, According to the difference in its function and location it is classified as Pranan, Udanan, Samanan, Viyanan, and Apanan, These five classes located in their specific regions contribute towards the integration and maintenance of the body.

1. The Pranan is idential with the energy of the nerve centre in the medulla.
2. The Udanan with that of the one situated in the speech centre.
3. The Samanan in the same as the energy of the Epigastric plexus.
4. The Viyanan is the same as the energy of the motor sensory nerves.
5. The Apanan is idential with the force of the hypogastric plexus.

NOTE: The term 'Vayu' may rightly be inter preted to mean the nerve force but is also made to include any kind of electro motor or molecular force though the term is loosely applied to signify gas or air.

வாயு, நரம்பின் வழியாய் வாத நீர் அதிகரித்து அபானத்தில் நரம்பின் வழியாயும் வேறு பற்பல வழியாயும் இறங்கி உண்டாகும் ஓர் வாத நோய் a rheumatic disease; 2. உடம்பில் அந்தந்த தாதுக்களும்

அவையவங்களும் அதனதன் காரியங்களை ஒழுங்காக நடத்த அவைகளை தூண்டுவதற்கு ஏற்ற சக்தியை யுடையது, vital force that stimulates the various cells and organs to do their normal functions.

வாயு கட்டன், தாளிசம் a plant - Flacourtia cataphrata.

வாயு கண்டம் அசிரணம் indigestion.

வாயு கலக்கி, carminative.

வாயு குணபாடம் the science of air and its qualities - Aerology.

வாயு குன்மம் amylo - Dyspesia.

வாயு கொல்லி, வாயு உடம்பினின்று கழியும் படி கொள்ளும் மருந்து a drug used against flatulence - Zeodoti.

வாயு கொள்ளல், having flatulence in the bowels; 2. உடம்பில் வாயு உண்டாதல், gas formation in the body - Aerosis.

வாயுக் கட்டி, Tympanitic abscess - wind gall.

வாயுக்கண்டிக்கு மூலிகை, vayu sub-duing drugs.

வாயுக் கண்ணறைகள், நுரையீரலிலிருக்கும் காற்று புகுவதற்குண்டான சிறு துவாரங்கள், air cells.

வாயுக் கிரகணி, see வாயுக்கிராணி.

வாயுக்கிராணி, உண்ட அன்னம் செரிக்காமல், வயிறு நொந்து பொருமிக் கழிந்து புளியேப்பம் வாயுபரிதலுடன் உடல் மெலிந்து தாகிக்கும் ஓர் விதக் கழிச்சல், chronic diarrhoea due to indigestion - dyspeptic diarrhoea.

வாயுக்கினி, carminative.

வாயுக் கிருமி,

வாயுக் குடாரம், வாயுவினால் ஏற்படும் நோய்கள் அதாவது உட்குத்து பிறவிச்சு கோதாரி கழிச்சல், குன்மம், சன்னி, மாந்தம், வாதம் முதலியன, vatha disease such as mentioned above.

வாயுக்குணம், காற்றின் குணாகுணங்கள் description and qualities of air - Aerography.

வாயுக்குத்து. வாயுவினால் உடம்பில் பலவிடங்களில் குத்தலுண்டாதல், a rheumatic disease. It is cured by the following decoction; கொடிவேலி, சுக்கு, பரங்கிப்பட்டை கிழங்கு இவைகளை சரியெடை யெடுத்து நாழிசலம் விட்டு எட்டொன்றாய் கியாழமிட்டு இருவேளை குடிக்கக் குணப்படும், பத்தியம் உப்பு புளியாகாது.

வாயுக் கூறு, நடத்தல் கிடத்தல் ஓடல், qualities of vayu are mentioned above.

வாயு சங்கா, உத்தாமணி, a twiner - Daemia extensa.

வாயு சங்காரன், சூரத்து நிலாவாரை Surat senna.

வாயு சஞ்சாரம், இரத்தம் பரவல், circulation of blood.

வாயு சிகிச்சை, a mode of treating diseases by varying the pressure or composition of air breathed - Aerotherapeutic.

வாயு சுரம், See வாதசுரம்.

வாயு சூலைப்பிடிப்பு ஓர் வகை சூலைப்பிடிப்பு, a rheumatic affection; 2. வாயு சம்பந்தமான வலி, colic of windy - nature.

வாயு சூனியம், காற்று முழுவதுமே யில்லாவிடம், சூனியம் vacum.

வாயு சேஷ்டை, Windiness.

வாயுட்புகா, காற்று உள்ளே செல்ல முடியாத airtight.

வாயுதாரி, மிதமிஞ்சிப் புசிப்பவர், வாய்கட்டாதவள் one who eats immoderately; 2. வாயு கொண்டவன் gas holder.

வாயு தாரு, மூங்கில் bamboo.

வாயு தானி, வாழை plantain.

வாயு தோயம், காற்றுக் குளியல், air bath.

வாயுத் திரட்சி, accumulation of gas in some parts of the intestines.

வாயு நாசனி, see வாயு போக்கி.

வாயு நிவர்த்தி மருந்து வாயு சேர்ந்த நோய்களைப் போககும் மருந்து carminatives.

வாயு நோய், இது (80) எண்பது வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது, disease of the Vayu. It is said to be 80 in number.

வாயு பண்டம், substances that increase vayu.

வாயு பயம், dread of a current of air Aerophobia.

வாயு பரிதல், குசுவிடல் to break wind; வாய் வெளிநோக்கல், any abnormal escape air as by belching yawning etc - Aerifleaxus.

வாயு பிடிக்கு மருந்து, வாயுவைப் போக்கு மருந்து medicine that cure disease of vayu.

வாயு பிடித்தல்.

வாயு புசித்தல் to feed on air as smakes, Smackless live for a long time on air above.

வாயுபூட்டு.

வாயு பேதம், தசவாயுக்களின் வித்தியாசங்கள், பிரிவுகள், the different kinds of air.

வாயு பொருமலான வாயுவான tympanitic.

வாயு போக்கி, substances which aid the expulsion of gas from the

abdomen such as asafoetida - Carminatives.

வாயுப் பவுத்திரம், காற்று உட்புகுமோர் பவுத்திரம், anal fistula.

வாயுப் பொருமல், வாயுபரிதல், which see; 2. உப்புசம் tympanitis.

வாயு மண்டலம் காற்று புகுமிடம் respiratory system; 2. ஆகாயம் atmosphere.

வாயு மலடு, பெண்களுக்கு, கர்ப்பக் குழியைச் சுற்றிலும் வாய்வு நிற்றலால் உண்டவுணவு செரியாது பொருமலும் ஏப்பமும் உண்டாகும் ஓர் நோய், a variety of sterlity marked by belching, gurgling, indigestion etc.

வாயு மானி, gasometre.

வாயு மேனி, பச்சைக்கல், green stone.

வாயும் வயிறுமாயிருத்தல், கர்ப்பிணியாயிருத்தல் to be pregnant.

வாயு ரூபம், வாயுமயம் aeriform.

வாயு ரோகம், வாத நோய் இது எண்பது வகை vatha disease they are eighty in number.

வாயுலர்தல் dryness of the mouth from the lack of normal secretion - Zerotomia.

வாயு வடுப்பு, gas furnace.

வாயு வாகம், புகை smoke.

வாயு வாகினி, நரம்பு nerve - Vein.

வாயு விப்புருதி, See வாயுக் கட்டி.

வாயு விருத்தி, aggravation of wind humour.

வாயு விளங்கம், ஓர் கடைச் சரக்கு மருந்து, இதற்கு வாய்விளங்கம் என்றும் பெயர்; இது பம்பாய், ராஜதானியிலும், வட இந்தியாவிலும் விளைகிறது, இதன் பழம் வாசனையாயும் ருசியாயுமிருக்கும். இதற்கு கிருமி நாசனி விரேசனகாரி குணமும் உண்டு. இதை அரைத்துத் தேள் கொட்டின விஷத்துக்கு உபயோகிக்கலாமென்பது சிலர் அபிப்பிராயம், பேதிக்குச் சாப்பிடுவதற்கு முன் இதை வெறும் வயிற்றில் சாப்பிட வயிற்றுப் பூச்சிகள் வெளிவரும். இப்பழத்திலிருக்கும் எம்பிலி (Embelic acid) சத்து இருப்பதால் இரு கிருமிகளைக் கொல்லும் குணமுடையது. Embelia ribs. It is an anthelmentic. Wind berry worm killer - a medicinal drug sold in the bazaar - Embelia ribes alias E.granduhfera. A large climbing shurb. The berries are smooth, round of the size of pepper with slight pungent taste; it is carminative, anthelmentic and stomachic.

வாயுவிற்குரிய, காற்றிற்குரிய atmospheric.

வாயுவின் கூறுபாடு தசவாயுக்களின் பிரிவுகளும், தன்மைகளும் the nature and division of the 10 kinds vital airs in the human body.

வாயுவின் கோபம் வாதம், aggravation of wind humour.

வாயுவுடல், கொள், horse gram - Vatha body.

வாயுவென்ற காற்று, இதனால் வெள்ளை விழும்போது குறியில் கடுத்தலுண்டாகும். மேலும் தாகம், உடம்பு உஷ்ணம், இளைப்பு இவைகளைத் தணித்துக் குணமாக்கும். the air or vayr causes scalding pain in the penis when there is white discharge. It helps to cure thirst, bodily heat and fatigue.

வாயு வேற்றம், an upward coursing of the vayu from the abdomen.

வாயுவைக் கண்டித்தல், வாயுவைப் போக்கல், sub - duing vayu.

வாயூது சூலை, blast furnace.

வாயூறச் செய்தல், மருந்தினால் வாயில் நீரூறும்படி செய்தல், to produce an usual secretion and discharge of saliva in a person by using medicine,.

வாயூறல், வாயில் பித்த நீர் சுரத்தல், secretion of fluid in the mouth; 2. வாய் நீர், saliva.

வாயூறல் தடுக்கு மருந்து, an agent that checks the secretion of saliva - Anti-sialic.

வாயூற்று, வாய் நீரூறல் secretion of saliva.

வாயைப் பிளத்தல், இறத்தல், gasping for breath as in dying.

வாயொடுங்கல், பேச்சடங்கல், ஓர் மரணக் குறி, a death symptom.

வாயோட்டல், பிளத்தல், raving.

வாய், வாய், mouth 2. உதடு lip.

வாய் உதட்டுப் புண் sore lip - Canker.

வாய் கசப்பு, பித்தத்தினால் வாயில் உண்டாகும் கசப்பு, bitterness of taste owing to bilious, disorders, fever etc.

வாய் கட்டல், பத்தியங்காத்தல் to be on diet; ''வாய் கட்டினால் பிள்ளை'' 2. இரச கற்பூரம் முதலிய மருந்தினால் வாய் வெந்து போதல், inflammation of the mouth due to mercurial poisioning; 3. வாயின் வழியாய் இறந்து போனவர்களுக்கு வாயைக் கட்டுதல், if the mouth remains opened after death a bandage is applied over the mandible closing it. 3. (in magic) வாய் திறவாதபடி செய்தல், by witchcraft the mouth is tied and cannot be opened.

வாய் கட்டி மூலி, குத்துப் பிடாரி, which see.

வாய் கறுத்தல், ''கைகால் பின்னும், வாய் கறுக்கும் கண்ணுஞ் சிவக்கும் வட்டமிடும்'' face near mouth becoming black as that of கருங்குரங்கு, (பரராச சேகரம்).

வாய் காய்தல், வாயுலர்தல் drying or parching of the mouth.

வாய்குவிந்த குப்பி, சிறு கழுத்துப்புட்டி, narrow necked bottle.

வாய்குவிந்த குப்பி, சிறு கழுத்துப்புட்டி, narrow necked bottle.

வாய்காலுக்குப் போதல், மலங்கழித்தல், going to ease nature.

வாய்க்கால் சடைச்சி, வாய்க்கால் வரப்பு முதலிய விடங்களில் முளையும் ஓர் வித சடைச்சி, an aquatic plant, grown in the edges of canals.

வாய்க் கிரந்தி, வாயிலுண்டாகும் புண், cancer of the mouth - appthae.

வாய் குமட்டல், nausea.

வாய்க்குழிப்புண் perforating, ulcer mouth.

வாய்க் குளரல், வாதத்திற் பித்தமாகில் வாயது குளறிப் போகும் blabber incoherancy of speech through delirium.

வாயக் குளறல், பாரிச வாயுனாலாவது அண்ணத்தின் வியாதியிலானாவது ஏற்படும் பேச்சுக் குளறல் impaired or lost articulation from paralysis of the part of from local laryngeal disease; 2. பேச்சுத் தடுமாறலாகிய ஓர் மரணக்குறி, a death symptom accompanied by confused speech.

வாய்க்கெட்டியது கைக்கெட்டாமை, living hand to mouth.

வாய்க் கொப்பளித்தல், வாயில் நீரூற்றிக் கொப்பளித்தல், gargling with water or medicinal liquid.

வாய்ச் சன்னி, முகசன்னி paralysis of the face.

வாய் சுருங்கல் contraction of the lumen of a cannel.

வாய் சுருங்கிய பாத்திரம் a vessel with small mouth.

வாய்ச் சூலை, இரச மருந்தினால் ஏற்பட்ட வாய் பிடிப்பு, இரச வேக்காடு inflammation of the mouth by mercurial poisoning.

வாய் ஞானம் பேசல், அனுபவமில்லாத ஞானவார்த்தை tall talk without experience.

வாயத் திட்டம் வாயளவு, upto the mouth.

வாய் திறந்த காயம், open wound.

வாய் தித்திப்பு, சிலேட்டுமத் தொழிலினால் வாய் நீரூறலில் ஏற்படும் இனிப்புச் சுவை, sweetness of the mouth caused by phlegm humour,.

வாய்த்திரம், சாரணை a plant - Trianthema monogyna.

வாய் திறப்பு, உணவு நடை தூக்கம் ஆகியவிக் குற்றத்தினால் நரம்புகளை அனுசரித்து வாயை மூடாமல் திறந்தபடியே இருக்கச் செய்யுமோர் வாத நோய் a vatha disease marked by wide mouth which cannot be closed.

வாய் நாற்றம், foul breath - fetid breath.

வாய் நீரூறல் see வாயூறல், salivation - Ptyalism.

வாய் நீரூறல் தடுக்கு மருந்து medicine for excessive salivation - Antisialagogue.

வாய் நீரொழுகல், சொள்ளு வடிதல் secretion of salve or rheum.

வாய் நீரொழுக்கு in salivation.

வாய் நீரோட்டம், ஓர் நோய் a disease.

வாய் நீர், உமிழ் நீர் வாய்க்குள்ளூறும் சலம், saliva from the mouth.

வாய் நீர் (பரிபா) வெடியுப்புத் திராவகம், தலைப்பிண்ட செயநீர் nitric acid - pungent liquid extracted from the foetus of the first born.

வாய்நீர்க் குன்மம், a disease.

வாய்நீர்க் கோள தாபிதம், inflammation of Salivary glands; See வாய்ப் பிடிப்பு Angiosiolitis.

வாய் நீர்க் கோளம், Salivary glands.

வாய்நீர் சுரப்பு, இதற்கு வழுக்கைத் தேங்காயும் பனங்கற்கண்டும் காலையில் 2 நாள் சாப்பிடப் போம் supersecretion of Saliva - the remedy is given above which see.

வாய்ப்பரக் கூடம், பல் tooth.

வாய் பிடித்தல், இரச மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்தலால் ஈறு வீங்கி இரணமாகி உமிழ் நீர் அதிகமாய் வடிந்து வாயில் நாற்ற முண்டாகி திறக்க வொட்டாதபடி செய்தல், swelling of the gums and inflammation of the mouth due to mercurial poisoning; it accompanied by excessive salivation and inability to open the mouth, See வாய் வேகம்.

வாய் பிதற்றல் blabering as in delirium.

வாய் போத்திடுதல், மருந்துப் பாண்டத்தின் வாயை மூடுதல், closing the mouth of the container of the medicine.

வாய் பிடிக்கக் கொடுத்தல், conducting ptyalism as by giving mercurial preparations.

வாய்ப் பிடிப்பு, வாய் திறக்க வொட்டாதபடி கிட்டுதல், lock jaw; 2. மருந்தின் வேகத்தினால் வாய் வெந்து புண்ணாகி நீர் வடிந்து திறக்க வொட்டாமலிருத்தல் inflammation of the mouth caused by irrulent medicines or mercurial compounds - Mercurial ptyalism or stomatitis.

வாய்ப்பிடிப்பு நீக்கம், counteracing the activity of trismus.

வாய்ப் பிதற்றல்.

வாய்ப் புண் வாய்க்கிரந்தி அல்லது கொப்புளம், a disease thrush or aphthac; 2. யோனிவாய்ப் புண் sore vagina.

வாய்ப்புண் நாற்றம், foul smell emitted from the inflammed or ulcerated mouth.

வாய்ப்புற்று, cancer mouth.

வாய்ப்பூட்டு, lock jaw - a condition of tetanic spasm of the jaw muscles causing them to be rigidly closed.

வாய்ப் பேச்சு, speech.

வாய் மூச்சு, mouth breathing.

வாய் மூலம், fleshy growth in the mouth impairing the faculty of taste and speech, giving rise to other diseases of the mouth.

வாய் வடர்தல் (வாய்வு + அடர்தல்) வாதம் அதிகப் படல், increase of wind humour.

வாய் வயிறு கட்டல், பத்தியமாக விருத்தல், to keep on diet.

வாய்வழி மூச்சு, வாய் வழியாக விடுமூச்சு, breathing through mouth; 2. வாயை அனுசரித்த நோய்கள், diseases of the mouth.

வாய் வறட்சி, வாய் வறட்டல் parching of the mouth - Xerostomia.

வாய்வாதம், வாய் கடுத்து அழகுகிட்டி வியர்த்துப் பேசக் கூடாதிருக்கும் நிலைமை, a diseases causing lock jaw and perspiration.

வாய் வாதம் பேசல், வாதமுறை தெரியாமலே பொய்யாக வாதம் செய்வதாகச் சொல்லிப் பிதற்றல் an impostor bragging he knows alchemy.

வாய் விடல், கொட்டாவி விடல் yawning.

வாய் விடாப் புண், chronic ulcer of the mouth.

வாய் விரண நீர், வாய் விரணத்தினால் ஒழுகும் நீர், Salivation due to inflammation of the mouth.

வாய் விரணம், வாய் வெந்து புண்ணாதல், inflammation of the mouth; cancrum oris; 2. யோனிவாய் விரணம், ulcer vagina 3. ஆசனவாய் விரணம், ulcer anus.

வாய் விரணம் ஆற்றும் நீர் வாய் கொப்பளிக்கு மருந்து நீர், decoction of some astringents for gorgling in stomatitis, ulcer, mouth etc - gorgle. See வாய் வேகம்.

வாய் விலங்கம்,
வாய்விளங்கம் ஓர் கடைச் சரக்கு, வாயு விளங்கம்; பாண்டு, குட்டம், குன்மம், அதிதூலம், பாம்பு விஷம், தாவர விஷம், பகந்தரம் போம்; see வாயு விளங்கம்.

வாய் விழு ரத்தம், வாய் வழியாக இரத்தம் விழுதல், hematemesis; haemoptysis.

வாய்வு, கந்தபாஷாணம் a kind of arsenic.

வாய்வு கட்டி, see வாயு கட்டி.

வாய்வுக் கிராணி see வாயுக்கிராணி.

வாய்வுக்குத்து see வாதகுத்து.

வாய்வுத் தம்பம் வாயு வைத்தல் an art.

வாய்வு திரட்சி see வாயு திரட்சி.

வாய்வு மலடு, கருக்குழியில் வாயு அதிகரித்து போகத்தில் விருப்ப மிகுந்து; உடம்பு வலி, இடுப்பு நோய்; கழிச்சல் முதலிய குணங்களைக் காட்டுமோர் நோய் a variety of sterlity marked by excessive passion, pain in the waist, diarrhoea etc.

வாய்வு ரோகம், see வாயு ரோகம்.

வாய்வுள்ள வாயு சேட்டையுள்ள windy.

வாய்வு லயம்.

வாய் வேகம், இரச மருந்தினால் பற்களின் அடியில் வெந்து விரணமாகுதல். 'களிகடு, கருவேல், கருநெல்லி, நாவல், வலிதீ பெரிநீர் வைத்திடு, கொப்புளி வாய் வேகமதுவிடும்' see வாய் பிடிப்பு.

வாய் வேக்காடு, கோழி முட்டை உடைத்து ஏழு நாளைக்கு அப்படியே குடிக்கப் போம், stamatitis; remedy is given above.

வாய் வேக்காளம், வாய் வேக்காடு which see.

வாரகம், நிலப்பனை ground palm - Curculigo orchioides.

வார கசியம் see கொட்டைக் கிழங்கு

வாரகி, see சமுத்திராப் பழம்.

வாரங்கம், பறவைப் பொது, bird in general.

வாரடகம், தாமரைக் காய், heart.

வாரடை.

வாரடி, பலகரை cowry.

வாரடித்தல், கம்பியாக நீட்டுதல்; வாரடித்துப் புடம் போடுதல் (போகர் 7000) to draw as wire.

வாரணக் கோடு, யானைக் கொம்பு tusk of an elephant.

வாரணங்கரிச்சி,
வாரணங்கிரிச்சி கப்பொட்டி, which see.

வாரணங் கொய்தல் கோழி பலியிடல், sacrificing fowl.

வாரணத் தண்டம் கோழிமுட்டை fowl egg.

வாரண புசை see வாரபுசை.

வாரண மாகிகம் மூவிலைக் குருத்து which see.

வாரண முட்டை, கோழி முட்டை fowl egg.

வாரணம், ஊமத்தம் dhatura; 2. கோழி fowl; 3. யானை elephant; 4. கடல், sea; 5. மாவிலங்கு a sacred tree - Garlic piar - Crataeva Roxburghii, 6. பன்றி, hog; 7. சங்கு, conch; 8. இலவங்கப்பட்டை, cinnamon bark.

வாரண வல்லமை, வாழை plantain tree.

வாரத்தண்டு, கறிமுள்ளி a thorny shrub - Solamum jacquini.

வாரத்தளகு see கறிமுல்லை.

வாரத்தி, வாத நாராயணன், a tree - Delonix elata.

வார நாள், நாள் a day of the weak.

வாரபிசம், வெளித்தாமரை which see.

வார மூலி, வாரத்திற் கொருமுறை பசியைத் தீர்ப்பதற்காக வேண்டி சித்தர்கள் சாப்பிடும் மூலிகை, a medicinal drug taken by Siddhars once a weak to appease their hunger.

வாரம், கடல் sea; 2. யானை, elephant.

வாரயம், பிரமி a prostate plant - Gratiola moniera.

வார வாணி, see விறலி.

வாரள மதாடி, வெள்ளுமத்தை white dhatura. Dhatura bearing white flowers - Dhatura alba.

வாராகி, ஓர் கிழங்கு, a tuber; 2. பெண் பன்றி, female pig.

வாவாரி, உட்காதிலுள்ள ஓர் குழி, vestibule; 2. கடல் sea; 3. நீர் water.

வாரிகம், தாமரை lotus.

வாரிகிருமி, அட்டை centipede.

வாரிகேசம், வெட்டி வேர் khus - khus - Vetiveria zizanioides alias Andropogon muricatus.

வாரிக்காய்ச்சல், கோதாரிக் காய்ச்சல், an epidemic fever - influenza.

வாரிக்கொண்டு போதல், கொள்ளை நோயால் இறத்தல், to be carried away in pestilence.

வாரிசம், உப்பு salt; 2. சங்கு conch; 3. தாமரை lotus.

வாரி சரம், மீன் fish.

வாரி சாகர ரசம், சிலேட்டும பித்த விசர்ப்பிக்கும் கொடுக்கும் ஆயுர்வேத மருந்து an Ayurvedic medicine given itch caused by bile and phlegm humours.

வாரி சாதம், தாமரைப் பூ lotus flower.

வாரிசா மரம், நீர்ப்பாசி one of the 32 kinds of prepared arsenic.

வாரிசை, செந்நாய் a ferocious dog.

வாரி சோளி, சூரிய காந்தகல் sun stone.

வாரிச்சோகி வித்து, see சமுத்திர ரோகிவிரை.

வாரிட்சவம், தேங்காய் cocoanut.

வாரிதி, அமுரி urine.

வாரிதித் தண்டு பவளம் coral.

வாரிதி நஞ்சு, கடல் நுரை bone of cuttle fish.

வாரிதி நாதம், சங்கு conch; 2. கல்லுப்பு, rock salt.

வாரிதி விந்து see வாரிதி நஞ்சு.

வாரித்திரம், சாதகப் புல் bird - sky lark.

வாரிபாணி வள்ளைக் கீரை a variety of greens - Convolvulus ripens.

வாரிப்பிரசாதனி,
வாரியகரசாதன் தேற்றா a small tree clearing nut tree - Strychnos potatorum.

வாரிப் போதல், கொள்ளை நோயில் சாதல், to die in epidemic diseases such as cholea, plague etc.

வாரியம், வங்கமலை mountain containing lead ore.

வாரியுற்பவம் தாமரை aquatic plant - lotus.

வாரிரசிதம், வெள்ளி மணல் sand or ore containing silver.

வாரீசம், கடல் தாமரை sea lotus.

வாரு, திரளாய் சனங்கள் பெருவாரியில் சாதல், to sweep off or remove people in large numbers out of the world.

வாருகம், ஆற்றுத்தும்மட்டி a creeper - Citrullus colocynthis; 2. வெள்ளரி a creeper; cucumber - Cucumis sativus.

வாருக் கதிரோன், ஆகாச கருடன் a twiner sky root - Bryonia epigea.

வாருசி, மொச்சை field bean - Dolichos lab lab (varypicus)

வாருணாம், மாவிலங்கு a sacred tree-garlic pear - Crataeva Roxburghii; 2. நீர் water; 3. the nervous of the sacral plexus ramifying over the lower trunk of the limbs.

வாருணி ஆட்டாங்கொடி, Twisting milk hedge - Euphorbia tortilis; 2. கள், toddy; 3. பம்பந்திராய் which see.

வாருணி, a kind of wine taken for digestions; wine prepared from the juice of palms.

வாருண்டகம்,
வாருண்டம் என் காற்புள் spider; 2. கண் பீளை Rheum of the eye; 3. குறும்பி Rheum of the ear.

வாருதி, நவசாரம் sal ammoniac.

வாருதிக் கெங்கை, கெண்டகச் சிலை a sacred stone found in Gandaha river.

வாருதித் தண்டு பவளம் coral.

வாருதி நாதம் சங்கு conch.

வாருதிப்பாசி, கடற்பாசி sea weeds - Gracilaris confervoides.

வாருதியோரக் குடிச்சி, சாதிக்காய் rutmeg - Myristica fragrans.

வாருதி விந்து, கடல் நுரை bone of cuttle fish.

வாருவகை, தண்ணீர் water.

வாருளம், இலவங்கப் பூ clove.

வாரூணி, அகத்தியன் Saint Agastya.

வாரெண்ணெயா யெடுத்தல்

வாரை, ஆவிரை senna shrub; Cassia auriculata; 2. காய் காத்துவாரை கடம்பு, குளம்புளன். (தேரை - 1001)

வார், சாறு juice; 2. சாராயம் arrack 3. நீர் water.

வார்க்குதல், உலோகம் முதலியவற்றை யுருக்கிச் சாய்த்தல், to cast in mould.

வார் சிகி, மல்லிகை a climber - Jasminum sambac.

வார் தேவி, வட்டத் திருப்பி a twiner.

விட நோய், பிராணாபாயத்தைத் தருவதான ஓர் நோய், deadly disease; disease due to poisoning — Toxonosis.

விடந் திருப்பி, மாற்று மருந்து, antidote, an agent preventing or counter acting the action of a poison.

விடந் தீஞ்சான், see நின்றுவிடந் தீஞ்சான்.

விஷந் தீஞ்சான் மூலி, நஞ்சறுப்பான், a twiner — Tylophoxa indica.

விடந் தீண்டல், விஷந் தீண்டல், விஷசெந்துகள் கடித்தல், bites of poisonous creatures.

விடந் தீண்டி, நாகப்பாம்பு, cobra.

விஷந் தீய்ஞ்சான், see கொல்லைப்பல்லி, a plant.

விஷபகா, அதிவிடயம், a plant — Indian attee — Aconitum heterophyllum.

விடபக்க கடிவானம், fourchette — Froenum labiorum.

விடபக் கடிவாளம், யோனி உதடுகளின் கீழ் முடிவுகள் பொருந்துகின்ற இடமாகிய விடபத்தின் ஓரம். the edge of the prenium which units the labia pudenda at their lower extremities — Froenum.

விடபக்கிழிவு, laceration of perineum.

விஷப சத்திரம், பூவாமாமரம், tree that has no flowers.

விஷபட்சணி, வேம்பு, neem tree — Melia indica.

விடப தோயம், bidet.

விஷ பத்திரம், எட்டியிலை, leaf of nux - vomica tree.

விடபம், தளிர், tender leaf; 2. யோனியின் பேரிதழ் கீழ்சவ்வு மடிப்பு, Fourchette, the fold of the mucus membrane at the end of labia majora; 23. சகனங்கள் இரண்டிற்கும் இடையில் அபானத்திற்கு முன்னாகவும் சின்ன வுறுப்புகளுக்குப் பின்னாகவும் இருக்கிற முக்கோணவிடமாகும். perineum (in females). 2. சாதாரண சவ்வின் பகுதியாய் யோனி உதடுகள் முடியும் இடத்துக்கும்

அபான வாயிலுக்கும் மத்தியில் தோலாலாகிய $1^1/_2$ அங்குலம் இடம், a portion of the common integuments about $1^1/_2$ inches in length intervening between the termination of the labia and the anus.

விஷ பாகம், ஒரு பக்கம் வீங்கி வடிந்து உடம்பு வறண்டு, வெளுப்பேறி, தலைகனத்து உணவு செல்லாது, வாய்வு உடலில் ஏறி விடம் போல் வீங்கிக் கொல்லும் ஓர் நோய், a disease causing anasarca and paleness.

விஷபி, ஓர் மரம், a tree; 2. மரம் பொது tree in general.

விஷ புஷ்பம், மருங்காரை, a plant — Randia dumetorum; 2. புங்கம்பூ, the flower of the tree Dalbergia arborea; 3. தொட்டாற் சுருங்கி, a sensitive plant; touch me not — Mimosa pudica; 4. காட்டுமிளகு, wild pepper.

விஷ பேதி, வாந்திபேதி, cholera.

விஷபேதி திராவகம், acid liquid given to cure cholera.

விஷப்படை, விஷத்தினா லேற்பட்ட படை, any skin disease due to a poison — Toxicoderma.

விஷப் பட்சணம், விஷத்தைச் சாப்பிடல், taking poison — விஷ உணவு — poisoned food; poisoned eatable.

விடப்பதி, ஆடு தீண்டாப்பாளை, an ash coloured bitter prostate plant — Aristolochia bracteata.

விஷப்பரு, septic pimple.

விஷப் பனி, mil dew.

விடப் பாகம், a sudden swelling of the body; 2. பெருந்துளசி, a kind of basil.

விஷப் பாகல்,

விஷப் பாண்டு, உடம்பும் நகமும் இரத்தம் முறிந்து வெளுத்து சுரம் அதிசாரம் முதலிய குணங்களை யுண்டாக்கு மோர் வகைப்பாண்டு, dropsy.

விஷப் பாண்டு சூலை, உடம்பில் ஒரு பக்கம் வீங்கி உளைந்து கடுப்பெடுத்து கண்வெளுத்து தாகம் மிகுந்து சோம்பலும் பெருமூச்சும் உண்டாகும் ஓர் வகைப் பாண்டு சூலை, a kind of Rheumatism.

விஷப் பாம்புவகை, Venemous snakes collectively — Venenosa; 2. deadly sarpents collectively — Toxicophidia.

விடப்பாலை, விஷப்பாலை, ஓர் கொடி, a creeper.

விஷப்பால், வெள்ளிலோத்திரம், வெண்டாமரை, நாபி, சேங்கொட்டை, எட்டி இவைகளின் பால், the juice of the above drugs which see.

விஷப்பிசின், மருவு, தொடரிப்பட்டை, ஆயில் பட்டையாகிய இவைகளின் பிசின், resin of the above drugs which see.

விஷப்பித்த காசம், வளர்பிறை தோறும் பித்தம் அதிகரித்து நுரைத்து பொங்கி, கபமுண்டாகி நினைவு தெரியாமல் அலுப்புடன் சுரங்கண்டு தொண்டை நெஞ்சு புண்போல் நொந்து அன்னம் செல்லாது வருந்தும் ஓர் காச நோய், a kind of asthma coming on during every full moon attended with fever, fatigue inflammation of the throat etc.

விஷ பித்த சூலை, இருவிழி, உதடு, நாக்கு பல் கறுத்து உடம்பு வீங்கி பொருத்துகள் உளைந்து நொந்து மோது கட்டுதல், a kind of rheumatism attended with stiffness of joints.

விஷப் பிரதிவிஷம், விஷத்தை மாற்று மருந்து, antidote.

விஷப் பூடு, அங்கப்பிச்சு, which see.

விஷப் பூரை, see விடத்தேர்.

விஷப் பூலா, சதுரகிரியில் உள்ள ஓர் விஷமரம், a plant growing in Sathuragiri hills.

விஷப்பை, venom duct.

விஷப் போதம், பல்லி, lizard.

விஷமக் கிரியை, dissimilar or contrary to action.

விஷமக் கினி, perverted appetite.

விஷம சாதனி, பீதரோகணி, which see.

விஷமச்சுர நாசனி, பேராமல்லி, a species of Jasmine — Jasminum undulatum.

விஷமச் சுரம், பிராணனுக்கு அபாயத்தை யுண்டு பண்ணும் சுரம், malignant fever such as Typhoid etc.

நெடுநாளாக சுரமானது உள்ளுக்குள்ளே யிருந்து விஷமித்து ஒவ்வொரு தாதுக்களையும் பற்றி பலவித சுரங்களாக மாறும்.

இச்சுரம் உடையவன் உடம்பில் வாட்டம், பாரம், மெலிவு காண்பதால் சுரம் அவனை ஒருபொழுதும் விடுகிறதில்லை. இச்சுரம் இரசாதி தாதுக்களில் மறைந்து இருப்பதாலும், சூக்கும் தன்மையை யடைவதாலும் உட்சுரமாயிருந்து கொண்டு வெளி காட்டுவதில்லை.

எந்த சுரம் நியத காலத்தில் வராமலும், சீதளம் உஷ்ணம் இவைகள் நியதியில்லாமலும் சுரத்தின் வேகம் சமமில்லாமலும் இருக்கிறதோ அது விஷம சுரம்; a per charaka samhita; தேவர், பூதம், கிரகம் இவைகள் சம்பந்தத்தினால் உண்டாகிறதென்றும் சிலர் கொள்கை, It never finds complete remission but lurks in the deeper organic principles of the body and to produces physical langour heaviness of the limbs and emaciation. Even a small residue of the deranged bodily dosha lurking in the system after apparent cure of fever is aggravated by a course of injudicious conduct and indifference of strict regime of diet invites a fresh attack known by this name.

Several authorities include cases of fever due to the malignant influence of evil spirits within this category.

விஷமஞ்சி.

விஷ மணி, மணிக்குடல், small intestines.

விஷமண்டலம், crinum, asiaticum.

விஷம தாது விருத்தி, metaplasia i.e Chondroma growing from the salivary glands or testes.

விஷம தாரி, see சங்கங் குப்பி; see விஷதாரி.

விஷமதிலாதி, நாகப்பாம்பு cobra.

விஷம பித்தம், Toxic — vertigo.

விஷம மூர்தம், தலைச்சன் குழந்தை தலையோட்டினின்று செய்யும் அண்டச் சுண்ணம், calcined powder of cranial bones of the first born.

விஷம மேதாச்சம், குமதை, which see.

விஷமம், ஒழுங்கற்றது, irregular.

விஷமயித்தி, சண்பகம், a fragrant flower — champaca.

விஷ மரக்கனி, எட்டிப்பழம், fruit of nuxvomica — Strychnos nux-vomica.

விஷமரம், எட்டி மரம், a tree yielding poisonous fruit — Strychnos nux-vomica.

விஷ மருது,

விஷ மல்லிகா, நாகமல்லிகை, which see.

விடமாக் கினி, ஒரு சமயம் பசியும் மற்ற காலத்தில் பசியின்மையுமாக விருத்தலாகிய குணத்தை யுடைய நோய், a disease causing appite rarely.

விஷமாசனம், அசிரண போசனம், காலம், அளவு இவைகளுக்கு ஏற்றக்குறைவாயுள்ள வுணவு, indigestable food. which is also in compatible.

விஷமாதல், becoming poisonous or venomous.

விஷ மாந்தகணம், குழந்தைகட்கு வயிறிரைந்து தாயின் கையில் தரிக்காமல் அழுது மயக்கத்தை யுண்டாக்குமோர் வகைக் கணை, a disease in children caused by congenital heat marked byn gurgling in the abdomen, crying and swooning.

விஷமாந்தம், குழந்தைகட்கு மலம் சிக்கி வயிறு வலித்து நின்று சுரங்காய்ந்து உடம்பு வாட்டமடையும் ஓர் வகை நோய்; குழந்தைகளுக்கு காணும் ஓர் அஜீரணபேதி, diarrhoea in children due to indigestion.

விஷமி, விஷமாகச் செய்தல், turning into poison; 2. see வழுதலை.

விஷமிடல், to administer poison.

விஷமித்தல், விஷம் அதிகரித்தல், increasing in poisonous effects.

விஷமித்தவன், பத்தியக் கேடானவன், a patient whose regimen and medicine do not agree.

விஷ மிறக்கல், விஷத்தைப் போக்கல், to dispel poison — Counter acting the effects of poison. The manthras full of occult energy never fail to eliminate the poison from the system and hold their owneven in cases of deadlist poisons.

விஷ மீட்டி, விஷ முட்டி, எட்டி, a tree — Strychnos nux-vomica.

விட மீனம், a tree; see பிராய் முட்டி.

விஷ முட்டிகம், விஷ முட்டிகா, பெருவேம்பு, large species of margosa tree.

விஷ முட்டித் தைலம், medicated oil with nux-vomica fruit as chief ingredient.

விஷ முண்டோன், துருசி, blue vitriol — Copper sulphate.

விஷமுள்ள, கேடுள்ள, noxious; venemous.

விஷ முறி, விஷமாற்று, antidote.

விஷ முறித்தல், to counter act the poison.

விஷ மூங்கிலிலை, leaf of விஷமூங்கில், which see.

விஷ மூங்கில், ஓர் செடி, asiatic poison bulb — poison lily — crinum asiaticum. See நரி, வெங்காயம்.

விஷ மூங்கிற் கிழங்கு, bulb of விஷ மூங்கில், crinum asiaticum.

விஷ மூலகம், விடப்பாலை, which see.

விஷ மூலம், poisonous roots — Aconite, plumbago, plough root Seven minor poisons are: *1.* கஞ்சா ganja; 2. குன்றிப்பருப்பு, (seeds of abrus); *3.* ஊமத்தை, (Dhatura); *4.* சரவீரம், root of Nerium odorum; *5.* எருக்கம்பால், (milk of calotropis) *6.* இலாங்குலி, plough root; *7.* தாதுவிஷம், mineral poison.

விஷ மூலம், Meelacanna rheedi.

விஷ மூலி, கீரிப்பிள்ளை, an animal — Mungoose.

விஷமூலியிலை.

விஷ மேறல், உடம்பில் விஷம் பரவுதல், diffusion of the poison through the body e.g. விஷமேற செம்பு பழுக்கும் 'காறுமேறுதல்'.

விஷம், மூலிகைகளின் உள் விஷம், the drugs whose inner core is poisonous; கடுக்காய், தான்றிக்காய், சித்திரமூலம், சிவதை, which see வெளி விஷம், the drugs whose outer core is poisonous, பெருவாகை, பெருங்குமிழ், பாதிரி, கூவிளை, முன்னை, உள்ளி, சுக்கு, சதாவேரி, சிந்தில், which see.

The different kinds of vegetable poisons are; root poison, leaf poison, flower poison, fruit poison. bark poison, pith poison, gum poison, milk poison.

. A poison aggravates the bodily vayu, and vitiates; the blood and also the Pitha through its heat generating property. It over whelms the mind, produces unconsciousness, and tends to disintegrate the limbs and muscles and penetrates into and deranges the minutest capillaries owing to its extreme suitable essence.

It proves speedily fatal by spreading through the entire organism on account of its rapid permeating and expansing quality. It annihilates the root principles (Dadhus) as well as humours (doshas) and excreta of the body. It baffles the effecacies of other drugs and becomes unremediable on account of its extreme lightness of its polency. It cannot be easily assimilated owing to its innate undigestibility.

All the violent, sharp qualities are present in poison which aggravates and deranges all the doshas of the body. It stops the power of ionhaling and expiration, which becomes imppossible owing to the internal passage being choked up, hence unconsciousness.

விஷம், நஞ்சு, poison; 2. தேள், scorpion; 3. மலை, mountain; 4. அதிவிடயம், Indian attee — Aconitum heterophyllum; 5. காய்ச்சுப்பு, a kind of poisonous salt; 6. தாமரை நூல். lotus fibres certain authorities over that the inner or membraneous fibres of a lotus stem is called 'Visha' and not the bulbs of lotus plants; 7. நஞ்சு நீர், any poisonous fluid; 8. பாஷாணம், arsenic.

Note:- A poison is a substance which when applied to the body externally jor introduced in any way into the body is capable of destroying life without acting mechanically but by its own inherent properties. It Consists of different kinds Acrid (arsenic) Narcotic (opium) Neurolic (dhature, aconite). Poison can never be digested or assimilated in the system and so it aggravates and deranges all the doshas (humours) in the body.

விஷம் திரும்பல், விஷமிறக்கல். dispelling poison through medicine or by magic.

விடம் போக்கி, கருங்குருவை நெல், a kind of black paddy; 2. விஷத்தை முறிக்கு மருந்து, antidote.

விடம் போக்கிக் கஞ்சி, கருங்குருவை யரிசிக் கஞ்சி, gruel of the rice கருங்குருவை, rice of black paddy.

விஷம் போக்கு, விஷமகற்று, to dispel poison.

விடயங்கள், பெண் போகம், sexual intercourse.

விடய மிடல், to give poison.

விஷயமிட்டுச் சோதித்தல், as in தொத்து நோயெல்லாம் விஷயமிட்டுச் சோதித்தல்; விசாரணை செய்து சோதித்தல், investigation by enquiry.

விடயம், அதிவிடயம், Indian attee — Aconitum heterophyllum; 2. வெள்ளைப் பாஷாணம், white arsenic.

விஷயவாஞ்சை, சிற்றின்பப் போகம், sensuality (sexual enjoyment).

விஷயிலை, எட்டியிலை, பெருமரத்திலை, ஆகிய இலைகளாம், leaves nux-vomica and பெருமரம், which see.

விடரவன், பூனை, cat.

விடராசன், கெருடக்கல்; கெருடப்பச்சை, which see; a stone used as an antidote to snake poison; 2. வெள்ளைப் பாஷாணம், white arsenic.

விடரு, அதிவிடயம், drug; Indian attee — Aconitum heterophyllum.

விடருகம், sdee விடரவன்.

விடரொளி, கற்பூரம், camphor.

விடரோகம், கொடிய ரோகம், virulent disease.

விடலம், உள்ளி, onion — Allium cepa.

விடலாங்குலி, கலப்பைக் கிழங்கு, plough root; the tuber of November flower plant — Gloriossa superba. See இலாங்கலிகம்.

விடலி, மலடி, a barren woman; 2. பூப்புதாரி. a menses woman.

விடலைச் சேவல், விடைச்சேவல், cockerel.

விஷ வரசன், ஆடுதின்னாப்பாளை, an ash colour very bitter prostate plant — Aristolochia bracteata.

விஷ வல்லி, கீழ்க்காய் நெல்லி, a plant — Phyllanthus niruri.

விஷவாத கரப்பன், ஓர் வகைக் கரப்பன் நோய், குழந்தைகளுக்கு கைகால் வயிறு வீங்கி, வறண்டு வெடித்து புண்ணாகி உடல் வெதும்பி உளையும் ஓர் நோய், an eczema in children.

விஷவாத நாசனி, பழுபாகல், small carilla fruit — Momordica charantia.

விஷ வாயு, (lit) poisonous gas; 2. Virus disease as yellow fever etc.

விட விடெனல், குளிர், அச்சம் முதலியவற்றாலேற்படும் நடுக்கம், shivering with cold; (trembling).

விஷ வேகாக்கினி, இசங்கு, thorny shrub — Azima teracantha.

விஷவேகி, தொட்டி பாஷாணம், a kind of arsenic.

விஷவேர், மராமரம், மருதோன்றி; பெருங்காயமரம் ஆகிய இவைகளின், வேர், roots of the plants mentioned above which see.

விடாக் கழிச்சல், ஓயாமற் கழிதல், chronic diarrhoea.

விடாக் காய்ச்சல், இடைவிடாமற் காய்தல், or சுரமடித்தல், continued fever.

விஷாக் கினி, see விஷக்கினி.

விஷாக் கினி நாசம், பேராமுட்டி, a plant — Pavonia odorata.

விடாச்சுரமுள்ள, தினக்காய்ச்சலுள்ள, hectic fever.

விடாச் சுரம், see விடாக் காய்ச்சல்.

விடாச் சூடு, விடாத சூடு, continuous heat.

விடாதரைத்தல், கையோயாமல் அரைத்தல், this is done when grinding medicines in mortar so as not to lessen the heat generated from friction.

விடாணி, எருது, bull.

விஷாணி, களா விழுதி, which see.

விஷாணிதம், விஷாணிதா, சிரகாகோளி, a medicinal shrub.

விடாதாலி மூலி, யானை நெருஞ்சில், a large species of shrub — Pedalium murex.

விடா தெழுத்து, விட்டெழுத்து, which see.

விடா நோய், தீராத நோய், chronic disease.

விடா பேதி, chronic diarrhoea.

விடாயாற்றி, சோர்வை நீக்கல், to refresh; 2. களையாறல், to repose.

விடாயுகம், பாம்பு, snake.

விடாய், தாகம், thirst; 2. சோர்வு, fatigue; 3. ஆயாசம், faintness; 4. விடாய்த்தல், growing thirsty.

விடாய்க் காலம், வெயிற்காலம்; summer; 2. உஷ்ண காலம், hot season.

விடாய் தீர்தல், களைப்பு வாங்கல், to be free from fatigue; taking rest.

விடாய்த்து விழல், தாகத்தினால் களைபட்டு விழல், falling down from thirst.

விடாய்ப்பு, தாகமுறல், feeling thirsty.

விடா ரகம், விடாரகன், பூனை, cat.

விடா ரூடம், This branch of science dealing with the nature of poisons, their physical and chemical properties, their physiological pathological and chemical actions on the body and their effects on the living organism and tissues and also the method of treating effects caused by them; Indian Toxicology.

விடாலகம், பூனை, cat; 2. பொன்னரிதாரம், yellow orpiment.

விஷாலசகம்,

விடாலம், கண்மணி, pupil of the eye; 2. பூனை, cat.

விடா வியர்வை, continuous perspiration.

விடா விருமல், இடைவிடாத இருமல், இதற்கு ஆசனத்தில் விளக்கெண்ணைய் தடவியும் அரிசித் திப்பிலி தூளைப்புகைத்தும் அல்லது எட்டிக் கொட்டையை நெய்யில் கருகும்படி வறுத்துத் தூள் பண்ணி தேனில் குழைத்துச் சாப்பிடத்தீரும், Constant cough, certain remedies are given above which see.

விஷானி, சதுரக்கள்ளி, spurge — Euphorbia quadrangulata.

விடி, பலண்டுறுக பாஷாணம், a kind of arsenic.

விஷத்திலாங் கொழுந்து, ஓர் பூடு, Mimosa cinera.

விஷபோட்டி,

விஷத்திலாம், ஓர் பூடு, mint — Mentha crispa.

விடியு முன்னேபூத்த புட்பம், பூநீர், salt obtained from the efflorescence grown on the soil of the fuller's earth.

விடுங் காய்ச்சல், விட்டு விட்டு வரும் சுரம்; முறைக் காய்ச்சல், intermittent fever.

விடு சரம், ஊர்ப்பன்றி, pig.

விடுகஸ்தூரி,

விடுசுரம், See விடுங்காய்ச்சல்.

விடு தலம், See விடத்தலை,

விடுதிகளாய்ச் செய்தல், to separate from a mass.

விடுது, விழுது root of the banyan tree.

விடு வித்தல், மறுதரம் விடுவித்தாக்கால் பிறிந்தொரு வேதை தானும் பேர் சகஸ்த்திரத்திலோடும். (கொங் — வா — காவி)

விஷரசி ரோகம், வாந்தி பேதி, cholera.

விடை, எருது, bull; 2. கோழிப்பேடு, a young fowl; 3. குதிரை, horse; 4. வலிமை, strength.

விடை காலிரதனி, சங்கினிசாதியாகிய பெண் சாதி 4 வகையிலொன்று, one of the four classes of woman divided according to their lust.

விடைக் கந்தம், செம்மணத் தக்காளி, night shade bearing red berries — Solanum nigrum.

விடைக் கோழி, சிறு பெட்டைக்கோழி, a young chicken grown till it is left by the hen; 2. கன்னிக் கோழி, pullet.

விடைச் சாவல், விடைச்சேவல், விடலைச் சேவல். cokerl.

விடைதாரிகம், யானை மயக்கி, a plant.

விடைத் தாங்கி, ஓர் குருமூலி; which see.

விடையங்கள், see விடயங்கள்; 2. பெண் போகம், sexual intercourse.

விடையம், அதிவிடயம், a drug — Indian Attee — Aconitum heterophyllum.

விடையூர்தி, சிவகரந்தை, sweet basil — Sphoearanthus zeylanica.

விட்சவம், இருமல், cough.

விட்சி, ஓர் மரம்; a tree.

விட்சீரம், எருக்கு, madar plant — Calotropis gigantia.

விட்சே பசக்தி, projecting — sakthi.

விட்சேபணம், shooting as of pain.

விட்டகனை நெருஞ்சி, யானை நெருஞ்சில், big speies of நெருஞ்சில், which see.

விட்டகப் பூகம், காஞ்சிரை, a poisonous free — Strychonos nux - vomica.

விஷ்டம்ப கருப்பம், பெண்கள் பிரசவ காலத்தில் யோனியில் ஒரு காலும் குதத்தில் மற்றொரு காலும் மாட்டிக் கொண்டு அசைவற்று பிரசவம் காணாது தடைபட்டிருக்கும் ஓர் நிலைமை, an obstruction in the course of delivery caused by the first appearance of one leg from the vagina — Abnormal presentations.

விட்டம்பம், தம்பித்தல், to stand still.

விட்டரி, விட்டரு, அகத்தி, a tree — sesbania grandiflora.

விட்டவிடம், ஆகாயவெளி x தொட்டவிடம்; வாசி, etheric — sky.

விட்டாம், தருப்பை, sacrificial grass.

விட்டாற்றி, ஆறுதல், rest; 2. விசிராந்தி, repose.

விஷ்டி, விட்டி, கோழி, fowl; 2. மலங்கழித்தல், to evacuate the stomach.

விட்டிகா, இலண்டன் பருத்தி, a kind of cotton.

விட்டி தாட்டிக்காய், பெருந்தும்மட்டிக்காய், a large species of தும்மட்டி, which see.

விட்டித்தல், விஷ்டித்தல், ஓர் பறவை, a bird; 2. வெட்டுக்கிளி, grass hopper.

விட்டிலா, பிராய், which see.

விட்டில், ஓர் பறவை; வெட்டுக்கிளி, grass — hopper; 2. ஓர் பூடு, kokra laurel — Aporosa lindleyana; 3. பிராய், demon tree — Streblus asper.

விட்டுணு காந்தி, சுரத்திற்கு பயன்படும் ஓர் மருந்துப்பூடு; a medicinal plant for fevers — Evolvulus alsinoides.

விட்டுணு காந்தை, ஓர் கரந்தை, Sphoeranthus hirtus as opposed to சிவகரந்தை.

விட்டுணு கிராந்தி, See விஷ்ணு காந்தி; 2. மூங்கில், bamboo.

விட்டுணுக் காந்தி, இது தரையில் படரும் ஓர் வகைக் கொடிப் பூண்டு; புஷ்பம் வெண்மை, நீலநிறம்; இந்தியாவில் வறட்சியான பிரதேசங்கள்; பொட்டல்கள் மைதானங்கள் இவ்விடங்களில் காணலாம்; நீல புஷ்பம் பூப்பது சூரிய காந்தி என்றும் வழங்கப்படுகிறது. இப்பூண்டு சுரத்திற்கும் (Tonic) ஆகவும் வயிற்றிலுண்டாகும் அசீரணம் முதலிய கோளாறுகளைப் போக்கவும் உபயோகப்படும்; இதன் இலை, புஷ்பத்தோடு மிளகு சீரகம் சேர்த்துச் சுண்டைக்காய் அளவு சாப்பிட இரத்தப் பெருக்கைத் தடுக்கவும் ஞாபக சக்தி பலப்படுத்தவும் உபயோகப்படும். இதற்குத் துவர்ப்புக் குணம் உண்டு. நாள்பட்ட மார்ச்சளிக்குத் புகை பிடிக்க வுதவும், இதற்கு கபஹரகாரி கவேதகாரி செய்கைகளுண்டு, இதன் கஷாயத்தைச் சுரம், உட்சூடு சீதபேதி, கோழை, இருமல் சுரத்தால் பிறந்த கபம், வாதக்கடுப்பு முதலியவற்றிற்குக் கொடுக்கலாம். Evolvulus alsoinoidesd. It is a very useful drug for fevers; chronic fevers specially. It is an expectorant & diaphoretic.

விட்டுணு தருகழி, மூங்கில், bamboo.

விட்டுணு பரியம், துளசி, Sacred basil — Ocimum sanctum.

விட்டுணு மாயரசம், குரங்கு, monkey.

விட்டுணுமூலி,

விட்டெழுத்து +, விடாதெழுத்து.

விட்டை, விஷ்டை, இலத்தி, dung of horse, ass or elephant; 2. கட்டி, abscess; 3. திரளை, tumour.

விட்டோடல், விட்டோடிப் போதல், நீங்கல், being removed or cured as in disease.

விட்டு விட்டு காயும் சுரம், remittent fever.

விஷ்ணனுயிர், வசநாபி, aconitum ferox.

விஷ்ணு கரந்தை See விட்டுணு கரந்தை.

விஷ்ணு கருபுத்தம், சின்ன முள்ளங்கி,

விஷ்ணு காந்தன், goat's horn mangrove — Aegicaras majus.

விஷ்ணு சேனா, நிலப்பனை, a plant — Curculigo orchioides.

விஷ்ணு தந்தி, மூங்கில், bamboo.

விஷ்ணு திலகம், நந்தியா வட்டம், a plant; which see.

விஷ்ணு துளசி, திருத்துழாய், sacred plant — Ocimum sanctum.

விஷ்ணு பத்திரம், துளசி, a plant — Ocimum sanctum.

விஷ்ணு பரி, கொத்தான், a plant — Cassytha filiformis.

விஷ்ணு மனைவி, அரிதாரம், orpiment.

விஷ்ணு வேதை, விஷ்ணு மவதை, கருந்துளசி, black variety of Ocimum sanctum.

விஷ்ணுவின் பெண்டிர், அரிதாரம், orpiment.

விட்பனத்தின் பூ, சிவதுளசி.

விண், ஆகாயம், sky; 2. ஓர்வித புண்வலி; a kind of pain owing to formation of pus in an abscess or other sores; 3. வழலையுப்பு, salt prepared from fuller's earth; 4. இளமை, youthfulness.

விண்ணெல், சீழ் கோப்பதன்முன் கட்டியிலுண்டாகும் வலி, a pain that appears during the formation of pus in an abscess.

விண் செயநீர், வேகாதுப்பு செயநீர், a kind of pungent liquid preparation.

விண்ட பூ, மலர்ந்த பூ, well bloomed flower.

விண்ட பூரகம், மாதுளை, pomegranate tree — Punica granatum.

விண்டல், see விண்டில்.

விண்டில், மூங்கில், bamboo.

விண்டு, மூங்கில், bamboo; 2. தகரை, a plant — Cassia tora; 3 விஷ்ணு காந்தி, which see.

விண்டுகம், தாமரை, lotus.

விண்டுதம், தகரை, a plant — Cassia tora.

விண்டு தழை, ஆலிலை; leaf of Banyan tree.

விண்டு பத்திரம், துளசி, a sacred plant's leaf — Ocimum sanctum.

விண்ணல், காவட்டம் புல், a kind of grass — Andropogon nardus.

விண்ணா, கடுகுரோகணி, a drug; black hellebore — Helleborus niger.

விண்ணாகிப் புல், காவட்டம் புல்; see விண்ணல்.

விண்ணாங்கு, நாங்கில் மரம், a tree.

விண்ணாரகம், மாதுளை, pomegranate tree— Punica granatum.

விண்ணாரிகம், அப்பைக் கோவை, a climber, a variety of caper — Bryonia epigaea.

விண்ணாரோகணி, கடுகுரோகணி, a drug black hellibore — Helleborus niger.

விண்ணுகம், கறிமுள்ளி, a plant —Solanum indicum.

விண்ணுக்குள் மூர்த்தி, பொன்னாங்காணி, a medicinal prostate plant used for eye and stomach diseases — illecebrum sessile.

விண்ணெனத்தெறித்தல், குத்தல் நோயுடன் நரம்பு வலித்தல், an acute pain as in a boil where pus is being formed.

விண்பகம், செவ்வகத்தி, a tree — sesbania bearing red flowers — Sesbania grandiflora.

விண்பரி, விண் பல், மூங்கில், bamboo.

விண்மணி, சூரியகாந்தி, sunflower.

விண் மருந்து, இரசம், mercury.

விண் விண்ணெனல், கட்டி, புண், இவைகளில் சீழ் பிடிப்பதற்காக வுண்டாகும் வலி, acute pin, prick pain experienced when the pus in being formed in an abscess, or a sore is suppurating.

விதகம், அதிமதுரம், wild licorice.

விதப்பு, நடுக்கம், shivering.

விதம்பம், கற்பரி பாஷாணம்; பலண்டுறுக பாஷாணம், a kind of arsenic.

விதழி, கொன்றை, a tree — Cassia.

விதளித விரணம், கல்லடியினால் பிளக்கப்பட்ட விரணம், wound.

விதனங் காணுதல், to get grief.

விதன மந்தாரம், கண்ணைச் சுற்றிலும் சுறுக்கென்று குத்தலும் வலியும் கண்டு மேலிமை மேல் நோக்கி இழுத்து வலித்து தலை நடுக்கம் குளிர் சுரம் நாவறட்சி, தாகம் நீர் வடிதல் பீளை கட்டல், முதலிய குணங்களைக் காட்டுமோர் கண்ணோய், an eye disease marked by acute pain round the eye, fever, with shivering, thirst, tremor of the head, and pulling pain in the upper lid.

விதன முறல், to be grieved.

விதனம், வேதனை, grief.

விதனவி, கொன்றை, a tree — Cassia.

விதாகம, (வி+ தாகம்) ஓர் நோய், அதிக தாகம், a disease — thirst.

விதாகம், a sluggish digestion due to the production of acidity — imperfect digestion with burning sensation.

விதாக்கம், பஞ்சமயகோசம், (in Hindu Philosophy) the five cases supposed to invest the soul.

விதாட்சம், முந்திரை, which see.

விதாதிரி, திப்பிலி, a drug; long pepper — Piper longum.

விதாபம், வெப்பத்தாற் பிறந்த தாபம், distress or thirst due to excess of heat.

விதாரணம், வீக்கம், swelling; 2. கட்டி, abscess; 3. பிளப்பு, fissure.

விதாரம், ஓர் மரம், a tree.

விதாரி, புன்முருக்கு, a tree — Butea frondosa.

விதாரி, a disease in which a copper coloured swelling occurs in the throat. marked by pricking and burning sensation. The flesh of the throat

gets putrified and sloughs off emitting a foetid smell. It is of Pitha origin and is found to attack that side of the throat in which the patient is in the habit of lying.

விதாரி கந்தம், Hedysurum gungeticum. See சாலபரணி.

விதா கந்தாதி, group of drugs subduing vayu.

விதாரிகம், a round reddish swelling, rising either in the axillary or inguinal region in the shape of a gourd.

விதாரிகம், அக்குள், துடையிடுக்கு முதலிய விடங்களில் நிலப்பனைக் கிழங்கு போல் உண்டாகு மோர் வகைச் சிலந்தி, a hard elongated abscess or reddish swelling in the axilla or groin (bubo); 2. புன்முருக்கு, a tree — Butea frondosa.

விதாரிகை, See விதாரிகம்.

விதாரு, பல்லி, lizard.

விதாருகம், கருணைக் கிழங்கு, Yam.

விதான நரம்பு, மானசிக நரம்பு, pherinic nerve.

விதானம், சாரமின்மை, being without essence நெஞ்சறைக்கு மேல் வயிற்றிற்கும் இடையே கிடந்து அவைகளைப் பிரிக்கும் விசாலமான பேசிச்சவ்வு, muscular and tendinous partition separating thorax from abdomen in mammals. இது வட்டமாயும் சிறிது நீளமாயுமிருக்கும், Diaphragm. It was farmerly regarded as the seat of the soul and desires.

விதானிகம், கண்டமாலை, Scrofula glandular swellings round the neck, with tendency to consumption.

விதி, குணம், diaposition; 2. நறுவிலி, a tree — Cordia myxa; 3. தலைவிதி, fate.

விதி நூல், ஓர் தமிழ் வைத்திய நூல், a medical treatise.

விதி பிறந்த மதி, நாபி, navel; 2. நாபிக் கொடி, navel cord; 3. கருநாபி, aconite.

விதிபிறந்த விடையம், ஓர் வகை அதிவிடயம், a variety of Indian Attee.

விதி புட்பாசம், தேவதாளி, which see.

விதியறிவு கண்ணன், உடம்பினுள் ஞானக் கண், the eye of wisdom in the body.

விதிரவிலாசினி, மூங்கிற் குருத்து, shoot of bamboo.

விதிர்ப்பு, நடுக்கம், shivering.

விதிவசம், according to fate.

விதிவிலக்கு, விதி நீக்கப்பட்டது. exempted from the rules and regulations. In the cases of internal abscesses in the regions above the navel. the discharges in suppuration escape through the mouth, but below the navel escape through the rectum.

The first cast is invariably fatal and second hopeful. Commonly fatal symptoms are those attended with suppression of urine and when hiccups, vomiting, hard breathing supervene.

விது, கற்பூரம், camphor.

விதுகங்காய், அதளைக் கொடி, மிதுக்கங்காய், ஓர் பத்தியக்கறி, இதனால் புதிய இரத்தம் சுக்கில விருத்தியுண்டாம், பித்தம் பலவீனம் போம், a creeper — Luffa acutangula — Cucumis acutangula.

விதுக்கு, காமமுள்ள, lascivious.

விதுலிகம், பெருமுத்தக்காசு, a plant which see.

விதுளநீர், வாய்விளங்கம், a drug — berries. — Emblica ribes.

விதுன்னகம், துத்தம், which see.

விதேக முத்தி, மோட்சம், complete deliverence.

விதே தனியா, ஒட்டொட்டிப்புல், a kind of grass which sticks.

விதை, seed; testis.

விதை காலிகம், வட்டக் கிலுகிலுப்பை, round rattle wort — Crotolaria labrunifolia.

விதைக் கொடி, spermatic cord.

விதைப் பை, (Botany) ovary; 2. பீசவுறை, scrotum.

விதை முட்டை, ovules.

விதை முதிரா அவரை, பிஞ்சவரை, tender fruits of lab lab.

விதை முளைத்தல், sprouting of seeds — germination of seeds.

விதையடித்தல், காயடித்தல், castrating.

விதையத்தி, நாட்டத்தி, fig; தசையத்தி, foreign fig. மலபந்தம், உடம்புச்சூடு, பித்தவேகம் போம், it is laxative.

விதையின்மை, congenital absence of testis — Anorchia.

விதையுறை, விரையின் மேல் மூடிக் கொண்டிருக்கும் வஸ்து pod; 2. உமி, husk; 3. ஓடு, shell; 4. அண்டம், scrotum.

விதை வாயு, பீசவாயு, orchitis.

வித்தகம், (in Erotic science) Piercing embrace in which the woman pressing the man's body with her breasts while man returning it with his arms around herheld firmly.

வித்தகன், சிலேட்டுமத்தால் வந்த 10 வகை மேக ரோகத்தில் ஒன்று, one of the megam caused by phlegm humour; 2. மூத்திரம் இளநீர் போல் நாற்றம் வீசும், அதாவது ஓர் வகை நீரிழிவு.

வித்ததை நருக்கி, தழுதாழை, a medicinal shrub — Cleodendron phlomoides.

வித்தம், குறைவிரி, Atelektasis.

வித்த விரணம், கல் முதலியவைகளாலடி யுண்ட விரணம், injury.

வித்திகம், இந்துப்பு, epsom salt.

வித்தியம், தான்றி, a tree — Terminalia bellerica.

வித்திரகம், வெள்ளெருக்கு, madar bearing white flowers. Calotropis gigantia bearing white flowers.

வித்திரதி, சீழ்க்கட்டு, abscess with pus.

வித்திரதி, கடைக்கண்ணில் நரம்பின் வழியாக தடிப்பை யுண்டாக்கு மோர் நோய், an eye disease marked by swelling in the eye lid.

வித்திரதிகம், an abscess.

வித்திரதிகை, an abscess of வித்திருதி. type, carbuncle, an incidental abscess in a case of (பிரமேகம்) Pramegam should be regarded as having its origin in the same morbific principle (தோஷம்) as that which has produced the disease (பிரமேகம்).

வித்திர திகை, carbuncle.

வித்திரதிக்கட்டி, மாம்பழத்தைப் போல் வெளியிலாவது உள்ளிலாவது வீக்கமுண்டாகி வலி, தாபம், வயிறுப்பல் முதலிய வேதனைகளைக் காட்டும் ஓர் வித கட்டி; இவ்வித நோய்களில் அட்டையைக் கடிக்க விடுத்து இரத்தத்தை வாங்கி, பின் விரேசனம், வியர்வை வாங்கல் முதலிய சிகிச்சைகளைச் செய்ய வேண்டியது, Internal abscess appear only in such parts as the rectum, the region of the bladder or the navel, the abdomen the throat, the spleen, the liver, the cardial region, thorax (தொண்டை தூரு) The abscesses appearing in the above said places bear the following symptoms.

Viz:- Rectum bowels are affected and constipation.

Bladder; difficulty and pain in micturation and scanty urine.

Navel: hiccups, pain, rumbling noise in the abdomen.

Abdomen; symptoms of vayu.

Throat: severe pain in the throat and the back.

spleen; dyspnoes sets in.

Liver: asthmatic reathing and hiccup. Cardiac region pain all over and cough.

வித்திரம், நெய், ghee.

வித்திரா சிதம், வள்ளைக்கொடி, which see.

வித்திரிகம், மரமஞ்சள், tree turmeric.

வித்திருதி, மாம்பழம் போல் வெளியிலாவது உள்புறமாவது வீக்க முண்டாகி, தாபம், வலி, வயிறுப்பல் முதலிய குணங்களையுண்டாக்கும் ஓர் கட்டி, It is a deep scated painful round or extended swelling due to the extremely deranged and aggravated condition of the bodily houmours which resort to the bone and vitiate the skin, blood, flesh and fat in the system. In the end it suppurates. It assumes a black or vermilion colour attended with rough surface and a sort of excruciating pain and burning sensation.

வித்திருதிக் கட்டி, தோல், ரத்தம், மாமிசம், எலும்பு, நரம்பு இவைகளில் கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்து தடித்து வீங்கி உடம்பின் வெளியில் அல்லது உட்புறத்தில் வேரூன்றி வட்டவடிவமாகப் புடைத்து எழும்பி வலியையும் மிகுந்த குத்தலை முண்டாக்குமோர் கட்டி, see வித்திரதிக்கட்டி.

வித்தின் மூக்கு, cicatricle of seed.

வித்து, விந்து, semen; 2. சுக்கிலம், virile; 3. விதை, seed; 4. கல்லுப்பு, rock salt; 5. வழலையுப்பு, salt derived from fuller's earth.

வித்துகம், கங்கை நீர், liquor amni.

வித்துக் குணம், இது இருவகைத்து; ஒன்று அதிகவுஷ்ணம் மற்றொன்று அதி சீதளம், ஆகவே இவை விந்துவைப் போஷிக்கத்தக்கவை அல்ல, சூடும் , சீதளமும் அதிகமில்லாமல் சமமாயுள்ளதுதான் விந்துவைப் போஷிக்கும். சாதாரணமாக விதைகளில் இடைவெளி யில்லாமல் நெருங்கி யிருக்கும் (உ-ம்-தூதுவளை) அதிக உஷ்ணம், இவைவெளி மிகுந்து ஒன்றொடொன்று பொருந்தாதபடிக்குள்ளது, வேறுவிதம், (உ-ம்-பூசினி) இது அதி சீதளம், இவ்விரண்டிலும் சேராமல் இடைவெளி யுள்ளதாயும் ஒன்றுக்கு ஒவ்வொரு வித்து பிரத்தியோகமாயுள்ளன வாயுள்ளது, (உ-ம்) முருங்கை, வாதுமை வித்துக்கள் இது வைத்தியத்திற்கு பொருந்தியது, பொதுக்குணம், If the seeds in the fruit are arranged very closely as in brinjal they creat heat, and if they are arranged with great interspace as in pumpkin they creat great cold. If it is as arranged in drumstick one in each compartment. or one seeded fruit as almond it creats neither cold or heat and hence good for medial purposes. Generally all seeds are aphrodisiac.

வித்துசம், தாளி, whch see.

வித்து பின்னம், கோடாசூரி, a plant which see.

வித்து முதிர வரை, கொட்டையவரை, seed of lab lab.

வித்துருதி, sdee வித்திரதி.

வித்துருமம், இளந்தளிர், tender leaf; 2. பவளம், coral.

வித்துறை, கோது, உமி, Bot — Conceptacle.

''வித்து உதித்தவிதத்தை அறிபவர், சத்தியும் சிவனும் தானாகுவரே''

(ம-முனி, 800)

வித்துணி, அழிஞ்சில், a medicinal tree used as cure antidote — Alangium decapetalum.

வித்தலும்பு, முழங்காலி னெலும்பு, Tibia.

வித்தைக் கை கண்டவன், முட்டை, egg.

வித்வேஷம், கீழ்க்காய் நெல்லி, a plant used in jaundice — Phyllanthus niruri.

விநாயகர் கைப்பிடி, யானைக் கொம்பு, eleghat tusk.

விநிச் சுவாசம், பெருமூச்சு, sigh.

விந்தகப் பருப்பு,

விந்தம், குதிரைப் பற் பாஷாணம், a kind of arsenic; 2. பச்சைக் கற்பூரம், crude camphor.

விந்தரம், கற்கடக பாஷாணம், சூத பாஷாணம், a kind arsenic.

விந்தரதப் பால், எருக்கம் பால், milk taken from Calotropis gigantia.

விந்தாக் கினி, காமாக்கினி, excessive heat of the body caused by sexual desire.

விந்தாசம், செம்பை, a small tree — Sesbania egyptiaca.

விந்தாரக் கல், ஈரற்கல், a kind of mineral stone.

விந்தாரப் பூச்சாரம், நாகமலை, mountain containing zinc ore.

விந்தார வர்ணன், மந்தாரச்சிலை, a medicinal stone.

விந்திய கூடன், அகத்தியன், Saint Agastyar.

விந்தியவசனி, விந்தியவாசி, விந்தியவாசினி, கோஷ்டம், a drug — Arabian costus.

விந்திரசம், 8 வகை இரச சத்துக்களிலொன்று, இதற்கு சாரணை 100 தீர்க்க சொரூபமென்ற குளிகை யாச்சு இதை வாயிலிட்டால் கத்தியோடும்; பிடித்தவிடம் பொய்யாய்ப் போகும் இதனால் பேதமில்லை. அரூபமாகும். see விந்திரரசம், a variety of mercury which if animated 100 times and put in the mouth dematerialises the human body.

விந்திரரசம், இந்திர ரசம், நவலோகங்களுக்கு ஒவ்வொன்றாக சத்துக்களூட்டி பிறகு ரசங் கலந்து ஏழு சுன்னந்துவி காய்ச்சி வேதைக்கும் குளிகை செய்யவும் உபயோகிக்கும் ஓர் வகைச் சரக்கு, prepared mercury combined with the nine metals is useful in transmutation and in alchemy.

(கொங்-வாத-காவி)

விந்திறுகல், விந்து தடித்தல், thickening of semen; consistency of the semen beoming thick.

விந்தீனம், weakness of semen.

விந்து, நீர்த்துளி, drop of water; 2. இந்திரியம், semen; 3. இரசம், mercury; 4. முட்டையின் வெண்கரு, white of an egg; 5. புருவ மத்தியம்; between eye brows; 6. அகாரம், mystic letter 'Ah'. 7. இரேசகம், the vital air possing out through one nostril; 8. தலைப்பிண்ட மூளை the brain of the first born child of a woman; 9. சுத்த மாயை, pure spiritual; 10. தகரை, a plant — Cassiatora.

விந்து கட்டல், படுக்குமுன் ஒரு பிடி எள்ளைத்தின்பதால் விந்து கட்டும், consolidation on of the semen gingelly seeds if eaten daily consolidates semen.

விந்து கலிதம், emission of semen — wet dreams. தாழம் பூ உள்ளே யிருக்கும் விபூதியை, கோழி முட்டை வெள்ளைக் கருவால் இழைத்து ஆண்குறி நரம்பின் மேல் பூசிவர விந்து சீக்கிரத்தில் கலிதமாகாது, medicine to prevent emission is given above which see.

விந்து கவுளி, சடைச்சி, a plant — Pith plant.

விந்துக் கரடு, seminal calculus.

விந்துக்குரிய, spermatic.

விந்து சக்தி, விந்து சத்தி, அப்பிரகம், mica.

விந்துசம், தாளி, a twiner plant of convululus order.

விந்து சிக்கிரகம், மான், deer.

விந்து செந்தூரம், இரசசெந்தூரம், redoxide of mercury.

விந்துச்சம், நறுந்தாளி, a twiner of conulvulus order.

விந்துச் சரக்கு, உப்புச் சரக்கு, drugs containing salt.

விந்துச் சுண்ணம், முப்பூச்சுண்ணம், a calcined powder prepared out of the three sdalts obtained from the efflloressence grown in the soil of fuller's earth.

விந்து தடிப்பு, தாதுத் தடிப்பு, thickening of semen.

விந்து தாரை, excretory duct of teslile passing from the testis to the ejaculatory duct — Vasdeferens.

விந்து தேகம், குங்கிலியம், a kind of resin — Bdellium.

விந்துத் தம்பனம், விந்து கட்டல், onsolidation of semen; preventing it from ejaculation.

விந்து நஷ்டம், விந்து அடிக்கடி தூக்கத்தில் வெளியாகும் ஓர் நோய், wetdreams — involuntary emission of semen during sleep — Spermatorrhoea.

விந்து நாதச் சரக்கு, உப்பு புளி சரக்கு, drugs pertaining to alkalies and acids.

விந்து நாதம், முட்டையின் வெண்கருவும் மஞ்சட் கருவும், வாயு - தேயு = (விந்து) பிருதிவி — அப்பு+ ஆகாசம்; (நாதம்) the white and yellow of the egg; 2. சுக்கில சுரோணிதம், semen & ovum; 3. உப்பு புளியினம், alkali salts and acid salts.

விந்து நாளம், விதைக்குப் பின்னாகப் போகும் இரண்டு நாளங்கள், the two veins (right and left) passing from the back of the testis — Spermatic veins.

விந்து நீற்றல், சுக்கிலம் நீர்த்தன்மை டைதல், Semen beoming thinner in consisteny.

விந்து பஞ்சமித்திரம்,

விந்து புஷ்டியாதல், தாது புஷ்டி யுண்டாதல், semen being strengthened.

விந்துப்பு, தலைமுடி யுப்பு, a salt prepared from the cranial bones.

விந்துப் பை, Vesicula semenalis.

விந்துப்பை யழற்சி, inflammation of the seminal vesicle — Seminal vesiculitis.

விந்து மழை பொழியன், கரிக்குருவி, a small black bird.

விந்து மறுத்தல், விருப்ப மிருந்தும் போகியாமல் விந்துவைக் கட்டல், to consolidate the semen by prventing its emission.

விந்து வணு, spermata zoon.

விந்து வழி, பிறவி வழி, by birth; 2. கலவியினால் பிறத்தல், taking birth by intercourse.

விந்து வாகி, Vas deferens.

விந்து வெப்பு, விந்துவினால் ஏற்பட்ட சூடு, heat caused by semen; 2. கற்பச்சூடு, heat acquired when in the womb — Congenital heat.

விந்துற்ற மூர்க்கம், ருதந்தி, which see.

விந்தூகம், சாதிலிங்கம், vermilion — Red sulphurate of mercury.

விந்தூறல், சுக்கிலம் அதிகரித்தல், increase of semen in the system.

விந்தேறல், In semination.

விந்தை, ஓர் அகத்தி, a plant — Sesbania; 2. பெண்களுக்கு முதுகந்தண்டு மீதிலும் வயிற்றிலும் நீலநிறமான பெரிய கட்டிகளுண்டாகி அடிபாகத்தில் சுருக்குசுருக்கென்று குத்தலையுண்டாக்கும் ஓர் நோய்.

விந்தையம், செங்கத்தாரி, which see. 2. See செங்கத்தாரிப்பட்டை.

விபகரி, பிரி; கடறாக்கு, to decompose.

விப கலனம், பூதசுத்தி, decomposition.

விபசார மகளிர், பல புருஷரை இச்சித்து சம்பாகிக்கக் கூடியவர்கள் ஆகிய பெண்கள்; இவர்கள் குடிமுறைக்கு உதவாதவர்கள், woman who offers her body to indiscriminate sexual intercourse especially for hire — Prostitute.

விபசாரம், going astray.

விபசாரி, விபசார மகளிர், a prostitute.

விபசாரி, prostitute.

விபட்சன், சத்துரு, enemy as in drugs.

விபணம், ஓர் செடி, a plant.

விபண்ணகம், பலாசு, a tree — Butea frondosa.

விபதி, குருவி, a bird — sparrow.

விபதினக குட்டம், உடம்பின் கீழ் பக்கங்களில் அதாவது கைகால்களில் கொப்புளங்கள் உண்டாகி, வலி, எரிச்சல், நமைச்சல், வீக்கங்கண்டு வடித்து வேதனை யுண்டாக்கும், விபாதிகைக் குட்டம், a form of psoriasis attended with pain burning sensation, swelling, itching. It restricts itself solely to the lower extremities.

விபத்தம், காஞ்சிரை, a poisonous tree — Strychnos nux-vomica.

விபத்தி, மரணம், death.

விபந்தம், suppression of stool and urine.

விபரத்திசம், கோமேதகம், one of the nine gems — Cinnamum stone — Onyx.

விபரிகம், இதிரக் கிழங்கு, which see.

விபரீத சாதி, அத்தினி சாதிப்பெண். one of the four classes of women divided according to their lust.

விபரீதப் பிரசவம், காலத்திற்கு முன் படைத்த பிரசவம், premature labour, complicated labour; 2. சிரசோதயம் காணாது மாறாக வுண்டாகும் பிரசவம், abnormal presentations.

விபல கெட்சு, நாணல், reed.

விபனம், பாம்புக் கொல்லி, a plant; see கிரிப்பூடு.

விபாகம், சீரணித்த வுணவை மாற்றி சமானப்படுத்தி மாறுபட்ட சுவை கொடுக்கும் ஓர் சக்தி, the process of transforming food into such a nutrient condition with alteration in taste that it is taken up by the circulatory system; the change in taste that occurs after digestion.

விபாடிகை, ஓர் வகைக் குட்ட நோய், a variety of leprosy.

விபாண்டு, முள் வெள்ளரி, a kind of cucumber with protrusions.

விபாதிகம், psoriasis foot.

விபாதிகை, கை கால் வெடிப்பு, fissures in the hands and feet.

விபாதிக் குட்டம், குதிகால் வெடித்துப்புண்ணாகி நடக்க முடியாத குட்டம், a kind of leprosy with cracked heels.

விபாவரி, சங்கம் வாங்கி.

விபிதகம், விபீதகம், விபீதம், தான்றிமரம், a tree — Terminalia ellarica.

விபு சத்துரு, தண்ணீர் விட்டான், water root thorny creeper — Asparagus sarmentosis.

விபுஷா, உதிரிமாரி, which see.

விபு தகம், வஞ்சி, creeper — calamus rotang.

விபுதாகந்தம், நெய்ச்சிட்டி, a plant; which see.

விபுத்துவம், unrestricted puissance or power.

விபுலம், ரொட்டி, bread.

விபுலரசன், கரும்பு, sugar cane.

விபூதி பிடித்தல்.

விபூதி, சாம்பல், holy ashes; 2. பற்பம், medicinally calcined white powder.

விபூயம், முஞ்சிப்புல், a kind of grass.

விபூரசனி, தும்பி, which see.

விபெஞ்சா, அடியீரல், spleen.

விபேதனம், analysis.

விபேதனி, anatyst.

விப்பிரணி, தும்பி, a plant — Cassytha filiformis.

விப்பிரதியாயம், It is a state of mind in which ones notions are reversed of what it should be and what is beneficial.

விப்பிரபிரியம், முருக்க மரம், a thorny tree - Erthrira Indica.

விப்பிரமம், மனச்சலனம், emotion.

விப்புருதி, cancer or carcinoma — It is a malignant tumour characterised by the formation of a net work of connective tissue conacting the epithelial cells. It tends to grow progressively to eat into the parts surrounding it to affect the constitution and ultimately produce death.

விப்புருதி, ஓர் சிலந்தி, abscess; 2. பிளவை, carbuncle, தோல், ரத்தம், நரம்பு முதலான விடங்களில் பஞ்சு சேருவதைப் போல் தடித்து எழும்புகின்ற வீக்கம், இது காயங்களினாலும் கெட்ட நீர்ச் சேர்க்கையாலும் உண்டாகும். மாமிசம், சன்ன நரம்பு முதலான விடங்களில் வேரூன்றிய வீக்கம் நீண்டு புடைத்துக் கட்டியாய்க் காணும். இது நரம்பின் வழியாய் ஓடித்தடித்தால் ஓடுவிப்புருதி, என்று பெயர், Pyaemic; abscess.

விப்புருதிக் கட்டி, சீழ்க்கட்டி, abscess; 2. பிளவை, carbuncle.

விப்புருதிக் கிழங்கு,

விப்புருதிக் கோளாறு, carcinoma.

விப்புருதி நாயகன், அமுக்கிரா, a plant — Withania sominifera. It is so called because the application of its paste resolves the abscess swelling.

விப்புருதிப் பற்று, வீக்கங் கண்டவுடன், அன்னபேதி, ஊமத்தின் இலையும் சம எடை கொண்டு இளகலாய் அரைத்துக் கட்டியின் மேல் தடவ வீக்கம் கரையும், கரையாவிடில் அன்ன பேதியைக் கொதிக்க வைத்து அரைத்துப் பூசி அதின் மேல் முன் சொல்லிய அரைத்த மருந்தைச் சீலையிலூட்டிப் பற்று போட கட்டி உடையும், பின் ஒதியம் பட்டை நீரினால் கழுவிவர ஆறும், a paste prepared as above and applied to abscess either to resolve it or to make it mature and burst.

விப்புருதி பணிச்சை,

விப்புருதி வைத்தல்,

விப்புலுதம், introversion of the uterus.

விப்புலுத யோனி, அதிக மோகங் கொண்டு நினைத்த போதெல்லாம் பலவந்தமாய்ப் புருஷர்களை இடைவிடாமல் அருகே வைத்துப் பார்த்துக் கொண்டிருத்தலினால் அல்குல் துடித்து மாறாது மதசலம் வடிந்து உடம்பு பலவீனப்படும் ஓர் நோய். emaciation of the body due to constant vaginal discharge and intercourse caused by excessive passion.

விமலமணி, பளிங்கு, crystal pebble.

விமலா, பிரமி, a prostate plant — Gratiola monieri.

விமலி, சங்கினி சாதிப் பெண், on of the four classes of women divided according to their lust.

விமலோதயம், வெந்தயம், fenugreek seeds Trigonella foenumgraecum.

விமர்த்தம், புழை பெருத்த நிதம்பத்தில் ஒரு விரலைச் செலுத்திப் புணர்வது, thursting a finger with the penis into the vagina which is too wide for fitting intercourse.

விமாமிசம், அசுத்த போசனம், impure or unwholesome food.

விமாலவளா, பம்பந்திராய், a plant which see.

விமானசம், dementia.

விமானம், science or knowledge, investigation or study.

விமியளா, see விமாலவளா.

விமுக்த கர்ப்பி, she who has delivered at the proper time.

விமுத்திரம், தளிர், tender shoots; 2. பூந்தளிர், flower buds.

விமுரிகம்,

விமோசனம் செய்தல், சிலாகை போட்டு, கெட்ட இரத்தம் முதலியவைகளை உடம்பினின்று நீக்குதல், அல்லது வெளிப்படுத்தல். to expel the bad or vicious matter from the body or any part of the body.

விமோடம், சதகுப்பை, dill seed Anthium Sowa.

விம், உலோகத் திராவகம், metallic acid.

விம்பகம், தொட்டி பாஷாணம், a kind of arsenic; 2. கோவைக் கொடி, a climber — Coccinea indica.

விம்படம், கடுகுச் செடி, mustard plant — Brassica juncea.

விம்பந்தம், விம்பிந்தம், ஆவில் புங்கு, which see.

விம்பம், கொவ்வை, a creeper — Bryonia grandis; 2. உருவம், form; figure; 3. ஒளி, light; 4. பிரதி பிம்பம், reflection; 5. சாலங்கபாஷாணம், a kind of arsenic; 6. பலண்டுறுக பாஷாணம், a kind of arsenic.

விம்பவிதி, உருவ வொளியைப் பற்றிய விதிகள், law of reflection.

விம்பி, கோவை, a climber Coccinea indica.

விம்பிகை, கோவைக் கொடி, a climber — Bryonia grandis.

விம்பித்தல், பிரதிபிம்பித்தல், reflecting.

விம்பு, பாக்கு மரம், areca nut tree.

விம்மல், விம்முதல், பருத்தல், to swell; 2. பூரித்தல், as in ஆண் குறி விம்மல்; 3. முலை விம்மல், tumefacion.

விம்மி, ஓர் மரம், bell pea — Sophora wightii; 2. பேய்முன்னை, charcoal tree — Premna serratifolia.

விம்மிதங் கொள்ளல், பருத்தல், to swell.

விம்மிதம், உடம்பு, body.

விம்மிப் பிரி, வீங்கி வெடித்தல், bilge.

விம்மின மலர், பூத்த மலர், bloomed flower.

விம்முதி, பூரிக்கச் செய்யும் தசை நார், erectile tissue.

வியக்தி, manifestation of doshas (humours) or of diseases.

வியங்கம், தவளை, frog; 2. மச்சம், mole; 3. ஓர் வகைத் தேமல், a thin circular painless, brown coloured patches or stains suddenly appearing on the body. It is due to the absorbtion of blood through vayu and pitham; a fungus disease of the skin; 4. வங்கு என்னும் சரும வியாதி, black patches on the face especially in the nose.

வியங்க ரோகம், மச்ச நோய், disease where the body is full of moles.

வியங்கி யோமம், melanoma; See வையங்கி யோமம்.

வியஞ்சனம், யோனி, pudendum mulibre; 2. கறி, side dishes.

வியடம்பகம், ஆமணக்கு, castor plant — Ricinus communis.

வியதனம், குத்தி யெடுத்தல், pierce and remove.

வியதா பேதகாரி, பழைய நோய்களைப் படிப்படியாய்க் குணப்படுத்தி உடம்பை சுகமான நிலைமையில் கொண்டு வரும் மருந்து, drugs or medicines capable of curing old chronic diseases by degrees and bringing the body to sound state of health — Alteratives.

வியந்த ராஜம், ஓர் வகைப் பாம்பு, a variety of snake.

வியந்நிச்சம், ஆதொண்டை, Ceylon caper Capparis zeylanica.

வியபசாரி, see விபசாரி.

வியம், உடல், body.

வியர்க்கு மருந்து, sudorific.

வியர்க்குரு சுரம், fever marked by rash — Miliary fever; 2. பிரசவித்த பெண்களுக்கு வியர்வையினால் உண்டாகும் சுரம். a fever due to the heating and sweating system of pueperal period.

வியர்த்தல், வேர்த்தல், perspiring.

வியர்ப்பு, வியர்வை, sweat; perspiration.

வியர்வு, வியர்வை, , வேர்வை, pespiration.

வியர்வு தோன்றல், see, வியர்த்தல்.

வியர்வைக் கசிவு, பித்தத்தின் சேஷ்டையால் எப்போதும் வியர்த்துக் கொண்ட யிருத்தல், constant perspiration due pitham.

வியர்வைக் குறை, see வியர்வைக்குறைவு.

வியர்வைக் குறைவு, oligidria; too scanty perspiration — Hyphidrosis.

வியர்வை தரு மருந்து, diaphoretic.

வியர்வை நாற்றம், வேர்வையால் காணும் அழுக்கு நாற்றம், bad odour caused by perspiration.

வியர்வை யுண்டாக்கி,

வியர்வை நீக்கி, a drug or medicine which checks the excretion of sweat — Anti — Sudorific.

வியர்வை நோய், sweating sickness.

வியர்வை பிடித்தல், see வியர்வை வாங்கல்.

வியர்வை வாங்கல், வேது பிடித்தல், vapour bath.

வியல், பெண், gold.

வியல் கனா, வியல் கனாகம், திப்பிலி, long pepper — Piper longum.

வியல் காதிகம், வஞ்சி, ratan — a creeper Calamus rotang.

வியல் பூதி, வில்வம், bael tree — crataeva religiosa.

வியன் மணி, சோதி விருட்சம், which see.

வியாக்கிர சானா, கற்றாழை, aloe.

வியாக்கிர தலம், ஆமணக்கு, Castor plant — Ricinus communis.

வியாக்கிர நகம், புலிதொடக்கி, a plant — Caesalpinia sepiaria.

வியாக்கிர பரணி, நரி முருங்கை, a species of Erythrina.

வியாக்கிர் பர்ணகம், வெள்ளை யாமணக்கு. white species of castor plant — Ricinus communis.

வியாக்கிர பாதகம், நரிமுருக்கு, a species of Erythrina.

வியாக்கிர புச்சம், See வியாக்கிர தலம்.

வியாக்கிரமம், ஆமணக்கு, Castor plant — ricinus communis.

வியாக்கிரி, கண்டங்கத்திரி, a prostate thorny plant — Solanum jacquini.

வீயாசம், அத்தி, fig tree — Ficus racemosa.

வியா சரக்கியம், பூனைப்புல், a kind of grass.

வியாசிதம், கோஷ்டம், a medicinal drug — Costus arabicus.

வியா தனம், puncturing; piercing.

வியாதி, உடம்பிலும் மனத்திலும் பலவிதமான துன்பத்தை விளைவிக்கும் ஓர் நிலைமை; நோய், anything that afflicts the body or mind or both; 2. கோஷ்டம், a medicinal drug — Costus arabicus.

Note:- According to Hindu Medical Science the term is used not only for any deviation from normal phyusiological conditions ut also is applied to psychological conditions. All diseases whether it be of any kind have a constitutional back ground.

வியாதிக் கரு, நோயின் புழு, germ of diseases.

வியாதிக் காதம், கொன்றை, a tree — cassia.

வியாதிக்காரன், நோயாளி, patient.

வியாதிக் கிருமி, நோயின் அணுக்கிருமி, germs that cause disease.

வியாதிக்கூறு, நோயின் குணா குணங்கள், symptoms disease; 2. நோய் குணபாடம், pathology.

வியாதி கேழ்க்கல், நோயைக் கண்டித்தல், curing diseases.

வியாதி சாந்தி, நோய் தீர்த்தல், curing diseases.

வியாதி தரூபியம், an Ayurvedic science on diseases by worms in the intestines.

வியாதி பலம், Virulence of disease.

வியாதிப் பரீட்சை, diagnosis.

வியாதி மாரணம், நோய் தீருவதற்காக உச்சரிக்கும் மந்திரம், இது சாதாரணமாய் மருந்து செய்து முடித்தவுடன் சத்திக்குப் பூசை பண்ணும் போது உச்சரித்தல், some mantrams uttered to cure diseases.

வியாதி மும்முரம், நோயின் கடுமை, paroxysm.

வியாதியஸ்தன், நோயாளி, patient.

வியாதியுக்கிரம், நோயின் வேகம், Paroxysm.

வியாதியுள்ள, நோயுள்ள, sickly.

வியாதி வகை, *4448;* diseases are calculated to be 4448. They are as follows:

வாதம் *-84,* பித்தம் *-84,* சிலேட்டுமம் - *96;* தனுர் வாயு - *300;* சயம் *7;* பெருவயிறு - *8;* சூலை *-200;* பாண்டு *-10;* கண் நோய்கள் *-96;* சிலந்தி *68;* சன்னி - *76;* வழலை *-95;* சுரம் - (காய்ச்சல்) *64;* மகோதரம் (வல்லை) *7;* வீக்கம் (தலை) *5;* உதிர நோய் - *16;* பிளவை - *10;* படுவன் - *11;* பீலி*-8;* உருவகியம் *-5;* பொறிகரப்பான் *-90;* கெண்டை *-10;* கட்டம் *-18;* கதிர்வீச்சு *-3;* மதிவெட்டை *5;* இசிவு - *6;* மூர்ச்சை *7;* வலிநோய் *-46;* சுழலை *-10;* பீநசம் *-76;* கிராணி *-25;* பல்நோய் *-75;* மாலைக்கண் *-20;* அதிசாரம் *25;* கட்டி *-12;* கிருமி நோய் - *6;* மூட்டு நோய் *-30;* முதிர் நோய் - *20;* சத்தி *-5;* கல்லடைப்பு *-80* வாய்வு *-90;* திமிர்நோய் *-10;* மேகம் *21;* நீராம்பல் *-5;* காதுநோய்*-10;* விக்கல் *-10;* அரோசகம் *-5;* மூக்கறுப்பான் *-10;* கடி விஷம் *-500;* குத்துவெட்டு - *700;* கிரந்தி *-48;* பொறி விஷம் *-800;* துடிநோய் - *100;* பிள்ளை நோய் *-100;* குமுளி - *7;* விப்புருதி - *18;* விஷபாகம் *16;* பிறநீர்க் கோவை - *200;* நடுக்கல் - *6.*

வியாதி வகை, உறுப்புகளின் இடம், diseases of organs; *4448;*, சிரசு - *1008;* உச்சி *-46;* அமுர்தம் (மூளை) - *16;* காது *-100;* மூக்கு *-86;* கண்*-96;* கவுள் *-49;* ... ...*37;* பல்*45;* ....*600;* உண்ணாக்கு 10x20; இதழ் - *16;* இலாடம் *-76;* கண்டம் *-100;* பிடரி *-88;* புருவம்*-16;* போது *-847;* தீது *-160;* கருத்து *-36.*

வியாதி வருமூலம், நோய் கொள்ளுங் காரணங்கள், the causes of diseases.

வியாபக தாபிதம், பரவிய அழற்சி, diffused inflammation.

வியாபாதனம், கொல்லல், killing.

வியாப்பிரகம், வள்ளைக் கொடி, a creeper.

வியாப்பிரயம், கோஷ்டம், a medicinal drug — Costus arabicus.

வியாம கந்தி, பேய்ப்புல், deil grass.

வியாயாம சத்தி, power of resistence to disease.

வியாயாமம், சாதனை; அப்பியாசம், physical exercise.

வியாழம், see வியாளம்.

வியாழன், நவகிரகத்திலொன்று, one of the nine planets — Jupiter.

வியாளம், பாம்பு, snake; 2. புலி, the national animal — Tiger.

வியாளாயுதம், புலி தொடக்கி, a thorny shrub — Caesalpinia sepiaria.

வியான புக், மயில், the national bird — Peacock.

வியானவம், மயிற் காலடி, a plant.

வியான வாயு, இருதயமே இடமாக இருந்து கொண்டு பாதம் வரையில் பரவி, நடத்தல், குனிதல், நிமிர்தல் இமைத்தல் விழித்தல் முதலான செய்கைகளை யுண்டாக்கும்; இது உடம்பு முழுவதிலும் வியாபிப்பதினாலிப் பெயர். It courses or acts through the whole organism and its function consists in propelling from the heart the blood, lymph, chyle etc., through the body and helping the out flow of blood and perspiration. The five kinds of muscular movements are ascribed to the action of this vayu. A deranged condition of this is attended with diseases which are found to affect the whole organism as fever etc.

வியானன், தசவாயுவி லொன்று, one of the ten vital airs of the body; உடம்பின் எல்லா உறுப்புகளிலும் பரவி உடம்பிற் குண்டான காரியங்களை யெல்லாம் இருந்து நடத்துவதற்கும், உடம்பில் களைப்பு, தாகம் இவைகளை உண்டாகுவதற்கும் காரணமாயிருக்கிற வாயு, the air which spreads all through the organs of the body and causes their action and the root cause of fatigue and thirst; 2. தசவாயுக்களையும் தசநாடிகளையும் மிகுதல் குறைதல் இல்லாதபடி சமப்படுத்தி உடம்பின் காரியங்களை நடத்துவதற்குக் காரணமாயிருக்கும் வாயு. vital air which distributes itself all through the body equally and thereby stimulating the actions of the system.

வியூகம், உடம்பு, body.

வியூகனம், உடம்பின் கட்டு. structure of the body; 2. அங்காதி பாத சாஸ்திரம், Anatomy; 3. உடம்பிலுள்ள பதார்த்தங்கள் ஒன்றுடனே ஒன்று சேர்ந்திருக்குந் தன்மை, organisations of animals or plants; 4. கட்டுப்பாடு. arrangement of the parts as a whole.

வினதாசுதன், கருடன், brahminikite.

வினா, புத்தி, Prudence.

வினாசயா, நத்தைச்சூரி, which see — a plant.

வினாடி, 24 minutes.

வினை, இரண்டு, two; 2. நாபிக் கிழங்கு, aconite root; 3. நோய், as in வினை தீர்ந்தான், disease.

வினை கொள்ளல், சிரங்கில் சீழ், வலி முதலியவைகள் கொள்ளல், suppurating as in boils.

வினை சேர், இரண்டு சேர் a weight — two seers.

வினைச் சிற்று, நாய்ப்பாகல், a plant of the senna species.

வினை தீர்த்தான், வைத்தியன், வைத்தீஸ்வரருக்கு மற்றொரு பெயர் physician; 2. நோய் தீர்க்கும் மருந்து, medicine.

வினை நிலைமை, active condition.

வினை போக்குமூலி, கொடிமா, the mystic three salts (முப்பு).

வினைவிகா, குப்பைமேனி, a plant — Acalphia indica.

வினோதசாதி, பயிரபதி சாதியாகிய ஆண்சாதி 4 வகையி லொன்று, one of the four classes of men.

வினோத பூசம், வாலைப் பூநீர், which see.

வினோதம், சாக்கிரம், one of the five statious of the soul wakefulness.

வினோதயம், உலோகத் திராவகம், acid prepared from metalic compounds.

வின்னம், பின்னம், distortion of a limb.

வின்னம் பண்ணல், உடம்பின் உறுப்புகளைப் பின்னப்படுத்தல், breaking as limb, causing deformity.

வின்னா, வின்னாகம், கடுகு ரோகிணி, a purgative drug — Helleborns niger.

வீ

வீ கருப்பந் தரித்தல், conceiving; 2. பறவை bird; 3. சாவு, death; பூ, flowers.

வீகம், பறவை, bird.

வீக்கக் கணம், a children's disease caused by congenital heat and marked by swelling of the body.

வீக்க மாந்தம், குழந்தைகளுக்கு காதும் கண்ணும் வீங்கி நாக்கு புண்ணாகி, கரத்தை யுண்டாக்குமோர் மாந்த நோய், a digestive disease of children marked by sdwelling of ears, eyes, inflammation of the tongue and fever.

வீக்கம், ஓர் நோய், a diseease; 2. ஊதல், swelling; 3. பூரிப்பு, tumefaction; 4. உப்பசம்; turgescence.

வீக்கம் வாடல், ressolving of the swelling.

வீங்கச் செய்வது, to cause swelling — Tumefacient.

வீங்கப் பண்ணல், tumify.

வீங்கல், வீக்கமடைதல், swells; 2. விரும்பல், longing after a thing; 3. ஏங்கல், pining away for want of anything.

வீங்கி, சேங்கொட்டை, marking nut — Semicarpus anacardium.

வீங்கிவிழித்தல், கண்ணுறுத்தி இமைகனத்து திறந்தால் குத்தல் வலியும் கடைக்கண்ணில் மூங்கில் முளை போல் கூர்மையான சதை வளர்ந்தும் கண் சிவப்பு, எரிச்சல், வீக்கம், புடைப்பு, நீர் வடிதல் ஆகியவிக் குணங்களையுடைய வோர் கண்ணோய், a disease of the eye marked by irritation, thickening of the eye lids, some growth in the angle of the eye , causing swelling, burning etc.

வீங்கி வெடி, விம்மிப் பிரிதல், bilgi.

வீங்கி வெடித்தல், to swell and burst as dead body.

வீங்கு கரப்பன், வீக்கத்தை யுண்டாக்குமோர் வகைக் கரப்பன் நோய், an eczema causing swelling.

வீங்குகால், தனஞ்சயன், (வாயு) one of the ten vital airs. It stays in the dead body when all others have left and causes it to swell and burst then it leaves it i.e. on 3rd day.

வீங்கு புள், ஓர் பறவை, a bird.

வீங்குபுள் தோஷம், a morbid condition in the infants caused by vitiated bird.

வீங்குவாயு, விரையைப் பற்றிய 6 வகை வாயுவிலொன்று, swelling of the testicles due to vayu.

வீங்கு விரை வாதம், இரண்டு விரையும் வீங்கி இரு கால் நரம்பிழுத்து மிக்க வலியுண்டாய் மலம் போகாமலும் வாயு பறியாமலும் குளிர் கண்டு கண் புகைந்து வரும், ஓர் நோய். (யூகி -1200) orchitis marked by constipation, flatulence chillness, pain in the legs etc.

வீசகரி, வீசகா, வேங்கை மரம், a tree, kino tree — Pterocarpus bilobus alias P. marsupium.

வீச கோசம், கொட்டை, nut; 2. தாமரைக் கொட்டை, lotusd seed; 3. பீச கோசம், pericarps.

வீச நோய், அண்ட நோய், disease of the testicles.

வீசமா திருகை, see வீசகோசம்.

வீசம், கொட்டை, testicle; 3. விரை, seed; 3. சுக்கிலம்; semen; 4. மூளை, brain; 5. மாகாணி, 1/16 a measure; 6. மூலம், original.

வீசி, சதகுப்பை, dill or sowa seed — Anethum sowa alias Peucedanum graveolens.

வீசுதல், blowing as wind, emitting smell as flowers, flinging as stone.

வீசை, ஓர் நிறை, a weight; 2. 40 பலமிடை. 40 palams; 3. மீசை, moustache; 4. வாழை, plantain.

வீச்சன்னியம், மந்திரம், magic; 2. வில்வம், bael tree — Aegle marmelos.

வீச்சு, ஓர் நோய், a disease as in புறவீச்சு; 2. வலி, convulsion.

வீச்சு சன்னி, see புறவீச்சு சன்னி.

வீச்சுப் புத்து, ஓர் விரண நோய், a ulcer.

வீச்சுலை, காற்று வீசும் உலை, blast furnace.

வீச்சு வலி, நரம்புகளை இழுத்து விடும் ஓர் வகை வலிப்பு, a spasm in which the muscles or muscular fibres contract and relax alternately in quick succession — Clonic spasm.

வீச்சு விளக்கு, உலோகங்களை உருக்கவும், காய்ச்சவும் உபயோகிக்கும் காற்று வீசும் விளக்கு, blast lamp.

வீடி, கொத்தான், twiggy Plant — Cassyta filiformis; 2. வேரிலாக் கொத்தான், rootless plant.

வீடிகை, தாம்பூலம், areca nut enveloped in the betel leaf smeared with shell lime for chewing.

வீடுண்ண சாலி, மச்சம், mole.

வீடு மூலி, முப்பு, the three mystic salts.

வீடு விலக்கம், மகளிர் சூதகம், mensus.

வீட்சா, சிலைப்பேன், louse.

வீட்டி லொன்று, முப்பூவி லொன்று, c.f. வெளிவிரண்டு, one of the three salts.

வீட்டினெருப்பு, அகத்தி, a tree - Sesbania grandiflora (அகம் + தீ+ வீடு + நெருப்பு)

வீட்டுக்கப்புறம் போதல், See வீட்டுக்குத் தூரம்.

வீட்டுக் கரு, ஐங்காய மெழுகு, which see.

வீட்டுக்குத் தூரம், see வீடு விலக்கம்.

வீட்டுக்கு வெளி, மாத சூதகம், menses.

வீட்டுத் தீ, அகத்தி, a tree — Sesbania grandi flora.

வீட்டுத்தேன், வீடுகள் தோறும் ஈக்கள் கட்டும் தேன். honey collected from the honey comb built in the houses.

வீட்டு விலக்கம், வீடு விலக்கம், which see.

வீட்டோடேயிருந்து பத்தியங் காத்தல், to observe diet and remain at home taking rest.

வீணா தண்டம், வீணா தண்டு, முள்ளெலும்பு, vertebrae, முதுகந் தண்டு, vertebral coloumn.

வீணி, மலைக்குறட்டை, spinlle tree — Euonymus dichotomus.

வீணை, மின்னல், lightning.

வீண்ண மிருகம், கஸ்தூரி, எலும்பு, which see.

வீண் பாக்கு, சாப்பிட்டபின் தவிர மற்ற காலங்களில் வெற்றிலை பாக்கிருந்தல், betel chewed at any tie other than after meals as opposed to ஊண் பாக்கு.

வீத சாகி, விலாமிச்சை வேர், fragrant root which is brown or black in colour — Coleus osmirrhizon.

வீத சோகம், அசோகு, a tree — the expells sorrow — Saraca indica.

வீத புட்பி, குக்கில்,

வீதம், தகரம், tin.

வீதலகம், செங்கண் மாரி, lctrus.

வீதன கோபம், Goitre; bronchocele.

வீதன கோளம், thyroid gland.

வீதன சடதி, cretin.

வீதன முருந்து, thyroid cartilage.

வீதல், சாதல், dying.

வீத்துகம், சதகுப்பை, dill or sowa seeds — Peucedanum graveolens; 2. வெள்ளரி, cucumber — Cucumis sativus.

வீத்துகி, வீழி, which see.

வீத்துகிதம், சதகுப்பை, dill or sowa seeds — Peucedanum graeolens.

வீந்தூரகம், சாதிலிங்கம், cinnabar, vermilion.

வீபத்து, சந்திரன், moon.

வீம சக்கிரம், புளிவஞ்சி, which see.

வீமஞ்சி காந்தம், ஊசிக் காந்தம், loadstone which attracts small needles.

வீம பீசம், பருமையான பிடுக்கு, elephantoid scrotum.

வீம மந்தி, கழுதைத் தும்பை, which see.

வீமன், பச்சைக் கற்பூரம்; இது அழுக்கு வெண்மை கலந்த மேகநிறமுள்ளது, crude camphor. One of the three kinds.

வீமி, எட்டுவகை எழுத்துகளிலொன்று, one of the eight mystic letters.

வீமியட்சரம், குழந்தைகளுக்கு ஈரல் நொந்து காய்ச்சலுடன் மயக்கம், குளிர், தலைவலி, தாகமாகிய விக்குணங்கள் காணும் ஓர் நோய், a disease of the childran marked by fever, giddiness, chill, head-ache, thirst etc. The liver is affected.

வீர கதவுப்பு, வளையலுப்பு, a variety of salt used in making glass bangles.

வீர காந்தம், ஊசிக் காந்தம், loadstone attracting needles.

வீரகேந்திர மங்கை, மூக்குறா, which see.

வீரக்கட்டி, ஓர் மருந்து, a lump of per-hloride of mercury.

வீரக்கட்டு, consolidated per-chloride of mercury. வில்வப் பழத்தைக் கீறி வீரத்தை உள்ளே வைத்து, சீலை செய்து மணல் மறைவில் புடம் போட்டு, இப்படி 10 முறை 10 பழத்தில் போட வீரம் கட்டும், a lump of perchloride of mercury is inserted into the bael fruit, and luted with clay and cloth; then calcined in sand bath; repeat the process 9 more times; the per-chloride gets consolidated; 2. வேண்டிய மட்டும் வீரத்தைக் கொண்டு வந்து சாம்பிராணி வீடை -1; நெல்லிக்காய் கெந்தகம் வீடை-1; இரண்டையும் தூள் செய்து கரண்டியில் இட்டு அனலில் பிடிக்க உருகி வரும் சமயத்தில் வீரத்தைப் போட்டுப் புரட்டி எடுத்துக் கொள்ளவும்; சன்னி வாயு போம்; இதைப் போலவே லிங்கத்தையும் கட்டலாம், another method of preparing the consolidated per-chloride of mercury. Styrax benzoin and sulphur are taken in equal parts and powdered. The two parts of this mixture is melted, and 1 part of per-chloride is put into that melting powder. and roasted. The perchloride gets consolidated it an be used as mediine.

Cinnabar can alos be consolidated in a similar way.

3. வேறு விதம்:- துருசு, படிகாரம் வகைக்கு $1^{1}/_{2}$ விடை வீதம் இரண்டையும் தூள் செய்து அடுப்பில் ஓடு காயவைத்து மேற்படி தூளை 3 பங்காக்கி 1 பங்கை ஓட்டில் தூவி எரிகிற சமயத்தில் 1 விடை வீரத்தைப் போட்டுப் புரட்டி எடுக்கவும்; மற்ற இரண்டு பங்கு தூளையும் இப்படிச் செய்தெடுத்து மறுபடியும் விராகனெடைக்கு சூடத்தைக் கொண்டு வந்து கவசித்துக் கொளுத்திவிட்டால் வீரம் உருகி மணியாகும். per-chloride of mercury is melted and formed into a ball by adopting the following method, copper - sulphate and alum are taken in equal parts and powdered. Make it into three parts. Take one part and melt it in an earthern dish, and put into it an equal part of the per-chloride in one lump. and roast it; repeat the process twice more. Then equal part of camphor and cover the per-chloride with this camphor and burn it. The chloride melts and forms into a ball.

வீரக்கிலேதம், ஓர் வகை மஞ்சள் புண் கழுவுநீர் a yellow lotion for cleaning and dressing ulcers and sores.

வீரக்கொடி, வெற்றிலைக்கொடி, betelvine— Piper betel.

வீரசாகி, சேமரம், marking nut tree — Semicarpus anacardium; 2. அழிஞ்சில், a tree — Alangium delapitallum.

வீர செயநீர், pungent liquid extracted from per-chloride of mercury.

வீர செல்வி, சத்திசாரணை, a prostate plant — Trianthema decandra.

வீரச் சுண்ணம், calcined white powder of per-chloride of mercury which has the properties of calcium i.e., turns, turmeric solution red.

வீரச் செந்தூரம், திருமூலர் வகார வுபதேசம் 200ல் சொல்லியுள்ள ஓர் வகை செந்தூரம், red calcined powder of per-chloride of mercury mentioned in Thirumoolar Vagara upadesam 200.

வீரடங்கல், மருந்தின் வேகமடங்கல், decrease of the virulence of medicine.

வீரண மூலகம், விலாமிச்சவேர், a fragrant root of grass — Coleus osmirrhizon.

வீரணம், இலாமிச்சைவேர், khus -khus — Andropogon muricatus.

வீரணி, மிளகு, pepper — Piper nigrum; 2. விலாமிச்சவேர், fragrant root of a grass — Coleus osmirrhizon.

வீரதட்டி, மான் தோல் பட்டை, which see.

வீரதத்துவம், கொடிவேலி, a shrub — Plumbago zeylanica.

வீரதரம், விலாமிச்சவேர், Coleus osmirrhizon.

வீரதரு, மருது, a tree — Terminalia alata.

வீரதாரு, see விடத்தலை.

வீரதை, வீரம், corrosive sublimate of mercury; Per-chloride of mercury.

வீரத் துக்கதீதம், அண்டச் சுண்ணம், white calcined powder of cranium bones or egg shell.

வீரத்தைப் பெந்தம் பண்ணி, நீர்க்கடம்பு, which see.

வீரநீர், அமுரி, urine.

வீரந்தரம், மயில், national bird — Peacock.

வீரபத்திரக் கலிக்கம், திரிகடுகு, இந்துப்பு, சுத்தி செய்த நேர்வாளம், கடுக்காய் இலவங்கம் சமனெடை கொண்டு வெந்தயச் செடி சமூல சாற்றாலரைத்து மாத்திரை திரட்டி அதையிழைத்து கண்ணிலிடுதல், இதனால் சன்னி சுரம் திரிதோஷம் போம், சீதள வஸ்து நீக்கவும், an eye salve prepared as said above and applied to the eye during delirium.

வீரபத்ராஞ்சனம், சன்னிபாத சுரங்களுக்காக கண்ணிற்கு இடும் கலிக்கம். இது ஆயுர் வேத மருந்து, an Ayurvedic collyrium for delirious fevers.

வீர பற்பக் களிம்பு, ointment containing ammoniated of mercury.

வீரபற்பம், white calcined powder of perchloride of mercury used as medicine; ammoniated mercury.

வீரபாவனை, தென்னங் குரும்பையைக் குடைந்து வீரத்தை வைத்து இதற்கு 6 பங்கிடை விறட்டி கீழ் பாதி மேல் பாதியாகப் புடமிட்டு எடுத்து எடுக்க கால் கட்டு ஆகும். இப்படியே 10 புடமிட்டு எடுப்பதே வீரபாவனை இதனால் வீரம் சுத்தியாகி கால் கட்டாகும். இப்படியே 40-50 தடவை செய்தால் முழுக் கட்டாகும். another method of consolidating the per-chloride of mercury is gien above.

வீரபோக சாதி, பயிரபதி சாதியாகிய ஆண்சாதி 4-ல் ஒன்று. one of the four divisions of men.

வீர மடங்கல், வீரடங்கல், abatement of virulence.

வீரமத்தாளி, யானை நெருஞ்சில், which see.

வீரமணி, திருமூலர் வகார வுபதேசத்திற் சொல்லியுள்ள ஓர் முறை. வீரத்தைக் கட்டி மணியாகச் செய்தது, இதை இழைத்து நாக்கில் தடவ செத்தவனும் எழுந்து பேசுவான். per-chloride of mercury is made into a ball by a process mentioned in Thirumoolar Vagara upadesham 200 It is said that even a dead will come back to life if it applied to the tongue.

வீரமணி, விராடக் குரு என்னும் குருமருந்தினால் வீரத்தைக் கட்டிச் செய்த மணி, perchloride of mercury ball prepared by using விராடக்குரு the uses of வீரமணி கெவுனம் பாய்வதற்கும் வாயிலிட்டு வாயு வேகமாய் நடப்பதற்கும் பிறர் தன்னைக் கண்ட போது நடுங்கும்படி செய்விக்கும், ஓர் வீரத்தைக் கட்டிச் செய்த ஓர் வித மணி; (இதைப் பசுவின் மேல் வைக்க பால் கொடாது.) This ball is useful to make one trael in the air to walk fast, and to make others tremble.

வீர மாதிப் பூண்டு, விஷத்தாரி, which see.

வீர மெழுகு, ஈழை போம். விலாங்கு மீனின் தைலம் வாங்கி வீரத்திற்கு வீரம் கட்டி மெழுகாகும். per-chloride is turned into wax like substance when treated with the fat of eel — Snake like fish — It remoes phlegm.

வீரமெழுகு, 1. பலம் வீரத்தை சீலையிலிட்டு முடிந்து பழங் கலையத்தில் 4 இளநீர் விட்டு அதில் தோலாந்திரமாகக் கட்டி 2 நாழி எரித்து அடுப்புக்கு மேல் தொங்கவிட்டு உலர்த்தி எடுக்கவும், தேன், முலைப்பால், இஞ்சி ரசம் இவைகளில் கொடுக்கவும்; சன்னி சுர தோஷம் போம், இச்சா பத்தியம், மாலை மிளகு கஷாயம் கொள்ளவும்.

Note:- (by C.D.) This is mean purification; it will not become waxy.

வேறு விதம்: வீரம் பூரம் இலிங்கம், சுத்தி செய்த வாளம் திரிகடுகு சம எடை எடுத்து தேன் விட்டரைத்து எடுக்கவும்; கடலை பிரமாணம் கொள்ளப் பேதியாகும். பேதி அதிகமானால் மோர் சாதம் கொள்ளவும். சர்க்கரை அல்லது வாழைப் பழத்தில் கொடுக்கவும், தேன், இஞ்சி ரசத்தில் கொண்டால் சகலவாயுவும் போம், அந்தியில் சுக்கு, மிளகு, கஷாயம் கொள்ளவும்.

Note: (by C.D.) This will cause purging. One must be careful in using it.

வீரம், ஓர் மருந்து, a medicinal drug — perchloride of mercury; 2. மலை, mountain; 3. விலாமிச்ச வேர், khus-khus; 4. இஞ்சிக்கிழங்கு, ginger; 5. வல்லமை, strength; 6. ஓர் யோக நிலை, a posture in yoga posture; 7. ஓரத்தி, a kind of fig tree; 8. கஞ்சி, rice gruel; 9. மிளகு, pepper; 10. வலி, force; 11. மலையில் இயற்கையாய் உற்பவிக்கும் ஓர் வஸ்து, a natural kind of medicine found in the mountains; 12. சவ்வீரம், corrosie sublimate of mercury — Per- chloride of mercury. It is recognised by its heavy weight and crystalline appearance; 13. பரங்கி பாஷாணம், a mercurial compound; 14. தங்கம், refined gold; 15. நஞ்சுக் கொடி, placental cord; 16. வேங்கை, Indian kino tree — Pterocarpus marsupium.

வீரவஞ்சி, வஞ்சிக்கொடி, rattan creeper — Calamus rotang.

வீர வரைத்தல், பெலன் கொண்ட மட்டும் வலிவாக மருந்தைக் கல்வத்திட் டரைத்தல், to grind well.

வீர விருட்சம், சேமரம், marking nut tree — Semicarpus anacardium.

வீர வுப்பு, கல்லுப்பு, rock salt; 2. பூரணாதியுப்பு, a kind of salt; which see.

வீர வைப்பு, மச்சமுனி 800ல் சொல்லியபடி சீனம், வெடியுப்பு, சாரம், கல்லுப்பு, இந்துப்பு, துருசு சரியெடை ரசம் விட்ட அரைத்து காசிக் குப்பியில் வைத்து சீலை மண் 9 செய்து பாண்டத்தில் மணலிட்டு அதன் நடுவில் குப்பியை வைத்து, பிறகு மூக்களவாய் மணலிட்டு எரித்து சாமம் குளிர்ந்த பின் குப்பியை உடைத்துப் பார்த்து அதிலிருக்கும் கருவை எடுத்து இத்துடன் ஆதி, பாரை, வாளனன் இவைகளைப் பொடித்திட்டு குப்பியில் வைத்து முன் போல் எரித்திட ஆறு சாமம் ஆனபின் எடுக்க வீரமாம். The method of preparing per-chloride of mercury is given aboe which see. ஆதி, பாரை; வாளனன், (not-known).

வீராசணம், ஓர் யோக நிலை, இடக்கால் மேல் வலக்கால் போட்டுக் கோ முகம் போலிருந்தல், a posture is yoga practice.

வீராசிகா, தெர்ப்பைப்புல், sacrificial grass.

வீராணிக் கிழங்கு, ஓர் கிழங்கு, a tuber.

வீராணி வாழை.

வீராளிப்பட்டு, மாதவிடாய் சேலை, menustral cloth.

வீரி, வட்டத் திருப்பி, twiner — Cissampelos pareira; 2. பங்கம்பாளை, a bitter prostate plant — Aristolochia bracteata.

வீரிடம், நாவல், a tree — Eugenia cumin; the black plum (Jaman).

வீரிடல், பிறக்குங்கால் வீரிட்டமுதல், the crying of a child at birth — Vagitus uterimus.

வீரீட்டமுதல், as in children — to cry deeply.

வீரிணிகா, வில்வம், a sacred tree — bael tree — Aegle marmelos.

வீரீப்பால், எருக்கம்பால், milk drawn from Calotropis gingantia.

வீரிப் பாவிகம், எட்டிவிரை, seeds of nuxvomica.

வீரிப்பாளை, பங்கம்பாளை, a bitter ash coloured prostate plant — Aristolochia bracteata.

வீரி முத்து, கொட்டை முத்து, castor seed — Ricinus communis.

வீரிய கோவிதை, புளிவஞ்சி, which see.

வீரியக் கலிதம், சுக்கிலம் வெளிப்படல், discharge of semen.

வீரியக் குறைவு, தாதுக் குறைவு, want of formation of ojas in the system; 2. ஆண் தன்மைக் குறைவு, impotency.

வீரிய சத்தி, மூலிகை அல்லது தாதுக்கள் தன்னிடத்திலுள்ள குணங்களைத் தொழிற்படுத்தி காரியங்களுக்கு உதவும்படியான சத்தி, the power in the drugs which makes them to act.

வீரிய சோஷனி, முதியார் கூந்தல், which see.

வீரிய சுக்கு, காரமான சுக்கு, strong dried ginger.

வீரிய சுக்கு செயநீர், காரமான சுக்கினால் செய்த செயநீர், strong solution of ginger.

வீரியதேசு, வல்லாரை, a prostate plant — Hydrocotyle asiatica.

வீரியத் தம்பனம், இந்திரியத்தை வெளியிடாதடக்கல், to prevent the discharge of semen.

வீரியத் தரிசி, வாளானரிசி, which see.

வீரிய நஷ்டம், தாது நஷ்டம், spermatorrhoea.

வீரியப் பிசின், சாலாம் பிசின், which see.

வீரியம், விந்து, semen; 2. வலிவு, strength.

வீரிய வஸ்து.

வீரிய வானி, நபுஞ்சகம், impotency.

வீரிய விருத்தி, தாது புஷ்டி, aphrodisiac.

வீரிய விருத்தி, தென்னம்பாளை அரிசியைப் பசும்பாலில் அரைத்துச் சாப்பிடவும், இருவேளை 40 நாள், அப்போது பெண் போகம் கூடாது; பசும்பால் கொள்ளவும், increase of sexual power mediine for increasing the power is given above.

வீரிய விர்த்தி, சாதிக்காய், அபினி, காமப்பூ. இலவங்கம் சம எடை கொண்டு அரைத்து ஊர்க்குருவி வயிற்றில் வைத்துத் தைத்து நெய்யில் பொரித்து எலும்பு போக்கி அரைத்து கெச்சைப் பிரமாணம் உருட்டி ஆழாக்குப் பாலுடன் 40 நாள் சாப்பிடவும். another prescription for increasing the potency is given above which see.

வீரியன், ஓர் பூண்டு, a plant.

வீரியன்னம், மருள், which see.

வீரியாடி, நரிப்பயறு, a green pulse.

வீரு அண்டம், ஓர் வகை அண்ட நோய், a disease of the scrotum.

வீருதம், படர்ந்து காய்க்குங் கொடிகள், spreading plant.

வீரை, வீரமரம், a tree; 2. வாழை, plantain tree; 3. கடல், sea; 4. துன்பம், affliction; 5. வட்டத் திருப்பி, a twiner — Cissampelos pareira.

வீரைச்செடி, ஓர் செடி, a plant.

வீரோதம், நல்ல மாதுளை, good pomegranate — Punica granatum.

வீர் தருவு, சேங்கொட்டை, marking nut Semicarpus anacardium.

வீர் வீரெனல், வீரிட்டழுதல், shrill cry.

வீலி, வெள்ளி, silver.

வீவதம், இறப்பு, death.

வீவு, சாவு, death.

வீழி, see விழுதி, a plant — Stroemia tertrandra; 2. நீர்முள்ளி, a thorny plant — Asteracantha longifolia; 3. See அயத்தை ஈயமாக்கி; 4. மர விழுது, adventitious root.

வீழி, விழுதி; நாட்டு விழி; இதன் கிழங்கு பசும் பொன்னிறம்; வெட்டி சோதித்து நீர்த்தளத்தில் நிற்கும் மூலியை வெட்டிப் பார்த்தால் நுனியில் தேங்காயைப் போல் இருக்கும்; இதைப் பாக்கு போல் தறித்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு கழஞ்சி இடை கிழங்கையூட்ட லோகமெல்லாம் வெள்ளியாகும், வெள்ளியாம் கிழங்கை யரைத்துக் குகை செய்து சூதத்தை அதிலே வார்த்து அள்ளி அயக் கரண்டியிலிட்டு அடுப்பேற்றி மணற் காடை நெய்யை ஊட்ட துள்ளியே சூதமது உண்டையாகும். வாயிலிட கவுனம் ஓடும்; இதன் இலையை வாயிலடக்க எவ்வளவு தூரமும் ஓடலாம். நிற்கும் போது ஏதாவது ஒன்றை பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும்; வெள்ளியே செந்தூரம் செய்ய வேதை மூலிகைதான், சமூலம் வாங்குமே; இதன் பெரிய வேரை கண்டமிட்டு வெட்டு வெட்டி சோதிப்பார். இச்சமூலத்தை நிழலில் உலர்த்தி தூளாய்ப் பண்ணி அப்பிரக செந்தூரம் கூட்டி 1 மண்டலம் சர்க்கரையில் கொள்ள தேக சித்தியாம் பத்தியமாய் உண்டு தேரு, Its root is used in alchemy. It turns basemetals into silver; mercury into a bead. The processes are given above which see. Powder of the whole plant, if used as a vehicle to redoxide of mica and taken for 40 days. the body is rujuvenated.

வீழிச் சாறு, விழுதிச்சாறு, juice of விழுதி.

வீழிச் சூரணம், வீழிவேர்ச் சூரணம், powder of the root of வீழி.

வீழிப் பட்டை, விழுதிப் பட்டை, bark of விழுதி.

வீழியது கீரை, விழுதிக் கீரை, which see.

வீழ், விழுது, adventitious root.

வீழ்த்தல், நோயால் விழச் செய்தல், causing to fall as from disease or illness.

வீழ்ப் பிரமி, ஒழுக்குப் பிரமியம்; தென்னம் பூவால் போம், gonorrhoea; gleet.

வீழ் வேயம், கொடிச் சம்பங்கி. climbing sampak — Pergularia (minor).

வீறாணிக் கிழங்கு, see வீராணிக் கிழங்கு.

வீறிடல், வீறிட்டழுதல், shrill cry.

வீறிட்டழுதல், குழந்தைகள் வலுத்த குரலோடு அழுதல், make a shrill cry.

வீறிட்டோடல், நோய் முழுதுங் குணப்படல், entirely freed from disease.

வீறு, மருந்து சத்து, essence of medicine; 2. மருந்து சக்தி, power of medicine.

வீறுகம், கொடி நவ்வல், which see.

வீறு குட்டம், virulent leprosy.

வீறு தணிதல், மருந்தின் வேகம் குறைவு படல், abating of the virulence of medicine.

வீறு திங்கனி, அணிற்பிள்ளை, squirrel.

வீறுள்ள, strong — Fortis.

வெ

வெஃகல், ஆசைப் பெருக்கம், intense; desire.

வெகு காமி, பொன்னிமிளை, yellow bismuth; 2. தொழுகண்ணி, which see.

வெகு கொடுமை, வைக்கிராந்த பாஷாணம், a kind of arsenic.

வெகுடு, நாணல், reed.

வெகுட்சி, பூவரசு, portia tree.

வெகுட்டல், அச்சுறுத்தல், to threaten.

வெகுட்டுக் கபம், கபநீருடன் வண்டல் சேர்வதினால் உண்டாகும் ஓர் கபம், phlegm.

வெகுண்டம், கரும்பு, sugar cane — Saccharum officinarum.

வெகுண்டு, see வெகுண்டம்.

வெகு தாவம், விடத்தேர், which see.

வெகுதூர மோடல், பொன்னுக்கு மாற்றுயர்தல், in alchemy to increase the quality of gold.

வெகு பத்திரி, அரிநெல்லி, a tree — Phyllanthus distichus; 2. கறிமுள்ளி, a plant — Solanum indicum.

வெகு பரணி, பெருங்குரும்பை, which see.

வெகு புத்திரி, கீழ்க்காய் நெல்லி, a plant — Phyllanthus nirui.

வெகு புத்திரிகை, நரிப்பயறு, dew gram — Phaseolus aconitifolius.

வெகு மஞ்சரி, துளசி, sacred plant — Ocimum sanctum.

வெகு மூத்திரம், அடிக்கடி நீரிறங்கும் நோய்; அதிமூத்திரம்; இதைத் தண்ணீர் விட்டான் கிழங்கு நிறுத்தும், polyurea. This is cured by water root.

வெகு மூலம், வெட்டி வேர், khus — khus — Vetiveria zizanioides.

வெகுர காலி, see வெக்காலி, a tree.

வெகுரசம், கரும்பு, sugar - cane - Saccharum officinarum.

வெகு ராசகம், வெங்காயம், onion — Allium cepa.

வெகுரூப தரிசினி, அனேக வஸ்துக்களின் வடிவங்களைப் பார்க்கும் கண்ணாடி, Kleidoscope.

வெகு ரூபன், அனேக விதமான வடிவங்களை எடுக்கும் பச்சை ஓணான், chamelion.

வெகுர், சூட்டினால் வரும் பரு, a wort caused by heat.

வெகுலாங்கம், ஆடுதின்னாப்பாளை, a bitter plant — Aristolochea bracteata.

வெகுலாதி, சிற்றேலம், small cardamum.

வெகுலாதிகம், வெட்டுப் பாக்கு, cut arecanut; 2. சிற்றேலம், small cardamum.

வெகுவாச முடையோகி, வசம்பு, sweet flag — Acorus calamus.

வெகு வாதகம், வெட்டி வேர், khus -khus — Vetiveria zizanoides.

வெக்காயம், சூடு, heat.

வெக்காலி, வெள்ளை நாகை, a tree — Anogeissus latifolia; 2. வெண்கருங்காலி (அல்) வெண்காலி.

வெக்காளம், வெக்காளிப்பு, fair weather.

வெக்காளித்தல், மப்பு மந்தாரம் நீங்கல், weather becoming fair.

வெக்காளிப்பு, see வெக்காளித்தல்.

வெக்கை, மாட்டுக்குவரும் ஓர்நோய், a disease in cattle — Rinder pest; 2. நிலக் கொதிப்பு, heat arising from the ground; 3. காங்கை, heat of a closed place.

வெங்கண், வெங்காயம், onion — Allium cepa; 2. ஓர் மீன், a fish with protruburent eyes.

வெங்கண்புள் தோஷம், குழந்தைகளைத் தாக்கும் ஓர் பறவை தோஷம், morbid condition in children said to be caused by a vitiated bird.

வெங்கடுப்பு, அழற்சியின்றி வரும் கண்ணோய், sore eyes without inflammation. See வெண்கடுப்பு.

வெங்கலக் கல்வம், மருந்துகள் உலோகக் களிம்பேறாதபடி வெங்கலத்தினால், செய்த மருந்தரைக்கும் கல்வம், கண் நோய் மருந்துகள் அரைக்கும் கருவி, mortar for grinding medicines made of bell - metal.

வெங்கலக் கல்வம் செப்புக் குழவி, bell metal mortar and copper pestle to grind medicines for the eye.

வெங்கலத் தங்கம்

வெங்கலத் தாலம், வெங்கலத் தட்டு; தாம்பாளம்; plate or dish made of bell - metal.

வெங்கல நிமிளை,

வெங்கல மலை,

வெங்கலம், இரண்டு பாகம் செம்பும் ஒரு பாகம் வெள்ளீயமும் சேர்த்து உருக்கி வார்த்து, கிண்ணி முதலிய பாத்திரங்கள் செய்யுமோர் உலோகம், an alloy of 2 parts copper and one part of tin (Pewter). See வெண்கலம்; Bell metal. queens metal, any amalgam of zinc and copper. Bell metal as used in medicines is an alloy of copper and tin. It is used in combination with other metals and is regarded as tonic and alterative. It is purified and calcified in the same weay s copper. See நித்திய நந்த ரசம்.

வெங்கா பத்திரகம், மருவகம், which see.

வெங்காயக் கிழங்கு, நாக்கு அட்சரத்தைப் போக்கக் கூடிய வெங்காயத்தின் அடி மூலம், bulb of onion capable of removing ulcers on the tongue. It is a vegetable of all round value. It assits digestion and gives tongue to the stomach and is a good sepific for indigesdtion. It increases the healthy action of kidneys and producesd proper sleep. It is long used for ulcer stomach. The syrup of onion is specific for colds and cough even for colds in the chest and throat. The gas from the well crused onion heals chronic ulcers when they are exposed to it. It is a good disinfectant. A regular eater of onions will be proof against most of the germ diseases.

வெங்காயக் கோரை, ஓர் புல், a kind of grass.

வெங்காயத் தழை, வெங்காயத்தினிலை, leaf of onion.

வெங்காயப் பூ, onion flower; குன்மம், குடல் வாத நோய் அறவே போம்.

வெங்காயம், ஈருள்ளி, onion — Allium cepa வகைகள்; varieties; 1. வெங்காயம்; 2. ஈர வெங்காயம்; 3. நரி வெங்காயம்; 4. வெள்ளை வெங்காயம்; 5. சிறு வெங்காயம்.

வெங்காயம், இதில் 2 வகையுண்டு; சிவப்பு, வெள்ளை; சில சமயங்களில் வெள்ளை வெங்காயம் என்று பூண்டுக்குப் பேரிட்டு அழைப்பதனால் வெண்மையான வெங்காயத்திற்கும் இது ஆகுமோ என்று சந்தேகத்திற்கு இடமாகிறது. வெங்காயத்தைப் பிரசவஸ்திரீ உணவாக எடுத்தால் பால் சுரப்பது நின்றுவிடும்; இதன் சாற்றை மூக்கினால் உறிஞ்ச சுவாசயத்தின் மூர்ச்சியின் அழற்சியையும் தடுக்கும்; இதை நமது நாட்டில் ஈருள்ளி என்றும் சொல்கிறார்கள்; உள்ளி யென்றும் கூறுகிறார்கள்; இதற்கு உஷ்ணதாரி, சீதளகாரி மூத்திரவர்த்தனகாரி, ஷோனகாரி குணங்களும் உண்டு. வெங்காயம் தேக உஷ்ணம், சிரங்கு உஷ்ணபேதி மூலச்சூடு இவைகளைக் குணப்படுத்தும்; இதை காய்கறிகளுக்கும் மற்ற பதார்த்தங்களுக்கும் முக்கியமாய் உபயோகிக்கிறார்கள்; பூ வயிற்றுவலி குன்மம் குடலைப் பற்றிய வாத நோய் இவைகளைக் குணப்படுத்தும்; விதை, மேகம், மூலம், நீரெரிச்சல் இவைகளை நீக்கும், வாய்வுகளை நீக்கி, தாது புஷ்டியை உண்டு பண்ணும், வெங்காயத்தை பில்லையாக அறுத்து தோரணமாக கயிற்றில் கட்டி வைத்தால் பிணம் நாறிப் போகாமல் இருக்கும். It is used as condiment. It acts as refringent

stimulent and diuretic. It is capable of healing chronic ulcers.

வெங்காரப் பொடி, விரணங்களுக்கு போடும் மருந்து, Borax powder for dusting ulcers.

வெங்காரம், இதை வெண்காரம் என்றும் பொரிகார மென்றும் டங்கணம் என்றும் சொல்வதுண்டு, ஏரிகளின் ஜலங்கள் வற்றிப் போய் இந்த உப்பு ஐரோப்பா, திபெத்து, பெரு முதலிய தேசங்களில் உண்டாகிறது; சாரயத்தில் போட்டால் கரையாது; ஆனால் ஜலத்தில் கரையும்; கடையில் விற்பவை சுத்தமானவை யல்ல; ஆகையால் அதை தேவையானவர்கள் வீட்டில் சுத்தி செய்து கொள்ளலாம். இது தித்திப்பு, துவர்ப்பு குளிர்ச்சியையுடைய ருசியை உடையது. காற்றாரமாக வைத்தால் அதன் மேல் தூள் படியும்; நெருப்பில் போட்டவுடன் நீர் தோன்றி சிறிய துவாரங்கள் காணப்படும்; இதற்கு சீதளகாரி, மூத்தர வர்த்தனகாரி, ருதுவர்த்தனகாரி, பிரஸவகாரி, ஹஸ்மபீகரஹாரி குணங்களுண்டு; மேலே பட்டால் உஷ்ண காரியாகும். துத்தி ரோகம், வாய் விரணம் அக்கி முதலியவை குணப்படும். நாக்குப் புண்ணுக்குப் ரஸவேகத்திற்கும் வெங்காரத்தோடு ஜலத்தைச் சேர்த்து வாய் கொப்பளிக்க மேல் சொன்ன நோய்கள் குணமாகும். இதனோடு ஜலத்தைக் கூட்டி துணியில் நனைத்து முலைக்காம்பு விரணம் வெடிப்புக்கு மேலுக்குப் போட குணமாகும்; வெங்காரத்தோடு பன்றி நெய்யைச் சேர்த்து மூல ரோகத்திற்கும் போட அது தீரும்; ஸ்தீரிகளுக்கு பிரமேகம் காணும் போதும் கர்ப்ப மேகத்திற்கும் வெங்காரத்தை ஜலத்தில் சேர்த்து பீச்சாங் குழல் வழியாய் பீச்ச மேற்கண்ட நோய்கள் தீரும்; வெங்காரத்தோடு ஜலத்தையாவது கர்ப்பூர ஜலத்தையாவது சேர்த்து உபயோகிக்க நீர்த்துவாரத்தில் காணும் எரிச்சல், ரத்த சர்ம ரோகம், கொசுக்கடி, வேர்க்குரு, பித்தமுழும்பு இவைகள் குணமாகும்; வெங்காரத்தையும் கருவாப்பட்டைத் தூளையும் கொஞ்சம் சஞ்சியோடு சேர்த்து மந்தப் பிரசவங்களில் காணப்படும் நீர்க்கட்டு, பிரசவங்களில் காணும் வலிப்பு or இசிவுகளுக்கும் தகுந்தவாறு உபயோகிக்க குணமுண்டாகும். சூதகக்கட்டு, சூதகச் சூலை, சூதகபாண்டு, பெரும்பாடு, மகேசதரம், காக்கை வலி, பிரசவ அதிசாரம், மந்தப் பிரசவவேதனையில் கருப்பையைச் சுருங்கச் செய்வதற்கும் மூத்திரக் குண்டிக்காய் ரோகத்தில் யூரிக் (wric acid) அதிகமாய் நின்று

போவதற்கும் ரஸ முறிவிற்கும் தகுந்தவாறு உபயோகித்தால் குணப்படும். வெங்காரத்தூறோடு சுத்த சலத்தையாவது கற்பூர சலத்தையாவது சேர்த்துக் கந்தைத் துணியில் நனைத்து போட அரையாப்புக் கட்டியின் வீரணம், அழுகல் விரணம் இவைகள் குணமாகும்; வெங்காரத் தூளையும் காசுக் கட்டித் தூளையும் சேர்த்து, களிம்பு செய்து இரணங்களின் மேல் போட இரணங்கள் ஆறிக் குணப்படும். விளாவின் காடியோடு வெங்காரத்தைச் சேர்த்து படர்தாமரை , மேக ஊறல் இவைகளுக்கு உபயோகித்து வந்தால் மேற்சொன்ன வியாதி சொஸ்தமாகும். the uses of borax are given above. It acts as diuretic. refrigerant, parturi fecient, emmenagogue and is capable of remoing stones from the bladder and kidney. it can he used during delivery time to inrease the labour pains, and for fits. இதனால் தவளைச் சொறி, புடைகுன்மம், ரத்த மூலம், அசுமரி பங்குவாதம், மூத்திர கிரிச்சரம் போம், It cures toad's skin, ringworm, gunmam, stone bladder, disurea etc. Sold in transparent, colourless, crystalline masses or pieces of various sizes; inodorous with a cool saltish, styptic taste. After exposure to air becomes covered with a whitish efflorescence. Medicinally astringent. Its solution is used as lotion and for gurgling; 2. பொரிகாரம், borax; gold smith's salt — Sodac biboras. It melts gold.

வெங்குமரிப்பூடு, பேராமணக்கு, castor plant producing large seeds — Ricinus communis.

வெங்கை படுகனி, சீந்திற் கொடி, mooncreeper — Tinospora cordifolia.

வெங்கொதிப்பு, great heat.

வெங்கோஷ்டம், ஓர் மருந்து, a drug.

வெச்சி முருக்கி, மார்பு, chest.

வெச்சு வெந்நீர், சுடுநீர், hot water.

வெச் செனவு, சூடு, heat.

வெஞ்சந்துவர், (false kamale) — Casearia esculenta.

வெஞ் சோறு, hot cooked rice.

வெஞ்சனம், பாகல், carilla fruit — Momordica charantia; 2. கறிபதார்த்தம், sidedishes.

வெடங்குறுணி, see அலம்பல் மரம்.

வெடி, கள்; toddy; 2. நறுமணம், fragrant smell; 3. சிற்றேலம், small cardamums; 4. பொட்டிலுப்பு, nitrate of potash — Salt petre.

வெடி கரப்பான், a kind of eczema with fissures.

வெடிகாரம், சிலைக்காரம், salt petre.

வெடி கிரந்தி, வெடித்துப் புண்ணாகும் ஓர்வகைக் கிரந்தி, a kind of abscess or ulcer.

வெடிகுண்டு காயம், gun shot wound.

வெடிக்கவிட்டு போடல், ஓமம், சீரகம் முதலிய சரக்குகளை சட்டியிலிட்டு வெடித்த பிறகு மருந்திற் கலக்குதல், to slightly fry before using in medicine e.g., cumin, omum.

வெடிக்கன்று, Toposi ebony of Bengal — Dyospyros toposia.

வெடிக்குஞ் சூரி, நத்தைச் சூரி, whih see.

வெடி சன்னி, காதினுள்ளே திரண்டெழுந்து மிக்க குத்தலுடன் வலியை யுண்டாக்கி, சேதப்படும்படி முகத்தைத் திருப்பும் ஓர்வகைச் சன்னி, delirium caused by an eruption in the ear whih is attended with great pain and disfigures the face.

வெடி சிரங்கு, தலையிற் காணுமோர் சிரங்கு, Eczema head.

வெடி கல்ணாம்பு, நீறாக்கிய சுண்ணாம்பு, slaked lime.

வெடி சுண்ணம், calcined white powder of salt petre which ats as calcium i.e., turns the turmeric solution red.

வெடி சூலை, வெடித்த சூலை, ஓர் வகைச் சூலை, a kind of rheumatism.

வெடித்த குரல், கடுமையான குரல், hoarse voice.

வெடித்த புண், ulcer that has just appeared.

வெடித்தல், பிளத்தல், being split; being cracked — Vibices.

வெடி பகீரதி, படிகாரம், Alum.

வெடிப்பஞ்சு, tender fruit that has just formed.

வெடிப்பரங்கி, ஓர் வகை பரங்கிப்புண், a venereal sore.

வெடிப்பலவன், படுவன் கீரை, a kind of greens.

வெடிப்பலா, ஆனைப்பலா, wild durian — Cullenia excelsa.

வெடிப் பில்லி, சூனியத்தினால் உடம்பில் வெடித்து

ரணமுண்டாகச் செய்யுமோர் நோய். disease caused by sorcery or witch craft. and it is marked by fissures and ulcers all over the body.

வெடிப்பிளந்த கால், வெடிப்புள்ள குதிங்கால், fissured heel.

வெடிப்பு, பிளப்பு, Fissure; rupture பிளவு, cleft; scissure.

வெடியுப்புக் கிரந்தி, ஓர் வகைக் கிரந்தி நோய், a kind of tumour.

வெடிப்புண்ட கால், பித்தாதிக்கத்தினால் வெடிப்பாகி வலியைத் தரும் குதிகால். fissured heel.

வெடிப்பு விரணம், fissure forming an ulcer.

வெடியச்சரம், stomatitis.

வெடியடங்க வறுத்தல், as common salt to fry till the cracking sound ceases.

வெடியாதி, சீந்திற் கொடி, moon-creeper — Menispermum cordifolium.

வெடியுப்பு; ஓர் உப்பு, salt petre — Potassium nitrate; 2. பூநீரில் காய்ச்சும் ஐந்தாம் காய்ச்சலுப்பு, a salt which is prepared after five process from fuller's earth; 3. பொட்டிலுப்பு, salt petre; 4. தலைமுடியுப்பு, salt prepared from the human skull. Impure potassium nitrate. It consists of white crystalline masses possessing a saline taste. it exists in a natural state in many parts of India. Those sold in the bazaars are some times are not sufficiently pure for internal use and it may be readily cleansed by dissolving it in hot water, straining and setting the solution aside to crystalise needle shaped crystals will be formed, and they are pure. Salt petre stimulates the skin, and the kidney increases perspiration and flow of urine and so colling the body. It is very useful in fevers in inflammatory affections, common colds, rheumatism, gout, bronchitis etc.

Note:- Although nitre was unknown to Ayurveda, it was frequently used in Tamil Siddha Medicine, from remote periods. There is no recognised name for it in Sanskirit, but it is now called under the name 'Soraka' apparently a newly coined name. It is not correct, to surmise that the manufacture of nitre was introduced into India after the adoption of gun powder an implement in warfare. It is also not correct to say that nitre is Yavakshara *(யவட்சாரகு)* which is only an impure caronate of potash.

The one used in Tamil medicine is said to be impure potassium nitrate & it is used only after purification.

Several are the mediines prepared with it in Siddha with miracullous properties. The preparations are வெடியுப்புக் கட்டு (consolidated nitre) வெடியுப்புச் சுண்ணம் (calcined powder of nitre with basic element of calcium) வெடியுப்புத் திராவகம் nitrous acid in its low valency. several medicines are prepared with this dravagam (acid). Some mysterious properties are attributed to this and research alone can divulye this.

வெடியுப்பீயம், nitrate of lead — Plumbinitras. It is astringent and deodoriser.

வெடியுப்புக் கட்டி, கொறுக்காய்ப்புளி, a thorny tree — Pithecolobium dulce; 2. சுரபுன்னையின் வேர் சாறு, juice of the root of சுரப்புன்னை; which see.

வெடியுப்புக் கட்டு, அம்பளங்காய், a plant — Spondias mangifera; 2. consolidated petre. 2. தலை யோட்டின் மாவு மேல் கீழ் வைத்து எரிக்க மேற்படி உப்பு கட்டும், a single piece of salt petre is placed in the midst of cranial bone powder and heated. It gets consolidated.

வெடியுப்புக் கட்டு, வெடியுப்பை வேங்கை செயநீரில் போட்டுக் காயவைத்து எடுக்கக் கட்டி விடும்; கட்டியபின் கரி நெருப்பில் வைத்து உருக்கிட இளகி உருகும். இந்த வெடியுப்புக் கட்டுக்கு தாம்பரத்தில் 100-1 கொடுத்து ஊதினால் வெள்ளியாகும். இதை வங்கத்தில் 200-1 சேர்த்து உருக்கினால் 8/2 மாற்று வெள்ளியாகும்; நாகத்திற்கு 200-1 கொடுத்து விரைவாக ஊத 8/2 வெள்ளியாகும்; இவ்வெடியுப்பு கூட்டு மருந்தை அரிசி எடை 3 நாள் சாப்பிட குன்மம் போம். the method of preparing consolidated saltpetre, and its alchemical use, and medicinal use are mentioned above.

வெடியுப்புச் சுண்ணம், ஓர் வகைச் சுண்ண மருந்து. இதை இரண்டு மண்டலம் சாப்பிட இதனால் நரப்படைப்பு போகும். சதை வலுத்திடும்; தகம் மெத்த நாளிருக்கும்; வாசி திறக்கப்படும்; நரை திரை பறக்கும்.

வெடியுப்புச் சுண்ணம், a kind of calcined medicine with basi property of calcium prepared out of salt-petre.

வெடியுப்புத் தம்பி, புளி நறளைக் கிழங்கு, root of a plant — Cissus acida.

வெடியுப்புத் திராவகம், acid prepared out of potassium nitrate and other minerals.

வெடியுப்புத் திராவகம், வெடியுப்பினாலிறக்கிய திராவகம்; nitric acid; 2. வாலை நீர், a medicinal liquid obtained by distillation; 3. வாய் நீர் saliva; 4. குமரி நீர், urine of a female; 5. அண்ட நீர்; See பூகிமுனி.

வெடியுப்பைக் கண்டவர், வெடியுப்பைக் கட்டியவர், one who has consolidated salt petre.

வெடியுப்பு மண்,

வெடியோசைக்காரி, அண்டக்கல், which see.

வெடிரசம், ஓர் வகை ரசம், fulminating mercury.

வெடிலுப்பு, see வெடியுப்பு.

வெடுபாலை, see பாலை; a tree.

வெட்கலை,

வெட்கம், நாணம், modesty.

வெட்கிளுவை, ஓர்விதக் கிளுவை, a tree.

வெட்சி, ஒரு மரம், a tree — Ixora coccinea வகை — varieties; 1. வெள்ளை வெட்சி; 2. சிவப்பு வெட்சி.

வெட்சிப்பூ ஓர் வாசனைப் பூ a fragrant white flower — of Ixora coccinea; 2. மோகச் சூடு சுரம், தாகம். ஆயாசம் போம்.

வெட்டதிரா மூலி, யானை நெருஞ்சில், which see.

வெட்டல், வெட்டுதல், cutting; 2. கொல்லுதல், killing.

வெட்டவெளி, வழலையுப்பு, which see.

வெட்ட வெளி விமலன், கல்லுப்பு, rock salt (See கொங்கணர் சூத்திரம் - 40).

வெட்டறா மூலி, see நத்தைச் சூரி, spermacoce.

வெட்டி, இருவேலி, வெட்டி வேர், khus khus, — Vetiveria zizanioides. See வட்டை, and நீர் வெட்டி.

வெட்டியான், ஓர் பூச்சி, an insect.

வெட்டிரம், இலந்தை Indian plum — Zizyphus jujuba.

வெட்டிவேர், இதுதான் விழல் வேர். குறுவேர், விலாமிச்சை வேர் என்று பல பெயர்களால் வழங்கப்படும். இது தக்ஷிண

தேசத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஓர் விதப்புல்லின் அடிவேர்தான் வெட்டி வேர்; இது சந்தன மரத்தைப் போல் மிகுந்த வாசனையாயிருக்கும்; ஆகையினால் வீடுகளில் தண்ணீரிலும் தட்டியாகவும் உபயோகிக்கிறார்கள்; இதனால் விசிறியும் செய்வதுண்டு; இதை கஸ்கஸ் என்றும் அழைப்பதுண்டு.

இதன் வேர் வருஷத்திற்கொருமுறை துளர்க்கும்; அடி வேர் 3-6 அடி உயரம் இருக்கும்; மிருதுவாகவும் தக்கையாடு கூடியும் இருக்கும். இலைகள் அதிக நீளமானதாகவும். ஓரத்தில் கூர்மையாகவும், முனையோடு கூடியும் உளதாகும். மும்மூன்று புற்கள் ஒன்றாய் சேர்ந்திருக்கும்; பூக்கள் இரட்டையாயிருக்கும்; இது பாலக்காட்டிலும், டில்லி, நாக்பூர் தக்ஷிணத்தில் விசேஷமாய் உண்டு. இந்தப் புல்லினின்று ஒரு வாசனை எண்ணெய் எடுப்பதுண்டு; அதற்குப் பேர் நீமார்; எந்த மிருகம் இந்தப் புல்லைத் தின்கிறதோ அதன் பாலும் அதே வசனையாக இருக்கும்; மேற்படி எண்ணெய் வாலுகையில் இறக்குவது கைகால் பிடிப்புக்கு பூசலாம். இதன் வாசனைக்காக வாசனைத் திரவியங்களில் கலப்பதுண்டு; வேர்வையை யுண்டாக்குவதுடன் உற்சாகத்தையும் கொடுக்கும்; மேற்படி எண்ணெய் தலைமயிர் விழாதபடி காக்கும்; மயிர் வளரும்; இதன் கஷாயம் சுரத்திற்கும் கைகால் பிடிப்பு சூதக வாயுவுக்கும் உபயோகிக்கப்படும்; உற்சாகத்தைக் கொடுக்கும்.

இதற்கு உஷ்ணகாரி, ஸ்வேதகாரி செய்கைகளுண்டு. பித்த ரோகம், காமாலை, சோகை, சுரம், குட்டம், தலை நோய், கழுத்து நோய், சக்கில நட்டம், உன் மத்தம், திரிதோடம் மூர்ச்சை, நேத்திர ரோகம், முதலிய நோய்கள் குணமாகும். இதை ஸ்திரீகளுக்கு ஸ்தனங்களில் காணும் சிலந்தி. அக்கினிவிரணம். வித்திரக்கட்டி, மேகக்கட்டி, இவைகளுக்கு மேலுக்கு உபயோகிக்கலாம். khus-khus whitish yellow root — Vetiveria zizaniodes. It contains a resin and volatile oil. It is a stimulent, diaphoretic, and aromatic.

Note:- இது வெண் மஞ்சள் நிறம் நீளம் அடர்த்தியாகக் கூந்தலைப் போல் நீளமாகவிருக்கும்; இதை விலாமிச்சை வேர் என்றும் கூறுவர்.

வெட்டு, புழுவெட்டு, ஓர் கண்ணோய், loss of eye lashes or any hair in the body; 2. வெட்டுதல், killing; 3. வெட்டுக்காயம், cut wound.

வெட்டு, பச்சை வெட்டு, mineral medicine not subjected to heat; 2. வெள்ளை குங்கிலியம், a resin — oswellia serrata (resin).

வெட்டுக்கல், சொறிகல், laterite.

வெட்டுக்காயப் பச்சிலை, a plant — clitoria ternata.

வெட்டுக் காயம், கத்தியால் வெட்டுண்ட காயம், cut wound or injury caused by cutting; incised wound.

வெட்டுக்கிளி, ஓர் பூச்சி, grass hopper.

வெட்டுக் குருந்து, tender shoot or sprout of palm tree.

வெட்டுச் சந்தம், சந்தனச் சிராய், Pieces of Sandal wood.

வெட்டுடையாதி, காட்டெருமை, wild buffalo.

வெட்டுணி, திப்பிலி மூலம், root of longpepper — Piper longum.

வெட்டுண்ட சக்கரம், யோனி, vagina (வெட்டுண்ட சக்கரத்தால் வேண பொருள் அழித்தேன்).

வெட்டுண்ட புண், see வெட்டுக்காயம்.

வெட்டுப் பாக்கு, இலவங்கச்சில் பாக்கு, cutareca nut.

வெட்டுப்புண், ulcer caused by a cut.

வெட்டு மாறன், ஓர் போதையுள்ள வஸ்து intoxicating substance.

வெட்டுருக்கு, நவலோகத்திலொன்று; அதாவது கருவங்கம், one of the nine metals lead.

வெட்டை, பிரமேகச் சூடு venereal heat; 2. உடம்பின் கொதிப்பு; internal heat of the body; 3. நிலக்கொதிப்பு, heat of the ground; 4. ஓர் நோய், a disease; gleet; 5. வெள்ளை, gonorrhoea; 6. உஷ்ணம், heat; 7. brittleness of a metal — not malleable.

வெட்டை கொள்ளல், to be troubled by great heat in the body.

வெட்டைக்கிரந்தி, வெட்டைச் சூட்டினாலேற்பட்ட கிரந்திப்புண், rashes caused by venereal disease.

வெட்டைச்சுரம், உடம்பின் அதியுஷ்ணத்தினால் வந்த காய்ச்சல், fever due to venereal heat.

வெட்டைச்சூடு, பெண் போகத்தினாலேற்பட்ட சூடு, heat caused by intercourse — Venereal heat.

வெட்டை நாள், very hot weather.

வெட்டை நீரொழுக்கு, venereal discharge.

வெட்டை நீர், urine of a person suffering from gleet.

வெட்டை முடிதல், மேகவெட்டை தீர்தல், cure of venereal affection.

வெட்டையனல், வெட்டைச் சூடு, congenital heat.

வெட்டையாய்ப் போதல், தீய்ந்து போதல், over heated not malleable; becoming brittle.

வெட்டைவாள் கூடு, வீட்டில் கட்டுகிற அரக்கு, lac taken from the wasp nest built in houses; 2. குழவிக் கூடு, wasp nest.

வெட்பலா விகம், வெள்வேல், white babool, which see.

வெட்பாலரிசி, ஓர் கடைச் சரக்கு மூலிகை; குடல் வாதம், வயிறு பொருமல், பித்தவாத தொந்தம் போம், seeds of வெட்பாலை Wrightia tinctoria.

வெட்பாலை, இம்மரத்தின் வேர்ப்பட்டை இலைப்பட்டை சீதபேதியைப் போக்கும்; இதைக் கஷாயமிட்டு அபினியுடன் சேர்ந்து பேதி, சீத பேதிக்கு கொடுப்பதுண்டு; மேற்படி விரையையும் (வெட்பாலை அரிசி) கஷாயமாக உபயோகிக்க சுரம், அசீரன பேதி, கிரிப் பூச்சி இவைகளுக்குக் கொடுக்கலாம். இதற்கு வெப்பாலை என்றும் பெயர்; இதன் விரை பேதி, பைத்தியவாத தொந்தம், கடுவன், குடல் விர்த்தி ரோகம், வயிற்றுப் பொருமல் இவைகளை நீக்கும், இது கசப்பாய் இருக்காது; பட்டைக்கு தாருட்டியகாரி, சங்கோசனகாரி குணங்களுண்டு. இதைச் சுரத்திற்கு உபயோகப்படுத்தினால் குணமாகும்; a tree - Nerium anit - dysentericum alias Holarrhena anti-dysentericum. The bark and seeds are used in medicine. They are used as tonics and astringents.

வெட்பாலை யரிசி, see வெப்பாலரிசி.

வெட்பாலை விதை, see வெட்பாலரிசி.

வெட்பாவட்டை, ஓர் பாவட்டை, a kind of Pavetta indica; 2. ஆடாதோடை, a shrub - Adhathoda vasica.

வெட்பூண்டு, வெள்ளைப் பூண்டு, garlic - Allium sativum.

வெட்பூலா, வெட்பூல், ஓர் சாம்பல் வர்ணமான பூலா, a variety of poola.

வெண், வெள்ளை, white; 2. சுத்தமான, pure; 3. வெள்ளைப் பாஷாணம், white arsenic.

வெண் அடம்பு, name from colour of flowers - lite goat foot - Ipomaea repens alias I rugosa alias. I beladamboo.

வெண் அல்லி, white water lily.

வெண் கடம்பு, ஓர் வகைக் கடம்பு, a variety of Cadamba. Indian Oak - Barringtonia racemosa; 2. Eugenia racemosa - a flowering tree.

வெண் கடலி, வெண் தேக்கு, white teak - Lagerstoremia lanceolata.

வெண்கடலை, ஓர் வகைக் கொண்டைக் கடலை, white Bengal gram - Cicer arietinum.

வெண் கடவன், see வெண்கொட்டை.

வெண் கடிகம், வெப்பாலை, which see.

வெண்கடுகு, வெள்ளைக் கடுகு, white mustard - Brassica alba.

வெண் கடுகு ரோகிணி, white hellebore - Helleborous foetidus.

வெண் கடுக்காய், white gall nut.

வெண் கடுப்பு, ஓர் கண்ணோய், disease of the eye.

வெண் கட்டுக்கொடி, சிறு கட்டுக் கொடி, small variety of coagulating creeper - Coculus villosus.

வெண் கண், see வெங்கண்.

வெண் கண்டங் கத்தரி, வெள்ளைக் கண்டங் கத்திரி, thorny plant bearing white flowers and fruits - Solanum jacquini.

வெண் கண்டர், வெள்ளைத் துரிசி; பால் துத்தம், white vitriol - Zinc sulphate (country)

வெண் கமலம், வெண்டாமரை, white lotus.

வெண் கரந்தை, a rare plant - bearing white flowers.

வெண் கரப்பான், see பாற் கரப்பான்.

வெண்கரு, முட்டையின் வெண்கரு, white of an egg - Glair.

வெண்கரு, (பரிபா) சுக்கிலம், semen; 2. the albumen or white of an egg - a viscous substance generally colourless but becoming opque on coagulation.

வெண் கருங்காலி, வெக்காலி, see, வெள்ளைக் கருங்காலி.

வெண் கருங்குழல், தாமரைக் கிழங்கு, root of lotus.

வெண்கருச் சத்து, முட்டையில் வெள்ளைக் கருவைப் போன்ற சத்து, protein or albuminoids.

வெண்கரு நீர், முட்டையின் வெண்கரு, white of an egg.

வெண்கரு போன்ற, முட்டையின் வெள்ளைக் கருவைப் போல், resembling the white of an egg - Albugineous.

வெண் கரும்பு, ஆலைக் கரும்பு, white sugarcane - Saccharum officinarum.

வெண் கருவிளை, வெள்ளைக் காக்கணம், a twiner bearing white flowers - Clitoria ternalia.

வெண்கலச் சிலை, ஓர் வகை உபரசச் சரக்கு, a mineral stone - one of the 120 kinds of natural substances referred to in Tamil Siddha Medicine.

வெண்கல நிமிளை, அம்பாரை, bismuth; a tonic.

வெண்கல பற்பம், வெண்கலமாகிய உலோகத்தைப் புடமிட்டு நீற்று குலை வாய்வு, க்ஷயரோகம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் பற்பம், white calcine powder of bell metal used for diseases such as rheumatism consumption etc.

வெண்கபலப் பற்றவைப்பு, bronze welding.

வெண்கலப் பாத்திரம், வஸ்துப் பாத்திரத்திலொன்று, vessel made of bell metal.

வெண்கலம், செம்பு மிகுதியாயும், ஈயம் குறைவாயும் கலந்த உலோகம், bronze - an alloy of more copper and less of tin.

வெண்கலம், see, வெங்கலம்.

வெண்கலக்கம்.

வெண்கலி, வெண் கடுகு, white mustard - Brassica alba.

வெண்கலைக் காயா, coromandal Jamoon; white jamoon - Euginia bracteata.

வெண் கல், படிகக் கல், white stone; white translucent quartz. Pue silica crystalising in the hexagonal system; 2. வெள்ளைச் சுக்கான் கல், white limestone.

வெண்கல்கொட்டை, மலை வெண் கொட்டை, a hill tree - Loptopetallum wightianum.

வெண் கல்லு, சலவைக்கல், white stone - marble stone - Cilablustcr.

வெண் கழற்சி, வெள்ளைக் கழற்சிக் கொடி, thorny creeper bearing white bonduc nut - Caesapinia bonducella (alba).

வெண் கழுத்து நாரை, white necked stork.

வெண்களி, வெள்ளைக் கரும்பு, white sugarcane - Saccharum officinarum.

வெண் களி மண், வெள்ளைக் களிமண், whiteclay - clay marl.

வெண் கற்றுகள், சலவைக்கற் பொடி, marble dust.

வெண் கற்றை, சவரிக்காரம், which see.

வெண் காகம், வெள்ளைக் காக்கை, white crow.

வெண்காக் காட்டான், வெள்ளைக்காக் காட்டான், a twining plant - Clitoria ternatea (albiflora)

வெண்காக்கணம், வெள்ளைக் காக்காட்டான், a twining plant bearing white flowers - Clitoria albifloria.

வெண் காக்கியம், வெள்ளை மிளகு, white - pepper - piper nigrum.

வெண் காக்கை, வெண்காக்கணம், which see.

வெண் காசம், ஓர் வகைக் கண்ணோய், an eye disease.

வெண் காசுக்கட்டி, வெண்ணிறமான காசுக்கட்டி, white catachew - Palladium.

வெண் காந்தள், வெள்ளைப் பூவுடைய காந்தள், november flowers plant bearing white flowers - Gloriosa superba - opposite of செங்காந்தள்.

வெண் காமாலை, ஓர் வகைக் காமாலை நோய், a variety of jaundice.

வெண்காய சித்திச்சி, see முண்டினி விருட்சம்.

வெண்காயத் தாள், வெங்காய இலை, onion leaves.

வெண்காயம், ஈருள்ளி, onion - Allium cepa.

வெண்காய் வேளை, வெள்ளைக் கொள்ளுக்காய் வேளை, white species of கொள்ளுக்காய் வேளை, plant - Tephrosia purpurea.

வெண்காரக் களிம்பு boric ointment.

வெண்காரக் குடோரி, வாதம் செய்யும் போது உருக்கு முகத்தில் உபயோகிப்பது, a mixture of borax (acts as a catalatic agent) added to aid quick melting of substances in alchemy.

வெண்காரசிகம், see வெப்பாலை, a tree.

வெண்கார சுத்தி, Purificaton of borax. It should be burnt on fire to produce what is called பொரித்த வெண்காரம்; பொரிகாரம், so also alum.

வெண்காரச் சுண்ணம், முப்பூச் சுண்ணம், a king like medicine prepared of the three salts; 2. வெங்காரத்தினின்று புடமிட்டெடுக்கும் ஓர் வகைச் சுண்ண மருந்து, a calcined powder prepared of borax.

வெண்காரத் தூள், powder of borax; boric powder.

வெண்காரப் பதங்கம், ஓர் விதப் பதங்கம், boric acid.

வெண்காரப் பலகை, வெண்காரத்தை வாத வித்தையால் உருக்கிப் பலகை போல் உருக்கிச் சாய்த்தல், in alchemy borax is melted and as a plate.

வெண்கார மது, வெண்காரத்தினின்று தயாரித்த தேன்; borax honey.

வெண்காரம், பொரிகாரம், borax - Bar borate of soad - Sodium biboras; இது வாய்ப்புண், உதடு வெடிப்பு, முலைகாம்பு வெடிப்புகளுக்கு மேலே தடவலாம்; 2. 3 மாதத்திய கருப்பிண்டம், foetus of third month. (sodium biboras) Sodium pyroborate - NaTB2O2 + 10H2O. It is obtaine by boil of sodium carbonate. It is repigerant, diuretic, emmenagogue and parturifacient; locally applied it is stimulant used as flux for metals by gold - smiths.

Note: It enters into composition of many medicinal prepartions and so it is long known to Hindus. It is brought from Tibet, Nepal, Himalayas, etc. It is used in cases of loss of appetite, diarrhoea, painful dyspepsia. Cough, asthma and skin diseases, It is employed in preventing abortion and promoting uterine contractions.

வெண்கார லவணம், சாறு வாரத் தழைகளில் சாறு வரச் செய்யும் ஓர் வகை தயாரித்தவுப்பு, a prepared salt which is capable of extracting juice from brittle leaves which ordinarily don't yield juice.

வெண்கார வுள்ளி, white onion - Allium cepa (Alba).

வெண்கார வுள்ளி, வெண் + காரவுள்ளி.

வெண்காரி, சீனக்காரம், alum.

வெண்காரை, see சீமைக்கொஞ்சி - Micronutm extoca.

வெண்காலி, ஓர் மரம், கருங்காலியை ஒத்தது; இதனால் பித்தம், ரத்த தோஷம், தினவு, குட்டம், கபம், போம், a tree.

வெண்காலி, see வெக்காலி,

வெண்காவளி, வெண் காவெளி, வெள்ளைப் பூடு, garlic - Allium sativum.

வெண் கிடை, வெண் கிடைச்சி, ஓர் செடி, a plant.

வெண் கிருமி, கபத்தினால் இரைப்பியிலுண்டாகி அதனுள் உலாவு மோர் வகைப் பூச்சி, see, சிலேட்டுமக் கிருமி.

வெண் கிலுகிலுப்பை, see பேய் மிரட்டு.

வெண் கிழுவை, வெண் கிளுவை, white species of Balsa modenran caudatum.

வெண் கிளுவைப் பட்டை, bark of வெண்கிளுவை, which see.

வெண் கீரைத் தண்டு, வெள்ளைக் கீரைத் தண்டு, which see.

வெண் குகம், வெண் கடலை; சிறு கடலை, white bengal gram - Cicer arietinum.

வெண் குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம், conkany resin - Boswellia serrata (glabra)

வெண் குஞ்சம், வெள்ளைக் குன்றி மணி, white jeweller's bead.

வெண்குடக்கு, வெண் தேக்கு, white teak - Lagerstroemia lanceolata.

வெண்குட்ட சாந்தி, வெள்ளைப் பூண்டை நவச்சாரத்துடன் அரைத்து வெண் குட்டத்தின் மேல் தடவ மாறும், a remedy for leucoderma. Sal ammoniac, and garlic are made into a paste and applied over the affected part.

வெண் குட்டம், உடம்பில் வட்ட வட்டமாய் பல விடங்களில் வெள்ளை விழுந்து விகாரமாக்கி அவைகளின் சுற்றோரம் தடித்து விரிவாய்ப் படர்ந்து அகறுண்டாகி யுதிரும் ஓர் குட்டம், white leprosy.

வெண் குட்டம் போக்கி, இலந்தைக் கட்டைத் தைலம், which see.

வெண் குண்டாகிகம், வெந்தயம், fenugreek seeds - Trigonellla foenum graecum.

வெண் குண்டுமணி, வெள்ளைக் குண்டுமணி, white jeweller's bead.

வெண் குந்தி, வெள்ளைக் குங்கிலியம், see வெண் குங்கிலியம்.

வெண் குந்திரிக்க பற்பம், பல் நோயைப் போக்கும் வெள்ளைக் குங்கிலிய பற்பம், purified resin of Boswellia serrata (glabra) is powdered and used as baspam. It is purified by boiling with tender cocoanut water.

வெண் குதிரைவாலி,

வெண் குப்பைமேனி, குப்பைமேனி, rubbish plant - Acalypha indica.

வெண் குமுதம், கண்களில் பஞ்சு போல் வெண்புள்ளியுடைத்தாய் பரவி குத்தலுடன் பார்வை மழுங்கி வலியை யுண்டாக்கும் ஓர் வித கண்ணோய், disease of the pupil of the eye, marked by pain, and which dots on the black of the eye; 2. வெள்ளாம்பல், flower - white - lily; white nymphase.

வெண் குரு, white pustule.

வெண் குருகடம், உடம்பின் இரத்தத்தில் பரவி யிருக்கும் அணுக் கிருமி, white corpuscle.

வெண் குருக்குச் செடி, see குருக்கு.

வெண் குருதி, lymph.

வெண் குருவை, வெண்ணிறமான ஓர் குருவை நெல், a variety of paddy.

வெண் குவளை, indian white water lily - Pontedria.

வெண்குறண்டி, வெள்ளைக் குறண்டி, see வெண் கொறண்டி.

வெண் குறிஞ்சி, பூ நீறு, effloresscence grown on the soil of fuller's earth.

வெள்ளை, வெள்ளைப் புரசு, bastared kino - Butea frondosa bearing white flowers; 2. ceruse (white oxide of lead); 3. வெள்ளாட்டுக் குட்டி, kid; 4. வெள்ளி, silver; 5. பற்பம், calcined medicinal powder; 6. வெள்ளைப் பாஷாணம், white arsenic; 7. சங்கு பாஷாணம், Sanku pazhanam; 8. கள், toddy; 9. இளவயது, young age; 10. சவுக்காரம், soap; 11. பூவழலை, which see; 12. முட்டையின் வெண்கரு, white of an egg.

வெள்ளை அதிவிடயம், white attee.

வெள்ளை, அப்பிரகம், white mica.

வெள்ளை அல்லி, இதுவே அல்லி, water lily bearing white flowers.

வெள்ளை ஈருவல்லி, கூட்டரளி மரம், which see.

வெள்ளை உப்பி, வெள்ளை உப்பில்லாங் கொடி, as opposed to கருப்பு உப்பிலாங் கொடி, ordinary stinking swallow wort - Pentatropis microphylla.

வெள்ளை கட்டுதல், வெள்ளை ஒழுக்கு நிற்றல், cured gonorrhoea.

வெள்ளை கொட்டல், வெட்டை ஒழுக்கு, gonorrhoea.

வெள்ளைக் கடம்பு, see வெண் கடம்பு, white cadamba.

வெள்ளைக் கடுகு, white - mustard - Brassica alba; pungent in taste; digestive, heat making in its potency. It gives a condition of parchedness in the system; prolonged or excessive use may cause haemoptysis.

வெள்ளைக் கடுக்காய், அமிர்தக் கடுக்காய், white gall-nut of cuddappa white myrobalan - Terminalia pallida.

வெள்ளைக் கடுப்பு, ஓர் நோய், a disease.

வெள்ளைக் கண், croton viridis.

வெள்ளைக் கண்டங் கத்திரி, ஓர் வகை வெள்ளைப் பூவுள்ள கண்டங் கத்திரி, Solanum jacquint bearing white flowers and fruits. It is a thorny shrub.

வெள்ளைக் கண்டம், காயசித்திக்காகச் சித்தருண்ணும் மூலிகை, a herb eaten by Siddhars of rejuvenation.

வெள்ளைக் கண்டர், வெண் துரிசு, white vitriol - Zinc sulphate.

வெள்ளைக் கண்ணி, ஓர் பூடு a plant - Clerodendron infortunatum.

வெள்ளைக் கத்திரி, வெண் கத்திரிக்காய், white brinjal.

வெள்ளைக் கத்திரி, ஓர் வகைப் பாம்பு, a variety of snake.

வெள்ளைக் கத்தலை, a sea fish - Sciaena miles.

வெள்ளைக் கஸ்தூரிப் பட்டை, ஓர் மரப்பட்டை, the bark of a tree.

வெள்ளைக் கரடி, கரடி, white bear.

வெள்ளைக் கரந்தை, see வெண் கரந்தை.

வெள்ளைக் கரிசலாங் கண்ணி கரிப்பான், ordinary Eclipta alba

வெள்ளைக் கரு, முட்டையின் வெ கரு. white of an egg - albumer

வெள்ளைக் கருங்காலி, ஓர் மர ஏறு பித்தம், பெரு வயிறு, சுற மேகம் போம், egg fruited ebor - Dyosphyrus oocarpa.

வெள்ளைக் கருடன், ஒரு வகை கருடன், a variety of brahmi kite.

வெள்ளைக் கருடன் கிழங்கு, whi variety of sky root.

வெள்ளைக் கரும்பு, white - sugar-ca - Saccharum officinarum.

வெள்ளைக் கலியாண முருக்க வெள்ளைப் பூ பூர்க்கும் கலியா முருக்கு மரம், Erythrina indi (Bearin white flowers) albiflora.

வெள்ளைக் கலுவம், வெள்ளைக் க மண்ணால் செய்த சீை கலுவம், mortar made of whi stone.

வெள்ளைக் கல், 3 மாதத்தி கருப்பிண்டம், 3 months o foetus; 2. அண்டக்கல், which se 3. சுக்கான் கல், lime stone; வழலை, which see, 5. கல்லுப் rock-salt; 7. படிகக்கல், crystal.

வெள்ளைக் கல், பங்குனி மாதத்தில் பனியிரவில் காற்றில்லாக் காலத்தில் கதிர்போல் வளர்ந்திருக்கும் ஓர் கல்; உவர் நிலத்தின் அடியில் இருக்கும் கல், the stone found at the bottom of the fuller's earth or the efflorescence grown in the soil of fuller's earth in the month of march - April.

வெள்ளைக்கல் சுண்ணம், பிண்டச் சுண்ணம், a white medicinal powder made from the focus of three months old; 2. slaked lime; நிலத்தடியிலிருக்கும் வெள்ளைக் கல்லைக் காளவாயில் வேக வைத்து நீற்றி எடுக்கும் சுண்ணம்.

வெள்ளைக்கல் சுத்தி, உவர்மண் தரையின் அடியிலிருக்கும் வெள்ளைக் கல்லை உவர் மண்ணில் தண்ணீருற்றி, கலக்கி அதில் கழுவியெடுப்பது, washing the stone in the solution of fuller's earth is its purification.

வெள்ளைக்கல் செய நீர், அண்ட செயநீர், a pungent prepared liquid from அண்டக்கல், which see.

வெள்ளைக்கல் பிரமம், see வெள்ளைக்கல்.

வெள்ளைக் கல்லுப்பு, பிண்டவுப்பு, salt extracted from வெள்ளைக்கல், which see.

வெள்ளைக் கவுரி, white cowri.

வெள்ளைக் கழற்கொடி, வெள்ளைக் கழற்சிக் காய்க்கொடி, Bonduc-nut creeper bearing white nuts - Caesalpinia bonducella.

வெள்ளைக் கழிச்சல், மாந்தக் கழிச்சல், diarrhoea in children which is coloured white - caused by indigestion.

வெள்ளைக் கற்கண்டு, சீனிக் கற்கண்டு, sugar candy.

வெள்ளைக் கற்பொடி, வெள்ளைக் கற்சுண்ணாம்பு நீறு, white slaked lime.

வெள்ளைக் கற்றாழை, ஓர் வகை கற்றாழை, a variety of Aloe.

வெள்ளைக் காக்கட்டான், see வெள்ளைக் காக்கணம்.

வெள்ளைக் காக்கணம், வெள்ளைக் காக்கட்டான், a twiner bearing white flowers - Clitorai ternatea (albiflora).

வெள்ளைக் காக்கி,

வெள்ளைக் காசுக்கட்டி, as opposed to சிவப்புக்காசுக் கட்டி, white catechu - Hyderabad Catechu.

வெள்ளைக் காஞ்சொறி, காஞ்சொறி, a plant - Tragia involucrata; see எருமைக்காஞ்சொறி.

வெள்ளைக் காட்டமணக்கு, white jatropha.

வெள்ளைக் காட்டாமணி, உத்தாமணி, see வேலிப் பருத்தி.

வெள்ளைக் காந்தி, ஓர் மாலை மூலிகை, a mountain herb.

வெள்ளைக் காயா, ஓர் காய், Bilberry tree - Memecylon aungustifolium.

வெள்ளைக் கராச்சீலை, வெள்ளைப் பாஷாணம், கௌரி, குங்கிலியம், சவுட்டுப்பு, வெ.குங்கிலியம், சுட்ட துணிச்சாம்பல் பொடி செய்து காய்ச்சித் துணியிலூட்டிய காரச்சீலை, (காரபிளாஸ்திரி) a plaster prepared with the drugs mentioned above.

வெள்ளைக் காரம், வெண்காரம், borax - Biborate of soda - Sodabiboras.

வெள்ளைக் காரன் கவளி, தேர்க்கள், which see.

வெள்ளைக் காரி, உவளர் நிலம், fuller's earth.

வெள்ளைக் காவளை,

வெள்ளைக் காவேளை,

வெள்ளைக் கிரிகர்ணி, அவுரி, indigo plant.

வெள்ளைக் கிலுகிலுப்பை, a white species of Crotalaira pulcherrima.

வெள்ளைக் கிளி, சீனக்கிளி, Cockatoo.

வெள்ளைக் கீரை, வள்ளைக் கீரை, a kind of vegetable green.

வெள்ளைக் குங்கிலியம், இதுவே குங்கிலியம், a kind of white frankincense - Resin of Boswellia serrata.

வெள்ளைக் குசும ரோகம், ஓர் வகை நோய், a kind of disease.

வெள்ளைக் குட்டம், leucoderma.

வெள்ளைக் குதிரைக் குளம்பு, இதைச் சுட்டுக் கரியாக்கியத் தடவ சில விரண நோய் குணப்படும், white horse hoof - its burnt ash bucals ulcers.

வெள்ளைக் குதிரை மேலிருத்தல், வெள்ளைக் குதிரை மேலேறல், கள், சாராயம் முதலியன குடித்தல், being intoxicated with drinks.

வெள்ளைக் குழம்பு,

வெள்ளைக் குந்திரிக்கம், இது கட்டிகளாயும் வெளிர் பச்சை அல்லது மஞ்சள் நிறமாயும் இருக்கும்; இத்துடன் மெழுகு எண்ணெய் சேர்த்துக் களிம்பு செய்து மேலே ரணங்களுக்குப் போடலாம்; உதிரச் சிக்கலை நீக்கும்; வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளியாக்கும், சூரணித்துப் பல் வலிக்குப் போடலாம், வெள்ளை டாமர், Indian copal - white dammer - Vateria indica. It is used internally fro gonorrhoea, ulcers, stomach, and as ointment for external ulcers.

வெள்ளைக் குமுதம், கருவிழி ரோகம், an eye diseases of cornea.

வெள்ளைக் குன்றி, வெள்ளைக் குண்டு மணி, white jeweller's bead - Abrus precatorius bearing white seeds.

வெள்ளைக் குன்றிகம், see வெள்ளைக் குந்திருக்கம்.

வெள்ளைக் குன்றி மணி வேர், இதை வாயிலடக்க சகல விஷம் தீரும், licorice.

வெள்ளைக்கெளிறு,

வெள்ளைக் கொடி, கற்பூர வெற்றிலை; see கற்பூரக் கொடி.

வெள்ளைக் கொடி வேலி, வெள்ளை சித்திர மூலம், lead wort bearing white flowers - Plumbago zeylanica.

வெள்ளைக் கொம்பு, நரை மயிர், grey hair.

வெள்ளைக் கொய்யா, ஓர் வகை கொய்யாப்பழம், white guava fruit - Psidum pyrifermis.

வெள்ளைக் கொழுஞ்சி, see வெண் கொழுஞ்சி.

வெள்ளைக் கோங்கு, Hepta parviflora.

வெள்ளைக் கோஷ்டம், white costus arabica.

வெள்ளைக் கோட்டும்பை, தும்பை, leucas.

வெள்ளைக் கோரான், Ixora bearing white flowers - Ixora polyantha.

வெள்ளைச் சங்கங்குப்பி, cleodendron inerme.

வெள்ளைச் சங்கு, ஓர் வகைச் சங்கு, white conch; 2. சங்கஞ் செடி, four spined monetia - Azema tetracnatha.

வெள்ளைச் சங்குப்பி,

வெள்ளைச் சதிகம், வெண் மிளகு, white pepper.

வெள்ளைச் சந்தனம், white sanders.

வெள்ளைச் சரும ரோகம், leucorderma.

வெள்ளைச் சர்க்கரை, சீனிச் சர்க்கரை, white sugar.

வெள்ளைச் சவடு, white saline earth.

வெள்ளைச் சாடரணை, see வெண் சாரணை.

வெள்ளைச் சாமந்தி, ஓர் வகைச் சாமந்திப்பூ, white chrysanthemum - white chamomile.

வெள்ளைச் சாரடை, கண் வியாதிகளைப் போக்கும் ஓர் மூலிகை, see வெள்ளைச் சாரணை.

வெள்ளைச் சாரணை, ஓர் வகைச் சாரணை; சத்தி சாரணை; இதன் சாறு பாஷாணத்துக்கு சுருக்கு கொடுத்துக் காட்ட வுதவும், a plant - Trianthema decandra - good diuretic used for eye diseases also.

வெள்ளைச் சாறுவேளை வேர், இது ஓர் காய கற்பம்; முற்றிய வேரைச் சூரணம் செய்து குன்றி மணி முதல் 40 குன்றி மணி 40 நாளைக்கு ஒவ்வொன்றாய்க் உயர்த்திக் கொண்டே வந்து பிறகு ஒவ்வொன்றாய்க் குறைத்துக் கொண்டே வர நோயணுகாது; கிடைக்காவிட்டால் காட்டுச் சாறு வேளையாவது பதிலாக உபயோகிக்கலாம், root of Trianthema decandra. It can be used as a rejuvenating drug; 2. நீரிறங்கக் கொடுக்கும் வேர், It is diuretic.

வெள்ளைச் சாரை, உப்பு மணி, solidified salt made into beads; 2. கட்டிய கல்லுப்பு; consolidated salt; 3. வழலை, which see.

வெள்ளைச்சி, இரசித பாஷாணம், a kind of arsenic.

வெள்ளைச் சித்திர மூலம், lead wort bearing white flowers - Plumbago zeylanica.

வெள்ளைச் சிந்தூரம், சவ்வீரம், per-chloride of mercury.

வெள்ளைச்சி முலைப்பால், சிவப்பு நிறப் பெண்ணின் முலைப்பால், thr breast milk of a fair coloured woman; மருந்துக் குதவும் It is useful for preparing internal medicines opposed to கரு மாதர் முலைப்பால், which is good for eye diseases and to prepare medicines for the eye.

வெள்ளைச் சிலந்தி, Gomphia angustifolia.

வெள்ளைச் சிறு வழுதலை, white small brinjal.

வெள்ளைச் சீந்தில், ordinary moon - creeper - Tinospora cordifolia.

வெள்ளை ஜீரிகி, ஓர் பூடு, a plant white species of pharbitis nil ruber as opposed to சிவப்பு ஜீரிகி.

வெள்ளைச் சுக்கான், ஓர் வகை உபரசச்சரக்கு, white lime stone - one of 120 natural substances mentioned in Tamil Siddha medicine.

வெள்ளைச் சுரம்,

வெள்ளச் சுறா, white shark fish.

வெள்ளைச் சூரைச் செடி, see சூரைச் செடி.

வெள்ளைச் செந்தூரம், ஈய வெள்ளி, white lead.

வெள்ளைச் செம்பை, வெள்ளைப்பூ, பூர்க்கும் சிற்றகத்தி, Cassia cuspidata bearing white flowers.

வெள்ளைச் செவ்வந்தி, white chamomile, white chrysanthemum.

வெள்ளைச் சேரான் கொட்டைப் பழம், white marking nut fruit.

வெள்ளைச் சோளம், வெண் சோளம், white sorgham vulgar..

பள்ளை டாமர், see வெள்ளைக் குந்திரிகம்.

வெள்ளைத் தகரை, sulphur flowered - Cassia glauca.

வெள்ளைத் தம்பட்டன்,

வெள்ளைத் தாமரை, வெண்டாமரை; இப்பூவால் ஈரலில் அதிகரிக்கும் உஷ்ணம், மருந்து வேகம் 8-ம் போம், white lotus flower. It is prescribed for heat produced in the liver and produced by medicines.

வெள்ளைத் தாம்பிரம், german silver.

வெள்ளைத் தாளகம், realgar.

வெள்ளைத் தினை, white italian millet.

வெள்ளைத் தில்லை,

வெள்ளைத் துத்தம், பால் துத்தம், white vitriol.

வெள்ளைத் துத்தி, abutilon.

வெள்ளைத் துரசை, cetis wightii.

வெள்ளைத் துரட்டி மரம், வெள்ளைத் திரட்டு, a curved thorny variety (white + iron Hook + tree நாக்குழிஞ்சான், wood is white silky backed round leaved tree, covered all over with greyish pubescence - Capparis grandis.

வெள்ளைத் துரத்தி, capparis grandis.

வெள்ளைத் துரிசு, இதுவே துருசு வெள்ளை, calcined blue vitriol.

வெள்ளைத் துவரை, வெண் துவரை, white coloured red-gram - Cajanus cajan.

வெள்ளைத் துளசி, ordinary sacred tulasy as opposed to black tulasy - Ocimum sanctum.

வெள்ளைத் தூதுவளை, வெள்ளைப் பூ பூக்கும் ஓர் வகை காய சித்தி மூலிகை, three lobed night shade baring white flowers - a rejuvenating drug - Solanum trilobatum (albiflora)

வெள்ளைத்துாள்,

வெளைத் தேக்கு, வெண்டேக்கு, white teak.

வெள்ளைத் தேமல், a fungus disease of the skin.

வெள்ளைத் தேன், பத்தியத்திற் குதவும், white honey.

வெள்ளைத் தேன் மெழுகு, cera alba.

வெள்ளைத் தொட்டாற் சிணுங்கி, touch me not plant bearing white flowers.

வெள்ளை தோல், வெண் குட்டம், leucoderma.

வெள்ளை நண்டு, ஓர் வகை நண்டு, white crab.

வெள்ளை நமை, see, வெள்ளை நாகை, button tree - Anogeissus latifolia.

வெள்ளை நன்னாரி, as opposed to கருப்பு நன்னாரி, ordinary sarsaparilla.

வெள்ளை நாகணம், வெள்ளை நேர்வாளம், a purgative shrub - Croton tigilium; Mussell creeper bearing white flowers - Clitoria ternatea (typica) bearing white flowers.

வெள்ளை நாகணத்தி,

வெள்ளை நாகை, Anogeisus latifolia.

வெள்ளை நாங்கு, Asteriastigma macrocarpum.

வெள்ளை நாயுருவி, வெண்ணாயுருவி, ordinary Indian burr - Achyranthus aspera.

வெள்ளை நாவல், white jamum; இதற்குக் குணமதிகம்; அகப்படுவ தரிது; see வெண்ணாவல்.

வெள்ளை நாவி, வசநாவி, Aconite roo as opposed to கரு நாவி.

வெள்ளை நாவினி, வெள் வேலங்காய், fruit of white babool tree - Acacia leucophtaea.

வெள்ளை நீர்முள்ளி, கற்ப மூலிகையிலொன்று; இதன் சமூலத்தில் தாம்பூரம் பற்றபமாகும்; பூவின் சாற்றினால் சூதம் கட்டும், a rejuvenating drug thorny plant with white flowers = Hygrophila auriculata.

வெள்ளை நீலாம்பரம், barleria Cristata.

வெள்ளை நுணா, Morinda Citrifolia.

வெள்ளை நெல், வெள்ளைச் சிறு மணியன், a small white paddy.

வெள்ளை நொச்சி, வெண்ணொச்சி, Vitex negundo.

வெள்ளை புரளுதல், மல்லாந்து கிடத்தல், lying with face upwards.

வெள்ளைப் பசலி, வெண் வசளை, a creeper - Basella alba.

வெளள்ளைப் பசளை, வெண் பசளைக் கீரை, a creeper - Basella alba.

வெள்ளைப் படலம், ஓர் கண்ணோய், பாலாடையைப் போலும் பளிங்கைப் போலும், சிலருக்குக் கறுத்தும் கண்களில் சதை படர்ந்து கண்களை மூடித்திறக்கும் போதெல்லாம் உறுத்தி, பார்வை புகைச்சல் போற் கம்மியிருக்கும், an eye disease marked by flesh growth which is white in colour; 2. வெள் விழியில் சவ்வு படர்ந்து கண்புகைச்சல், பார்வை மங்கல் முதலிய குணங்களையுண்டாக்கும், a spreading growht in the white of the eye i.e., in the sclerotic coat.

வெள்ளைப்பட்டாணி, பட்டாணி, peas white.

வெள்ளைப் பயன், Vatica Roxburghii.

வெள்ளைப் பவளம், ஓர் வகைப் பவளம், white coral.

வெள்ளைப் பனங்கிழங்கு, polypodium taxifolium.

வெள்ளைப்பனையேறி, ஓர் வகைக் கடல் மீன், a silvery white sea fish with brown spots in the upper third of body in front half - Ambassis dussumicri.

வெள்ளைப் பாகல், வெள்ளைப் பாகற்காய்க் கொடி, climber bearing white carilla fruit (bitter gourd) - Momordica Charantia.

வெள்ளைப் பாஷாணக் கட்டு, இப்பாஷணக் கட்டு மருந்தினால் சுக சன்னிமுதலிய சன்னி, சுர வகைகளும், குன்மமும் தீரும். இம்மருந்தின் சிறந்த குணத்தால் கைகால் வலி நீங்கி இரத்த ஓட்டம் பெருகும்.

வெள்ளைப் பாஷாண சுத்தி, தாளித்த கற் சுண்ணாம்பை சலத்தில் கரைத்து, தெளிவிறுத்தி, பாஷாணத்தை சிறு துண்டுகளாகச் செய்து துணியில் முடிந்து கிழிக்கட்டி கூ தெளிவு தண்ணீர் அடங்கிய பாத்திரத்தில் தொங்க விடவும்; பிறகு அடுப்பின் மேல் வைத்து எரித்து சுண்ணாம்பு நீர் எல்லாம் சுண்டிய பின் கீழேயிறக்கி, பிறகு சூடேறிய பின் பாஷாணத்தைக் கொம்புப் பாகல் பழத்தைக் கீறி அதற்குள் பாஷாணத் துண்டுகளை செலுத்தி நூலாற் சுத்தி மண் சட்டியிற் போட்டு புடமிட வேண்டியது; ஆறினபின் எடுத்து மறுபடியும் பாகலிற்குள்ளே வைத்து மடக்கி மடக்கி மூன்று முறை செய்து எடுக்க சுத்தியாகும்; Purification of white arsenic. It is first boiled in clear calcium hydroxide solution, and then inserted into carilla ripe, and long fruit and tied with third; then it is heated with cowdung cakes. The process is repeated twice more. According to Ayurveda it is purified by soaking in the juice of lime fruit or the liquid obtained from the corm of the plantain tree.

வெள்ளைப் பாஷாணம், ஓர் வகைப் பாஷாணம்; இதுவே எலிப் பாஷாணம்; கவுரி பாஷாணம் தொட்டி பாஷாணம்; சங்கு பாஷாணம்; இது உலோகங்களைப் போல் பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படும், white oxide of arsenic - Arsenicum album, (Arsenious acidum) It is a stomachic and general tonic promoting appetite and cardiac action and stimulating mental activity. It is of great value in irritative dyspepsia, chronic superficial skin diseases as psoriasis, pimpligus eczema etc.

மலேரிய சுரம் கொய்னாவில் குணமாகாவிடில் வெள்ளைப் பாஷாணம் குணம் தரும் சிறிய பிரமாணங்களாய்க் கொடுக்க இரத்த சுத்தியையும் உண்டாக்கும், 1/60 to 1/12 நெல் பிரமாணம் கொடுக்கலாம்; அயத்துடன் சேர்த்துக் கொடுத்தால், (red corpuscles) செங்குறு கடம் சோணிதம் (Haemoglobin) இரத்தத்தில் விர்த்தியாகும்; பாண்டுவுக்கும் கொடுக்கலாம் இது ஓர் உபயோகரமான மருந்துச் சரக்கு; வெகு சாக்கிரதையாய்க் கையாளாவிடில் அபாய முண்டுபண்ணும்; விஷ சுரம், குளிர் காய்ச்சல் இவற்றில் மேற்கண்ட விதப்படி கொடுக்க, சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்குப்பிறகு கொடுக்க குணமாகும்; யானைக்கால் வியாதியில் உண்டான சுரத்துக்கு குஷ்டரோகத்திற்கும் உபயோகித்து வரலாம்; இதன் நிறம் வெள்ளை மஞ்சளாயிருப்பதை அரிதாரமென்றும் சிவந்திருப்பதை மனோசிலை என்றும் வெள்ளையாய்

இருப்பதை வெள்ளைப் பாஷாண மென்றும் சொல்வதுண்டு; இதன் புகை வெள்ளைப்பூண்டு வாசனையாய் இருக்கும்; வியாத பேதகாரி, பலகாரி குணமுண்டு; இது பாஷாணமாகையால் சாப்பிடக்கூடாது; இது கெட்ட விஷம். மேலே போட்டால் மயிர்களை நீக்கி புண்ணாக்கும்; சுரம், சீதசுரம், விஷசுரம், வாத சூலை, முகசன்னி இருமல், கக்குவான், சுவாச காசம் சூரிய வர்த்தவாதம் பெருவியாதி இவைகளில் உபயோகிக்கலாம், சர்ம ரோகம், விப்புருதி பெரும்பாடு பாம்புகடி. குன்மம், அசீரணம், அதிகாரம், கூத்தாடும் சன்னி, சூதகக்கட்டு இரத்த க்ஷீண ரோகம், நுரையீரல் தாபன ரோகம், காமாலை ரோகம், மது மேகம் இவைகளுக்கு இதை உபயோகிக்க குணமாவதுண்டு; இதன் செய நீர்க்கு வெள்ளைப் பாஷணத்திற்குள்ள குணமுண்டு, white arsenic is used for malarial fevers and certain anaemias. It is used as pills and calcined powders. Pepper decoction is an antidote for its poisoning symptoms.

வெள்ளைப் பாதிரி, a tree - Sterospermum chelonoides.

வெள்ளைப் பாயறு, எருக்கிலை, leaf madar - Calotropis gigantea.

வெள்ளைப் பாவட்டை, Pavata indica bearing white flowers.

வெள்ளைப் பித்தளை, German silver.

வெள்ளைப் பிரமியம், gonorrhoea.

வெள்ளைப் பிரமேகம், பெண்கள் யோனியிற் காணும் வெள்ளை, white venereal discharge in woman.

வெள்ளைப் பில்லாஞ்சி, ஓர் செடி, a plant or shrub bearing white fruits as opposed to கருப்பு பில்லாஞ்சி, see பூலா - phyllanthus multiflorus or Fluggea leucopyrus.

வெள்ளைப் பிள்ளை, Hemicyclia travancorica.

வெள்ளைப் பீர்க்கு, white luffa.

வெள்ளைப் புளிச்சைக்கிர,

வெள்ளைப் புடலை, white coloured snake gourd - Trichosanthes anguina.

வெள்ளைப் புள்ளி, கரப்பான், eczema.

வெள்ளைப் புரசு, Mundetia suberosa.

வெள்ளைப் புனல் முருங்கை, இது சாதாரண புனல் முருங்கையைப் போலிருக்கும்; பூ வெள்ளை யாயிருக்கும்; இதன் சதைப் பட்டையைக் கொண்டு வந்து பாக்கு வெற்றிலையுடன் சேர்த்து மென்று வாயில் அடக்கிக்

கொண்டு இதை நீளமான இரும்புத் தகட்டை உலையில் ஊதி பழுக்கக் காய்ந்த உடன் அதில் வாயிலிருக்கிற தம்பல உமிழ் நீரை 10 தரம் உமிழ்ந்து சுருக்கிட அது பழுக்கும்; பழுத்தை அதை செந்தூரமாக்கி புசிக்க காய சித்தியாகும். மற்றொரு முறை: மேற்படி மரத்தின் பிசினை எடுத்து வந்து 45 நாள் ஒரு பணவிடை வீதம் புசித்துவர காய சித்தியாகும்; பத்தியம் பாலும் சோறும், two methods of rejuvenating the body are given above; ஒரு கற்ப மூலிகை, a rejuvenating drug.

வெள்ளைப் புனுகு, இராசாக்கள் நெற்றியில் திலகமாக உபயோகிப்பது, white civet used as a mark in the fore head by Rajahs.

வெள்ளைப் பூகிகம், வெள்ளரி, cucumber - Cucumis sativus.

வெள்ளைப் பூசனி, பெரும் பூசனி; கலியாண பூசனி; சாம்பற் பூசனி, as gourd creeper - Benincasa cerifera.

வெள்ளைப் பூடு, வைத்திய முப்பு, medicinal three salts; 2. garlic - Allium sativum.

வெள்ளைப்பூண்டு, இதற்கு உஷ்ணகாரி, கபஹாரி, கிருமி நாசினி, சீனத்தகாரி, மூத்திர வர்த்தினி ஆகிய குணங்களுண்டு; இதற்கு வெள்ளுள்ளியென்றும் இன்னொரு பெயருண்டு; நாக்குப்பூச்சி ரோகம், நீர்க்கோவை, சலதோஷம், இருமல் இவைகளுக்கு உபயோகிக்க குணமாகும்; கட்டிகளுக்கும் வயிற்றுப் பிசத்திற்கும் உபயோகிக்க சௌகரியமாவதுண்டு; சலதோஷம் இருமல், சுவாசகாசம், கிருமி ரோகம் இவைகளுக்கும் உபயோகிக்க நல்ல குணத்தைக் கொடுக்கும், மருந்திற்குப் புதிதானதே உபயோகப்படும்; கடையில் விற்கும் உள்ளிப்பற்கள் குணமிராது; குழந்தைகளுக்கு சுரத்துடன் கூடிய அல்லது பின்னால் காணும் இருமல், மார்ச்சளி இவைகளைக் குணப்படுத்தும்; இதன் சாற்றை சர்க்கரை சேர்த்துக் கொடுத்தால் சலதோஷ இருமலுக்கும் சுவாசகாசத்திற்கும், காது வலிக்கும் உபயோகமாகும்; சிறு நீர் இறங்காமல் அடிவயிறு உப்பிசந்த கடப்படும் போது இதை நசுக்கி சலம் விட்டு கிளறி நாபியில் வைதுக் கட்டினால் தீரும் சுரம், அம்மை இவைகளால் பைத்தியம், புலம்பல், உண்டானால் அதற்கும் இதை நசுக்கி உள்ளங்காலில் கட்ட நித்திரை போதலும் உண்டாகும்; இதைப் பாலில் வேக வைத்துக்

கட்டிகளுக்கு கட்டவுடையும்; இதில் Allyl sulphide என்னும் சடுதியில் அவியாகக் கூடிய (volatile liquid) சத்து உண்டு. அதற்கு மருந்து குணமுண்டென்றும் அத்தைலத்தினால் சயம் முதலிய ரோகங்களுக்கு காரணமாக உள்ள நுண்ணுயிர்களைக் (germs) கொல்லும் என்றும் ஐரோப்பியரின் அபிப்பிராயம். எளிதில் சீரணமாகித் தாதுக்களுக்குப் பரவும்; இதை வங்கத்தோடு அரைத்து க்ஷயரோக சம்பந்தமான வியாதிகளுக்கு கூட்டு மருந்தாக (poultice) உபயோகப்படும்; இதன் சாற்றை lotion ஆக தயார் செய்து கீழ் பிடித்தரணங்களைக் கழுவ ஆறும், garlic Allium sativum; persons consuming large quanites of garlic are singalarly immune from the attacks of epedemic diseases. This acts as stimulant edpectoratn, anthelmintic, refregirent and diuretic. It is used as condiment, It can be roasted and used as medicine.

வெள்ளைப் பூண்டுச்சாறு, இதை விரலால் தொட்டு உள் நாக்கின் வளர்ச்சிக்குத் தடவ சுருக்கமாகும், juice of garlic; elongated uvula is cured if touched with this juice.

வெள்ளைப்பூண்டு தைலச் சத்து, the essential oil of garlic $(C_3 H_5)2$ S. Allyl sulphide.

வெள்ளைப்பூ துத்தி, வெண்பூவிடும் ஓர் வகை துத்தி, inidna mallow bearing white flowers - Abutilon indicum (Albiflora)

வெள்ளைப் பூத்தாளி, வெண்பூ விடும் ஓர்வகைத் தாளி, a kind of தாளி yielding white flowers - Country Traganth - Stercutia urens.

வெள்ளைப் பூந்தூதுவளை, வெள்ளைத் தூதுவளை, prickly shoonday bearing white flowers - Solanum trilobatum (Albiflora)

வெள்ளைப் பூலா இதன் வேரை அரைத்து வெள்ளீயத்திற்கு, தடவி புடம் போட தூளாகும், white honey shrub - tin plate smeared with the paste of its root and submitted to calcination it becomes brittle (powdery)

வெள்ளைப் பூலாஞ்சி, வெள்ளைப் பூலா, which see white honey shrub which bears white fruits - Fluggea leucopyrus.

வெள்ளைப் பூவாத்தி, mountain ebony - Bauhina variegata.

வெள்ளைப் பூவி, கோவை, Coccinia indica.

வெள்ளைப் பூவில் சூதங் கட்டி, விஷ்ணு கரந்தை, a plant - Sphoeranthes indicus.

வெள்ளைப் பெருங்காயம், ஓர் வகை வைப்புப் பெருங்காயம், இதை குஜராத், பம்பாய், கல்கத்தா, சூரத்து இவ்விடங்களில் ஏராளமாய் செய்து விற்பனைக்கு வரும்; இது கருப்பு பெருங்காயத்தைப் போலிருக்கும், white asafoetida.

வெள்ளைப் பெரும்பாடு, இரத்தம் வெண்மையாக மாறி ஒழுகப் பெற்ற ஓர் பெரும்பாடு, leucorrhoea.

வெள்ளைப் பொன்னாவிரை, ஓர் ஆவிரை, a white species of cassia - Cassia obovata.

வெள்ளைப் போக்கு, வெள்ளை யொழுக்கு நோய், gonorrhoea.

வெள்ளைப் போளம், வாலேந்திர போளம், which see (white + gum) a kind of recinous gum - Balsamodendron myrrh. அரேபியா தேசத்தில் விளையும் ஓர் கற்றாழை செடியிலிருந்து கீறியெடுத்து சேகரிக்கப்படும் ஓர் வகை ரோசனத்தைப் போன்ற கருஞ் சிவப்பும் கசப்பும் வாசனையுமுடைய ஓர் வகைப் பிசின், (It is also called வாழர்த்தி போளம், woman in child bed and myrrh) Bayce balsam; myrrh, woman bole - Balsamodendron myrrha. A small tree with a whitish grey bark found in Arabia and in the range of hills which run parallen in African shore to somali coast. It is a gum resin spontaneous by deposited in the cortical layers; occurs in the form of tears of irregular shape of variable size Somewhat translucent of a reddish yellow, or reddish brown colour, has an agreeable aromatic odour and a bitter acrid taste, partly insoluble in water, alchol and ether. It is adulterated with indian googals Medicinal uses are same sa native googals used with olibanum as a constituent of perfumes and ungents.

NOTE: With the liquid myrrha of the ancients no drug of modern times has been indentified.

வெள்ளை மட்டி, வெள்ளை மருந்து, which see.

வெள்ளை மந்தாரை, ஓர் வகை வெள்ளைப் பூஞ்செடி, a flowering plant - Bauhinia acuminata; 2. ஓர் கற்ப மூலிகை, a plant used in longevity of life.

வெள்ளை மருது, வெள்ளைப்பூ பூக்கும் ஆற்று மருத மரம், a tree - Terminalia arjuna myrobalan.

வெள்ளை மருதை, see வெள்ளை மருது.

வெள்ளை மாதளை, ஓர் மாதளை, மரம், a pomegranate bearing fruits which one white inside.

வெள்ளை மிளகாய், வெண் மிளகாய், white chilly.

வெள்ளை மிளகு, வெண்ணிறமான மிளகு, 25-30 அடி உயரமுடையது; பழத்தின் நிறம் சிவப்பு; இதனுள் 2 மிளகுகள் இருக்கும்; வாசனையுடையது, உஷ்ணகாரி, உதரவாதகரகாரி குணங்களுண்டு; இதை வயிற்று வலி, கிரகணி, சிலேஷ்ம வாதம் சீழ்ப்பிரமேகம் ரூட்சை ஆகியவைகளுக்கு உபயோகிக்க நல்ல குணத்தைத்தரும்; கீல் வாதத்திற்கு மேலே போடலாம். white pepper is only black-pepper rid off its skin. IN the form of decoction it is given as an antidote to arsenic poisoning (by C.D.). 2. தோலைப் போக்கின மிளகுப்பழத்தின் வித்து, pepper rid of its skin; 3. ஓர் பழத்தின் விதை, seed of a fruit.

வெள்ளை முயல், white rabbit.

வெள்ளை முருக்கு, வெள்ளைப். பூவுடைய கலியாண முருக்க மரம், a thorny tree bearing white flowers - Erythrina indica (albiflora).

வெள்ளை முழி, an eye in which the white part is very large wall eye - It is a popular name for glaucoma (a disease of the eye).

வெள்ளை முள் . முருங்கை, வெள்ளைப் பூ பூக்கும் கலியாண முருங்கை, a thorny tree bearing white flowers - Eythrina indica (albiflora)

வெள்ளை முள் வேல், Acacia latronum.

வெள்ளை முள்ளி, ஓர் வகை முள்ளி, a plant - Barleria caspidata.

வெள்ளை முள்ளு, acacia latronum.

வெள்ளை மெழுகு, சுத்தி செய்த தேன் மெழுகு, purified honey wax.

வெள்ளை மேகம், white venereal discharge.

வெள்ளை யகில், வெள்ளை நிறமான அகிற்கட்டை, white species of eagel wood.

வெள்ளை யஞ்சனக்கல், white antimony which is applied to the conjunctive to ensure acute vision.

வெள்ளை யடம்பு, white adambo.

வெள்ளையடுக்கரளி, ஓர் அடுக்கலரி, nerium bearing double whorl flowers - Nerium odorum.

வெள்ளையணு, white Corpuscles.

வெள்ளையத்தி, கல்லத்தி, a kind of fig tree.

வெள்ளையப்பிரகம், white mica.

வெள்ளையம்புலி, முட்டையின் வெண்கரு, white of an egg - albumen.

வெள்ளையம்மான் பச்சரிசி, சாதாரண அம்மான் பச்சரி, as opposed to சிகப்பு அம்மான் பச்சரிசி, a prostate plant - Euphorbia hirta.

வெள்ளையரிங்கை, வெள்ளுருவை, which see.

வெள்ளையலரி, Nerium odorum (bearing white flowers) albiflora see வெள்ளலரி.

வெள்ளையவரை, dolichos lab lab (tropical) bearing white fruits - Kitchen garden white lab lab.

வெள்ளையுவுரி, வெண்ணிறமான அவுரிச் செடி, a white species of indigo plant.

வெள்ளையன், Acacia latronum.

வெள்ளையுள் முள்ளு, குடைவேல், Acacia plomifrous.

வெள்ளையா, holoptelia integrifolia.

வெள்ளையாதளை, white castor i.e., castor plant bearing white seeds.

வெள்ளையாமணக்கு, castor i.e., castor plant bearing white seeds.

வெள்ளையாமிதம், see வெண்முள்ளிக் கீரை.

வெள்ளை யாவரை, ஓர் வகையாவரை, a plant.

வெள்ளையாவிரை, see வெள்ளையாவாரை a plant.

வெள்ளை யானைவேர், மாங்கிஷம், which see.

வெள்ளையிண்டு, Acacia intsia.

வெள்ளையிலை, வெள்ளை மடந்தை, Mussaenda frondosa.

வெள்ளையீரல், see வெள்ளீரல்.

வெள்ளையீருள்ளி, வெண்ணிறமான வெங்காயம், white coloured onion - Allium cepa.

வெள்ளையூதம், see வெண்கடுகு, white mustard

வெள்ளையூமத்தை, வெள்ளுமத்தை, Dhatura bearing white flowers - Dhatura alba.

வெள்ளையெருக்கு, madar bearing white flowers - Calotropis gigantea - Albiflora.

வெள்ளையெழுத்து, see வெள்ளெழுத்து.

வெள்ளையெள்ளு, கழுவி சுத்தி செய்து மேல் தோலைப் போக்கிய எள்ளு, sesame washed and cleaned of its skin; 2. white variety of sesame - Sesamum orientale.

வெள்ளையொழுக்கு, ஓர் மேக நோய், a venereal disease in which there is frequent discharge of semen - a transparent mucous discharge from the urethra.

வெள்ளையோக்காளம், வெறுவாய் குமட்டல்; "சோபித் தடும்பிணி வந்தடுக்கும் அரோசிகம் தினம் தினம் வெள்ளை யோக்காளம், (புலஸ். கற்பம் 200) nausea.

வெள்ளை ரசிதம், வைப்பு பாஷாணங்களில் ஒன்று, one of the prepared arsenic; 2. வெள்ளி silver.

வெள்ளை ரோசனம், white resin.

வெள்ளை ரோசா, Indian white rose - Rosa alba - a cooling medicine in fever.

வெள்ளை வசநாபி, ஓர் வகை வசநாபி, a white aconite root.

வெள்ளை வட்டைச் சாரணை, trianthema pentandra.

வெள்ளை வண்ணாத்தி, ஓர் பூச்சி, a white butterfly.

வெள்ளை வதனத்தி, ஓர் மூலி, a plant.

வெள்ளை வர்க்கம், வெள்ளெருக்கம் பால், milk taken from madar - Calotropis bearing white flowers.

வெள்ளை வள்ளைக் கிழங்கு, வெண்ணிறமான வள்ளி, white sweet potato - a creeper - lpomoea digitata alias lpomoea batatas.

வெள்ளை வர்க்கம் பால், வெள்ளெருக்கம்பால், milk taken from calotropis bearing white flowers.

வெள்ளை வாடா மல்லிகை, பால் வாடா மல்லிகை, a white species of amaranth - Gomphrena globosa.

வெள்ளை வாதரக் காட்சி, ஓர் மரம், a tree.

வெள்ளை விரலி, வெள்ளை விராலி, வெள்ளை விருளி, விலாரி; ஓர் செடி, a plant.

வெள்ளை விட்டுணு கரந்தை, வெள்ளைப்பூ பூக்கும் ஓர் வகை மூலிகை, a species of white flowered விஷ்ணு கரந்தை, which see.

வெள்ளை விளா, see வெள் விளா.

வெள்ளை விழில், white discharge - leucorrhoea.

வெள்ளை விழி, white of the eye.

வெள்ளை வீக்கம், பிரசவித்த பெண்களுக்கு ஒரு கால் வெளுத்து மினுமினுப்புடன் காணும் வீக்கம், the white swelling of lying in woman in one of the legs, attended with shining and unyielding enlargement - Phlegmasia dolens.

வெள்ளை வீழச்சி, வெள்ளை விழல், which see.

வெள்ளை வெங்காயம், வெள் வெங்காயம், white onion - Allium Cepa.

வெள்ளை வெட்சி, வெள்ளைப் பூவுடைய வெட்சிப் பூஞ்செடி, a small tree - lxora stricta.

வெள்ளை வெட்பாலை, இது ஓர் மரம்; இதற்கு இந்திர விருட்சம் என்று பெயர், a tree.

வெள்ளை வெற்றிலை, கற்பூர வெற்றிலை, a white species of betel leaf with camphor flavour.

வெள்ளை வேங்கை, ஓர் வகை வேங்கை மரம், a tree - Albizzia procera.

வெள்ளை வேலன், வெள்வேல், a tree - Acacia leucophloea.

வெள்ளை வௌவால், a sea fish, rhomboid in shape white shiny in colour; edible fish of good taste.

வெள்ளொடை, ஓர் ஒடை மரம், a tree - Wrightiana.

வெள்ளொதியம் பட்டை, bark of வெள்ளோதியம்.

வெள்ளோக்காளம், வெறும் வாயை ஒக்காளித்தல், கக்கலில்லதா ஒக்காளம், nausea when water alone is emitted.

வெள்ளோடல், தேங்காய், cocoanut.

வெள்ளோத்திரம், see வெள்ளி லோத்திரம்.

வெள்ளோந்தி, வெள்ளை யோனான், white species of chamelion; 2. கள், toddy.

வெறி, அச்சம், fear; 2. கலக்கம், bewilderment; 3. கள், toddy; 4.

நாற்றம், smell; 5. நோய், disease; 6. மயக்கம், giddiness; 7. பைத்தியம், madness; 8. பிசாசம், devil; 9. ஆடு sheep; 10. போதை, fury from liquor; drunkness.

வெறி கொள்ளுதல், மயக்கங் கொள்ளல், becoming giddy; 2. பைத்தியம் பிடித்தல், becoming mad.

வெறிக்கடுக்காய், பேய்க் கடுக்காய், a kind of wild gallnut.

வெறிக்கக் குடித்த, வெறி யுண்டாகும்படி குடித்த, drunken.

வெறிக்கப்பார்த்தல், பரக்கப் பார்த்தல்; ஓர் மரணக் குறி, staring; a death symptom.

வெறிக்கல், சுக்கான்கல், lime - stone.

வெறிக் குணம், பைத்தியக் குணம், madquality; 2. ஓர் மூர்க்கக் குணம், eccentric; 3. மஸ்து கொண்ட குணம், lusty.

வெறிக்குதல், see வெறி கொள்ளல்.

வெறி சிங்கி, ஓர் வீரண நோய், ulcer.

வெறிச்சி, அழுகண்ணி, a plant found in marshing places from which water contionuously oozes out - a carnivorous plant - Drosera indica; 2. சண்பகம், a flower - champaca.

வெறிதருமருந்து, மயக்கத்தை யுண்டாக்கு மருந்து, an intoxicating drug - Bang.

வெறித்த சிங்கம், உப்பு மணி, a bead made by melting the consolidated salt which is not soluable in water but melts; 2. கட்டிய கல்லுப்பு, consolidated rock-salt; 3. முப்பு, the three universal salts.

வெறித்த பார்வை, பயங்கரப் பார்வை, fearful look.

வெறித்தல், மயக்குறல், being intoxicated or stupified.

வெறி நாய், பைத்தியம் பிடித்த நாய், mad dog.

வெறி நாய் கடிப்பைத்தியம், வெறி நாய்கடியால் ஏற்பட்ட பைத்தியம், canine madness.

வெறி நீர், சாராயம், arrack; 2. பானம், drink causing giddiness.

வெறிப்பைத்தியம், பைத்தியம், madness.

வெறிப்பான வேரு, வெள்ளரிசி, which see.

வெறிப்பு, மயக்கம், intoxication, drunkness.

வெறி மயக்கம், குடி வெறி, drunkness.

வெறி மருந்து, பாஷாணம், arsenic; 2. மயக்கத்தை யுண்டாக்கு மருந்து, drug causing giddiness - intoxicating drug.

வெறியன், பைத்தியங் கொண்டவன், an insane man; 2. மயக்கங் கொண்டவன், a giddy person; 3. குடியன், drunkard; 4. கஞ்சா பிடித்தவன், ganjah smoker.

வெறியாடல், வெறி கொள்ளல், becoming mad; 2. சன்னத மாடல், devil dance; 3. போதையினால் கூத்தாடல், dancing through intoxicating.

வெறியாட்டாளன், உன்மந்தன், madman; 2. தேவர்க்காடுவோன், dancer before the fanes of tutelarly gods - Bacchanalian.

வெறியாட்டு, உன் மத்தம், madness.

வெறியுறை, மயக்கமுண்டாக்கும் ஓர்விதை சிகிச்சை, giving chloroform; 2. பைத்திய முண்டாக்கும் மருந்து, medicine causing insanity.

வெறியெடுத்தல், வெறிகொள்ளல்; மதங்கொள்ளல், becoming fascivious of rusty.

வெறியேறி, நெருப்பு, fire.

வெறியோன், பேய்த் துவரை, a wild gram.

வெறிவாகை, பன்றிவாகை, bastard rosewood - Dalbiergia paniculata.

வெறுக்கச் சாப்பிடல், மணம் சலிக்கும் வரை யுண்ணல், to eat to satiety.

வெறுக்கை, பொன், gold.

வெறுங்கால், bare foot; 2. வெற்றுக்கால்,

வெறுஞ்சோறு, சோறுமாத்திரம் (குழம்பு நீங்கலாக) cooked rice only.

வெறுத்தல், hating, detesting, renouncing.

வெறுந்தண்ணீர், water only (in prescribing diet)

வெறு மணம், வாசனையின்மை, odorless.

வெறுமைபோக்கி, முண்டினிவிருட்சம், which see.

வெறும் பருக்கை, see வெறுஞ்சோறு.

வெறும் பானை, காலி பானை; ஒன்றுமில்லாப் பானை, empty pot.

வெறும் பூ, பிஞ்சில்லாப் பூ, flower only.

வெறு வயிறு, வெறும் வயிறு, ஒன்றுமில்லா வயிறு, empty stomach; கர்ப்பமில்லா வயிறு, abdomen with impregnation.

வெறுவாய், வெறும் வாய், empty mouth.

வெறுவாய்க்குமட்டல், see வெள்ளோக்காளம்.

வெற்பஞ்சனம், நீலாஞ்சனக்கல்; துருசு, blue vitriol - Copper sulphate.

வெற்பு, மலை, mountain; 2. குன்று, hill.

வெற்புக் குள்ளுறப்பத்தி, மாங்கிஷபேதி, a mineral salt turning flesh into a liquid or dissolving flesh.

வெற்புதனிலுற்பவித்த வெண்சயத்தான பலன்டுறுக பாஷாணம், a kind of arsenic.

வெற்பேந்தி, மலை தாங்கிப் பூடு, இதனால் தேக பாரிப்பு, வாதரோகம், ரூட்சைபோம், a plant - Sida acuta.

வெற்றிடம், காற்றில்லாத விடம், vacuum; 2. வெறுவெளி, etheric space.

வெற்றித் தண்டு, நுரையிண்டு, which see.

வெற்றிலை, தாம்பூலம், betel leaf - Piper betel it is also called betelving; Indian leaf. It should not be confounded with folium indicum of druggists which is leaf of wild cassia.

வெற்றிலைக் கஸ்தூரி, கஸ்தூரி வெண்டை, musk bendy - Abelmoschus moschatus; இது வருஷத்திற்கு ஒருமுறை விளையும் பயிர்; இது திருவாங்கூர், வங்காளம், கீழ் கடற்கரை நாடுகளிலும் விசேஷமாகக் கிடைக்கும்; இது ரொம்பவும் வழவழப்பாயும் இதன் விதைகள் அதிக வாசனையுள்ளதாயும் இதன் விதைகள் அதிக வாசனையுள்ளதாயும் இருக்கும். அரேபியா தேசத்தில் காப்பிக்கு வாசனையேற்ற உபயோகப்படும்; வாசனைத் திரவியங்களுக்கு வாசனை யேற்றுவதற்காக உபயோகப்படும்; விஷ சந்துக்கள் கடிக்கு இதன் விதைகளும் உபயோகப்படும்; ஆவணி புரட்டாசியில் பூ பூக்கும், a kind betel with camphor smell. It is used as aromatic.

வெற்றிலைக் காம்பு, வெற்றிலையின் காம்பு, pedicle of betel leaf.

வெற்றிலைக் காய், மாற்றும் வெற்றிலைக் கொடியின் காய், fruit of bastard betel vine.

வெற்றிலைக்கொடி, தாம்பூலவல்லி, betelvine.

வெற்றிலைக் கொழுந்து, இள வெற்றிலை, tender betel leaf.

வெற்றிலை சுருட்டி, ஓர் வகைப் புழு, a kind of worm which rolls the betel leaf.

வெற்றிலைச் சாறு, பாஷாணத்திற்கு சுருக்கிடவுதவும், juice of betel leaf. Used for treating arsenic.

வெற்றிலை சுருள், வெற்றிலை மடிப்பு; வெற்றிலைப்பட்டி, betel leaf packed with arecanut powder some aromatics chunnam, betel leaves, and clove.

வெற்றலைத் தட்டி, வெற்றிலைச் சருகு, dried betel leaf.

வெற்றிலைத் தண்டுலம், வேம்பின் மேற் புல்லுருவி, parasitic plant on neem tree.

வெற்றலைத் தம்பலம், வெற்றிலையும் பாக்குஞ் சேர்த்து மென்ற சாரம், the chewed betel leaf with chunnam and areca nut.

வெற்றலை நறுக்கி, ஓர் செடி, a plant.

வெற்றிலை நாரி, ஓர் புதர், a kind of grass.

வெற்றிலைப் பட்டை, காட்டுக் குமிழ், mulberry of Western ghats - callicarpes lanata.

வெற்றிலைப் பாக்கு, small pieces of areca nut and betel leaf smeared with chunnam (quick lime) and rolled. All these are chewed, and it becomes a red mass. It answers the purpose of aromatic, astringent and alklescent. This is much used for the relief of malaise.

வெற்றிலை மென்றல், தாம்பூல மருந்தல், chewing the betel leaf with chunam, and areca nut.

வெற்றலை வல்லி, வெற்றிலைக் கொடி, betel vine - Piper betel.

வெற்றலை வள்ளி, ஓர் வகை வள்ளிக் கிழங்கு; காய் வள்ளி, நாகவள்ளி, a kind of root - Dioscorea oppositifolia.

வெற்றிலை வள்ளிக் கிழங்கு, இதுவே காய்த்துளசிக் கிழங்கு; வெற்றிலை வள்ளி; உணவுக்குரிய ஓர் வகைக் கிழங்கு, vegetable root; cultivated in betel gardens. Wild sesban yam நாகவள்ளிக் கிழங்கு, Dioscorea oppositifolia.

வெற்றிலை வெடி பதம், மருந் தெண்ணெய் பதமறியும் வகையிலொன்று, one of the methods for ascertaining the state of the medical oil at a certain stage while under prepartation.

வெற்றி லேவாயுத மாத்திரை, முருகனது வேலைப் போல் சக்தி வாய்ந்த மாத்திரை; பவளம், வெள்ளி, தங்கம், தாமம்பிரம், வீரம், பூரம், லிங்கம் கெந்தி, காண்டா மிருகக் கொம்பு மனோசிலை தாளகம். இத்துடன் கோரோசனை குங்குமப்பூ கஸ்தூரி மற்ற சரக்குகளுடன் சேர்த்து வில்வப்பூச்சாறுடன் பன்னீர் சேர்த்தரைத்துத் திரட்டிய மாத்திரை; இதை இஞ்சிச் சாற்றில் கொடுக்க சயம், பாண்டு, சன்னி, கல்லடைப்பு ஆகியவைகளுக்கு கொடுக்க நலமாம்.

வெற்று, வெறு, mere simple.

வெற்றுகம், வட்டத்துத்தி, a plant - Abutilon indicum.

வெற்றுக் கால், bare foot.

வெற்றுடம்பு, சதைப் பிடிப்பில்லாத வுடம்பு, body without much flesh; 2. சாதாரணவுடம்பு, body in its natual state; mere body; 3. கருப்பமில்லாத வுடம்பு body without conception; 4. நிருவாண வுடம்பு, naked body.

வெற்றுடம்புக் காரி, கருப்பமடையாத பெண், woman not carrying.

வெற்றெலும்பன், bare bone.

வெற்றெலும்பு, சதை கழிந்த வெலும்பு, bone rid of flesh.

வெனப் பீலி, வெனப் பீலிகம், இருவேலி, khus - khus root - Vetiveria zizanioides.

வென், முதுகு, back.

வென்னி, வென்னீர், hot water as in அரைத்திடாய் வென்னீரில்.

வென்னீர், சூடான தண்ணீர், hot water.

வென்னீர்ப் புண், Scalds.

வென்னீறாதல், நீற்றுப் போதல்; பற்பமாதல்.

வே, எரி, burn; புழுங்கு, be sultry.

வேக சாரம், ஒட்டகம், camel; 2. குதிரை, horse; 3. வேகமாக மூச்சு விடல், hard breathing; 4. துரிதமாக நடத்தல், fast walking.

வேகச் செய்யு மருந்து, caustic application.

வேகடம், ஓர் மீன், a fish, 2. இளமை, youthfulness.

வேகடன், வாலிபன், youth - young man.

வேகடை, see வேகடம்.

வேகடைத்தாள், குரு நாப்பட்டை, a thinn metallic leaf.

வேகத்தி, பூ வழலை, a kind of salt obtained from fuller's earth.

வேகத்தோன், வெள்ளைப் பாஷாணம், white arsenic.

வேக நாசனம், கோழை, phlegm.

வேக நிரோதம், மல மூத்திராதிகளை இயற்கைக்கு விரோதமா யடக்கல், suppression of the 14 natural urgings against nature.

வேகமடக்கல், உடம்பினுள்ளே மலம், மூத்திரம், அபானவாயு, தும்மல், நித்திரை, பசி, தாகம், காமம் முதலாகி 14 வகை இயக்கங்களை அதன் வழியாக விடாது இயற்கைக்கு விரோதமாக அவ்வேகத்தையடக்குதல், see வேக நிரோதம்.

வேகம், கடுமை, virulency as in Medicine; 1. மருந்து வேகம்; 2. சுக்கிலம், semen; 3. தீவிரம், swiftness, velocity; 4. கோபம், anger; 5. உடம்பினுள் உள்ள பதினான்கு வேகம், the fourteen natural urgings.

வேகரம், உத்திரம், virulency as in diseases or medicines; 2. உறைப்பு, pugency or acrimony,

வேகரித் திரிவான், கலைமான், stag.

வேகரோதம், மலமறிப்பு, obstruction of faeces in the intestines; 2. மலமிறுகல், constipation.

வேக வைத்தல், வெந்து போகும்படி செய்தல், to boil or bake; causing to burn.

வேகா, வேகாது, unboiled; 2. வேகமின்மை, slow.

வேகாதம், மலக்கட்டு, a state of bowels in which the irregular evacuations are very hard and expelled with difficulty - Costiveness.

வேகாதுப்பு, முடியண்ட படருப்பு, a kind of salt prepared out of human skull.

வேகாத்தலை, ஆகாய வெளி, open atmosphere.

வேகாத்தலை வழுக்கை, இள வழுக்கை, a foetus three months old.

வேகாப் பிணம், unburnt corpse.

வேகாமை, பச்சை, raw.

வேகாளம், see வெக்காளம்.

வேகி, மிளகாய், chilly.

வேகிகம், அடம்புக் கொடி, which see.

வேகுதல், காய்தல், boiling.

வேக்கா, கொருக்காப்புள்ளி, a tree - pithe colibium dulce.

வேக்காடு, சூடு, heat; 2. வேகுதல், boiled as in அரைவேக்காடு, half boiled.

வேக்காளம், மழையில்லாக் காலம், a dry period without rain; 2. வெக்காளம், fultriness; 3. வாய் வேக்காளம், nausia.

வேங்கக்கல், ஓர் வகைக்கல், a kind of stone; white translucent quartz.

வேங்கை, ஓர் மரம், kino tree - Pterocarpus bilobus alias P.indicus; 2. வரிப்புலி, large streaked tiger impetuous animal-man eater; 3. புலி தொடக்கி, thorny shrub which see; 4. பொன், gold.

வேங்கைக்கல், white translucent quartz.

வேங்கைக் குறித்தோன், சிம்பன், lion.

வேங்கை செயநீர், இம்மரத்துப் பட்டையிலே சாறு எடுத்து ஒரு பீங்கானில் ஊற்றி இதில் இரசிதக் குருவு போட்டு (ஒரு பணவிடை) மூடி பனியில் 3 நாள் வைக்க செயநீராம், a pungent liquid extracted from the juice of vengai by the process said above.

வேங்கைப் பிசின், வேங்கை மரத்தின் பிசின், the gum obtained from the indian kino tree.

வேங்கை மகாராஜன், வேங்கை செயநீர், which see.

வேங்கை மரம், இதற்கு உத்தர வேங்கை மரம் என்றும் பெயர்; இது தென் இந்தியாவிலும் இலங்கைத் தீவிலும் உண்டாகும்; இன்னும் பல விடங்களிலும் விளையும்; இதன் பிசனுக்கு சீமைக் காண்டாமிருக இரத்தம் என்று பெயர்; இது துவர்ப்பாயும் வாசனை இல்லதாயும் சிறு கட்டிகளாகவும் இருக்கும்; இதை சூரணித்துச் சாப்பிட பிரமேகம் வெள்ளை சிணுக்கிருமல் மாந்தம் இவை போம்; கண்ணொளி உண்டாகும்; இதை அபினி லவங்கப்பட்டை இவைகளுடன் சேர்த்துச் சாப்பிட அசீரணம், சீதபேதி, பித்த ரோகம், மலபந்தம் இவைகள் நீங்கும்; இரணத்திற்கு மேலே உபயோகிக்க இரத்தத்தை நிறுத்தும்.

வேங்கை யூறாகம், வேங்கைப்புலி, a large streaked tiger - man eater.

வேங்கை வகைகள், varieties of வேங்கை.

1. வேங்கை, Indian kino tree.
2. சிறுவேங்கை, Bredelia retusa.
3. முள் வேங்கை, Bredelia montana.
4. சந்தன வேங்கை, Pterocarpus santalina.
5. உதிர வேங்கை, pterocarpus marsupium
6. சோலை வேங்கை, (காட்டு சாதிக்காய்) wild mace - Myristica malabarica.
7. சாற்று வேங்கை (பெண் மரம்).
8. பெண் வேங்கை (Same as No.7)
9. மணிமுத்து வேங்கை
10. வச்சிர வேங்கை

வேங்கை வயிரம், வேங்கை மரத்து வயர பாகம், the middle hard core of the trunk of the tree - Indian kino.

வேசக நாளம், வயற்றறையில் சிரணவுறுப் பக்களிலுள்ள கருப்பு இரத்தத்தை ஈரலிற் சேர்க்கும் ஓர் நரம்புக் குழாய், Portal vein.

வேசம், யோனித்துவாரம், vestibule of vulva - Vagina.

வேசயப்பத்திரி, இலவங்கப் பத்திரி, cinnamon leaf.

வேசயம், இலவங்கம், clove.

வேசரம், ஒட்டகம், an animal - Camel.

வேசரி, கழுதை, an animal - ass; 2. கோவேறு கழுதை, a beast - Donkey - Mule.

வேசரி நீர், கழுதை மூத்திரம், urine of ass.

வேசரி லத்தி, கழுதை லத்தி, dung of ass.

வேசாடல், மனக்கலக்கம், agitation of mind.

வேசா வாரம், a polutice prepared with boneless pasted flesh - a cooked preparation of boneless pasted meat mixed with treacle (திரிகடுகு) dried ginger, pepper, and long pepper.

வேசாறல், இளைப்பாறுதல், taking rest.

வேசி, மிளகு தக்காளி, a plant - Solanum nigrum 2. வேசை, which see.

வேசிகை, வாயில், entrance; 2. யோனிவாய், vagina.

வேசிதம், seton.

வேசி நங்கை, மிளகாய் நங்கை, a plant.

வேசிப் பழம், எலும்மிச்சம்பழம், lime fruit.

வேசிப் பார்வை, புணர்ச்சி நோக்கு, liik with a desire for sexual intercourse.

வேசியர் பால், breast milk of prostitutes - not useful for any kind of medicines - internal or external.

வேசியூசரத்தி, see வேசிலவணத்தி.

வேசிலவணத்தி, காசிச்சாரம், a kind of prepared salt; which see.

வேசி விடையான், கழுதை, ass.

வேசும நகுலம், மூஞ்சுறு, musk rat.

வேச் சென்றிருத்தல், சூடு ஆறாதிருத்தல், to remain warm.

வேடசம், பிரம்பு, Calamus rotang.

வேட தலம், பீ வேல், a tree - Acacia eburinea.

வேடம், காஸ்மீரக்கல், Cashmir stone.

வேடிதம், மருந்து நாற்றம், medicinal smell or flavour.

வேடு, மூடு சீலை, a cloth tied round the mouth of vessel to serve as a cover; 2. வடிகட்டு சீலை, a cloth for strainign- filter cloth.

வேடு கட்டல், பாத்திரத்தின் வாயை சிலைத்துணியால் மூடல், covering the mouth of a vessel with a cloth on which the substance to be boiled in vapour is put.

வேடுகா, பாதிரி trumpet flower tree - Sterospermum Chelonoides.

வேடுமுள், a tree - Acacia farmiciana.

வேடு வழி, see வேடு முள்.

வேடை, மிகு வெப்பம், intense heat; 2. காமநோய், sexual passion.

வேடைக் காலம், கடுமையான வெயிற்காலம், very hot weather.

வேட்கை, காமவிருப்பம், sexual desire.

வேட்கை நீர், water for thirst; 2. காமநீர், a fluid discharge in a woman from orgasm in sexual intercourse.

வேட்கை பெருக்கம், காம நோய், excess of love for intercourse - amorousness.

வேட்டகம், பிசின், gum; மனைவியின் தாய் மனை, mother's in-law place.

வேட்டணம், காது, organ of hearing - Ear.

வேட்டம், சாரம், essence; 2. பிசின், gum

வேட்டல், see வேட்கை; மணம் செய்தல்.

வேஷ்டி தகம், வேஷ்டிதம், which see.

வேஷ்டிதம், (in erotic science) a position in sexual intercourse in which the woman is lying on her back with her vaginal orifice tightly closed after penetration by crossing one of her leges on the other tightly so as to produce maximum constriction of the vagina and thus bring great pressure on the penis.

வேட்டைக்காரன், see செந்நாய்; வேட்டை நாய்.

வேட்டைப் பல், விக்கிர தந்தம், caninetooh.

வேட்டை. வாளி, ஓர் குருவி, a battle.

வேணி, மரவேர், root of a tree; 2. ஆகாயம், sky, ehter; 3. வசம்பு, sweet flag - Acorus calamus; 4. பேய்ப் பீர்க்கு, Loofa - Lufa aegyptiaca.

வேணீரம், பொன்னாங் கொட்டை, soap-nut - Sapindus trifoliatus.

வேணீர், தாக நீர், water to allay thirst "வேணீர் கொள்ளவே

வேணீறு, நறுவிலி, Cordia obligua; 2. வெண்ணீறு, which see.

வேணு, குழலாதொண்டை, a plant - Capparis aphylles; 2. பற்பாடகம், fever plant - Mollugo cerviana; 3. மூங்கில், bamboo; 4. தலைச்சன் குழந்தை தலை மண்டையோட்டிலிருந்து செய்யப்படும் ஓர்வித அண்டச் சுண்ணம், the calcine white powder prepared from cranial bones of the first born.

வேணுகிசகம், கரும்பு, sugar-cane-Saccharum officinarum.

வேணு சபலம், மூங்கிலரிசி, bamboo seed.

வேணு நம், மிளகு, pepper - piper nigrum.

வேணு பத்திரி, மூங்கிலிலை, bamboo leaf; 2. பால் பெருங்காயம், white asafoetida.

Note: மூங்கிலிலையில் மனோசிலை சிவந்திடும். red orpiment is calcified as red powder by the leaf of bamboo.

வேணு பலம், வேணு சபலம், which see.

வேணு மளவு, வேண்டுமட்டும், to the desired amount - Adlibitum as much is requisite Quantum libest

வேணுவக் கடுபுகி, மூங்கிற் குருத்து, bamboo shoots.

வேண், ஆசைப் பெருக்கம், excess desire.

வேண்ட விருப்பு, விருப்பின்மை, reluctance.

வேண்டிய வளவு, வேண்டுமளவு, போது மட்டும், as much as required; quantum sufficit.

வேண்டும்போது, when required - Prorenata.

வேதகத்தி, சவர்க்காரம், soap.

வேதகம், கற்பூரம், camphor; 2. தானியம், grain.

வேதசம், ஓர் வகை வெள்ளி, a variety of silver.

வேத சவூதே, வஞ்சி, calamus rotang.

வேத சன்னம், அத்தி, fig - tree - Ficus.

வேதசாரம், நாணற் புல், reed; a kind of grass; 2. வெண் கருங்காலி, a white species of Acacia tree - Diospyros tupru.

வேதசம்பட்டை,

வேதத்துடங்கன், சாரைப்பாம்பு, male cobra.

வேதநாதம், வெள்ளெருக்கு, madar bearing white flowers - Calotropis gigantea (albiflora)

வேதநி, வெந்தயம், fenugreek seed - Trigonella foenumgraeum.

வேதபாகி, வெட்பூலா, which see.

வேதபுட்பி, வெள்ளை காக்கணம், a twinder bearing white flowers - Clitoria ternatea (albiflora)

வேதபூரநாதவேரெலும்பு, மாரெலும்பு, brestbone.

வேத பூலாசம், நீர்ப்பூலா, a plant - Phyllanthus reticulatus.

வேதமுகரி, see வேதமுக்கியை.

வேத முக்கியம், கச்சோரம், Curcuma zedoaria.

வேத முக்கியை, கஸ்தூரி, musk.

வேதம், இரசம், mercury; 2. வாலுளுவை, a plant - Gymnosporia montana; 3. இரேசகம், expelling the vital air; 4. ஆயுள் வேதம், Ayurveda; 5. பழமறை; அதாவது பழைய வேதம்; நான்கு வேதம், the four Vedas.

Note: பூர்வத்தில் தாத்ரியம், பௌடிகன், தலவகாரம், சாமம் என 4 வேதங்கள் உள்ளன. இந்நான்கு பழமறைகளும் வாக்கு மனோதீத கோசரமாயுள்ள பரம் பொருளாகிய எண்குணக் கடவுளது திருவாய் மொழிகளாகும். இவற்றைத் தரம் அறிவிற் சிறந்த சித்தர்கள் முதலான பெரியோர்கள் பேணி வந்தனர்.

பிற்பாடு உலகத்திலேயே சிற்றறிஞர்கள் அவற்றின் அருமை பெருமைகளை அறிய மாட்டாது கால நிலைக்குத் தக்கவாறு விரிந்து கிடந்த வேதங்களைச் சுருக்கி இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்று பெயர்களால் முதலில் வியாச முனிவர் வகுத்தார். இம்மூன்று வேதங்களுள் நடுவிலுள்ளது யசுர் வேதம்; அதன் நடுவேயுள்ளது சதருத்திர மந்திரமாம்; இம் மந்திரத்தின் நடுவிலே ''நமச்சிவாயச'' ''சிவதராயச'' என்னும் பஞ்சாட்சர மந்திரம் விளங்கிக் கொண்டிருக்கும்: அனேக காலத்தின் பிறகு அதர்வண வேதத்தையும் வியாச முனிவர் அருளிச் செய்தார். the four very ancient vedas and the four vedas edited by Vyasar must be noted.

வேதரிக் கண்ட பூடு, பிரண்டை, a climbing plant - Vitex quadrangularis.

வேதல், வேகுதல், boiling, being heated; 2. காந்தல், burning.

வேதவரிசி, வாலுவையரிசி, seeds of Gymnosporia montana.

வேதவல்லி, ஓர் பூண்டு, a plant Acacia farniciana alias Vehe[...] arniciana; இது பெரி[...] செடியாகவும் அல்லது மரமாகவு[...] இருக்கும்; முட்களுண்டு; இத[...] விரைகள் இரண்[...] வரிசையாயிருக்கும்; பூக்க[...] உருண்டை வடிவமாயு[...] இலைகள் தழைகளி[...] இருபக்கங்களிலும் உண்டு[...] வங்காளம், அசாம் மற்றெங்கு[...] விளையும்; இதிலிருந்[...] விசேஷமாய் பிசி[...] எடுப்பதுண்டு; இதன் [...] வாலையில் வைத்தால் வாசனை[...] திரவியம் வரும்; மார்கழி, தையி[...] பூ பூக்கும்.

வேதவாரிதி, கஸ்தூரியலரி, a variety of Nerium odorum.

வேத விஸ்தாரம், வாலைப்பூ நீர்[...] which see.

வேதனம், அறிவு, intellect; 2. பொன், gold.

வேதனா, செவ்விறகு, red fule or red feather.

வேதனா சாந்தினி, வேதனையைச் சாந்தப்படுத்தும்; சமப்படுத்தும் மருந்து அல்லது பொருள்களை, drugs and medicines that decreases pain - Sedative.

வேதனி, நோயை உண்டாக்குவது, that which causes pain or disease.

வேதனுப்பு,

வேதனை தீர்தல், வருத்தந் தீர்தல், being releived off pain.

வேதனை நோய், disease; 2. வலி, pain; 3. துன்பம், suffering; affliction.

வேதனைப் படல், துன்பப்படல், being tormented; 2. நோயினால் வருந்தல், suffering from disease or pain.

வேதனை விம்மல், பிரமேகத்தினால் ஆண் குறியில் தாபிதங்கண்டு கோசம் கடினமாக விம்முதல், bulging of urethra due to inflammation.

வேதன், சூதம், mercury; 2. கடுக்காய், gallnut; 3. கல்லுப்பு, rock salt; 4. கடலாத்தி, a plant - Sterospermum xylocarpus.

வேதாக்கினி குமரன், குப்பைமேனி, rubbish plant - Acalypha indica.

வேதாஞ்சனி,

வேதாந் தகையான்,

வேதாந்த பச்சை,

வேதாந்த முத்துநீர்,

வேதாந்த சாரம், தாமரைக் கிழங்கு, root of lotus.

வேதாந்த பாம்பாட்டி, பாம்பாட்டி சித்தர், one of the Siddhars Pamptti Siddhar.

வேதாந்த வாதி, துருசு, blue vitriol; copper sulphate.

வேதாரன், பல்லி, lizard.

வேதாளக் கன்னி, நிலவாகை, a tree which see.

வேதாள புற்றையுறிஞ்சும் வேந்தன், கரடி an animal - bear.

வேதாந்தத் தங்கம்,

வேதாளம், devil.

வேதி, வேறாக்கல், to transmute metals as in alchemy; 2. விகாரப் படுத்தல், to practice alchemy; 3. பிரித்தல், chemically decomposing; 4. see பேதி.

வேதிகை, பிரிக்குந்த தன்மை, the act of chemical decomposition.

வேதிட்டுக் கட்டிடல்,

வேதித்தல், see வேதி, to follow the practice of alchemy; 2. லோகத்தை மற்றொன்றாக மாற்றுதல், transmuting metal; 3. பிளத்தல், splitting, dividing.

வேதிய நிஷம், மாங்கிஷம், which see.

வேதியன், சீனாக்காரம், alum.

வேதியன் காரம், see வேதியன்.

வேதியன் வீசும், அணிற்பிள்ளை, squirrel.

வேது, மூலிகை அல்லது சரக்குகளை தண்ணீர் போட்டுக் காய்ச்சி யிறக்கி, அந்த ஆவியை வேதனையுள்ள விடத்திற்படும்படி செய்தல், அதாவது ஆவி காட்டல், Vapour bath with using drugs or without using drugs.

வேது, காரமருத்து, caustic; 2. ஆவி, vapour; 3. தண்ணீர், water, 4. வெய்து, that which is warm; 5. வேர்வை யுண்டாக்கு மருந்து, sudorific medicine - that which produces perspiration - Diaphoretic.

வேது கஷாயம், decoction used in the treatment by vapour bath.

வேதுகாட்டல், சூடு காட்டல், to foment; 2. ஒற்றடம் கொடுத்தல், to apply fomentation; 3. வேது பிடித்தல், to give vapour bath.

வேதுகாட்டுகை, ஒற்றடம், th act of fomentation; to expose to medicated vapour.

வேது சிகிச்சை, treatment by medicated vapours - Atmotheraphy.

வேது பிடித்தல், ஆவி பிடித்தல்; நோயாளியை முக்காலியில் அமர்த்தி இரட்டுத் துவி அல்லது கம்பளியை மேலே போர்த்தி கஷாயபாத்திரத்தை உள்ளே வைத்து அதில் சூடு கொண்ட செங்கல்லைப் போட்டு வியர்க்கும் படி ஆவி கொள்ளுதல், the process of having vapour both is given here which see, having steam bath using a sudorific drug; treatment by vapour or medicated vapour - Atmotheraphy.

வேதை, உருக்கு முகத்தில் குருக்கொடுத்துச் செய்யும் இரசவாத வித்தை, alchemy; 2. பொன்னாக்கல், transmuting into gold; 3. உரோம விருட்சம், which see; 4. சாலாங்க பாஷாணம், a kind of arsenic.

வேதை கொடுக்குங்கல், பேரோசனை, which see.

வேதைக் கனிப்பூடு, நாய்வேளை, a plant - Cleome viscosa.

வேதைக் கன்னி, நாய்வேளை, a plant - Cleome viscosa.

வேதைக் குரு, இரசவாதக்குரு, universal salt or substance used in alchemy.

வேதை சத்துரு, வெள்ளீய மணல், tin-ore.

வேதை சிந்தூரம், உலோகங்களைப் பொன்னாக்கு மருந்து, a red calcified powder used to transmute base metal into gold.

வேதைப் பொன், Alchemic gold; Philosopher's stone.

வேதை மருந்து, ரசாயனம், elixir.

வேதை முகம், உருக்குமுகம், melting point.

வேதையாடல், வாதஞ் செய்தல், practising alchemy.

வேதையுப்பு salt used in Alchemy.

வேதையுற்ற நாட்டியன், பொன்னம்பர், amber - a yellowish fosssil resin.

வேதையைக் கொல்லுமுப்பு, முடியண்ட படருப்பு, which see.

வேதை வேங்கை, உதிர வேங்கை, a tree - Pterocarpus marsupium.

வேத்திரச்சாய், பிரப்பங்கோரை, a kind of grass.

வேத்திரத்தாள், பிரப்பங் கிழங்கு, Rattan root.

வேத்திரம், இலந்தை, thorny tree - Zizyphus jujuba; 2. உப்பங்கோரை, a kind of grass; 3. பிரம்பு, rattan - Calamus rotang.

வேநிம்பம், வேப்பமரம், tree - Melia indica.

வேந்தர் படை, இந்திர கோபம், an insect which is red velvety appearance.

வேந்தனுப்பு, கம்பியுப்பு, potassium nitrate.

வேந்தன், அரசமரம், tree - Ficus religiosa. 2. வியாழம், Venus; 3. இரசம், mercury.

வேந்தன் தாரம், வாணகெந்தி, sulphur used in fire works.

வேந்தன் பட்டை, அரசம்பட்டை, bark of peepal tree - ficus religiosa.

வேந்தன் வெகுளி, மிருதபாஷாணம், a kind of arsenic.

வேந்திசம், வெண்மிளகு, white pepper.

வேந்தோன்றி, காந்தள், a climber - Gloriosa superba; 2. கார்த்திகைக் கிழங்கு, plough root - Gloriosa superba.

வேப்ப எண்ணெய், வேப் பெண்ணெய், oil extracted from the seeds of margosa - Neem oil.

வேப்பங் கள்ளு, margosa toddy.

வேப்பங் கொட்டை, வேம்பின் விரை, seeds of margosa.

வேப்பங் கொழுந்து, வேப்பிலைக் கொழுந்து, tender leaf of margosa tree.

வேப்பமுத்து, வேப்பங்கொட்டை, seeds of margosa.

வேப்பமொட்டு, வேப்பம் பூவின் அரும்பு, flower buds of margosa.

வேப்பம் பட்டை, இப்பட்டை விஷசுரம் நளிர் சுரம் இவற்றிற்கு உபயோகிப்பதுண்டு; இதன் சூரணம் கல்பமாக உபயோகிக்கலாம்; இக்கஷாயம் சுரத்திற்கு பிற்பாடு பலகாரியாகவும் பல ரணத்திற்கும் அக்கினி மந்தத்திற்கும் உபயோகிக்கலாம், வேப்ப மரத்தின் பட்டை, 100 வருஷத்திய வேப்பம் பட்டையும் பூவரசம் பட்டையும் கற்பத்துக்குச் சமானமாகக் கருதப்படும் bark of margosa tree used a tonic in medicine - Melia azadirachta.

வேப்பம் பதினி, வேப்ப மரத்தினின்றிறக்கும் பதனி, unfermented liquid got from very aged neem tree.

வேப்பம் பருப்பு, வேப்பங் கொட்டையினுட்பருப்பு; இதனால் தாவர சங்கம் விஷம் போம், the kernel of the seed of margosa; it is an geneal antidote.

வேப்பம் பாசி, ஓர் நீர்ப்பூண்டு, a water plant; Moss - Chara corallina.

வேப்பம் பிசின், வேப்ப மரத்தின் பிசின், gum of margosa.

வேப்பம் பூ, வேப்ப மரத்தின் பூ, இதன் கஷாயம் கல்லீரலின் தொழிலைச் சரிபடுத்தும், flowers of margosa. Its decoction regulates the action of liver; நாட் சென்ற வேப்பம் பூவால் பித்தத்தாலுண்டான பெருமூர்ச்சை, நாக்கு தோஷம், மலக் கிருமி போம், old dried flowers are better than the fresh flowers.

வேப்பம் வித்து, வேப்பங் கொட்டை, margosa seed.

வேப்பம் வேர், வேம்பின் வேர், root of margosa.

வேப்பரிசி, வேப்பம் பருப்பு, kernel of the margosa seeds.

வேப்பலகு, வேப்பங் கொட்டை, margosa seeds.

வேப்பாலிகம், வெட்பாலை, a tree - Berium antidysenterica.

வேப்பாலை, ஓர் செடி, a plant; 2. வெட்பாலை see- வேப்பாலிகம்.

வேப்பிலை, leaf of margos.

வேப்பிலைக்கட்டி, புளி; விளா எலுமிச்சை, கிச்சிலி இவைகளின் துளிர்களை வேப்பிலைத் துளிருடன் சேர்த்திடித்து உருண்டை செய் துலர்த்திப் பித்தத்தைத் தணிப்பதற்காக வுபயோகிக்கும் ஓர் உருண்டை, a bolus got by grinding margosa tender leaves, lime and bitter orange leaves.

வேப்பிலை நங்கை, மிளகாய் நங்கை, which see.

வேப்பீர்க்கு, வேப்பிலையின் ஈர்க்கு, the rib of the margosa leaf.

வேப்பு, see, வேம்பு.

வேப்பூலிகம், பூனைக்காலி, which see.

வேப்பெண்ணெய், நிம்ப எண்ணெய், oil extracted from the seeds of margosa (neem) - Neem oil or Margosa oil.

வேம், வேகும், will boil.

வேவம், பனம், கள், toddy.

வேம்பாடம் பட்டை, சுருள் பட்டை; சாயப்பட்டை, a bark - Ventiligo madras patana,

வேம்பாடல்,

வேம்பாணி, கிராணி; ஓர் நோய், a disease - chronic diarrhoea.

வேம்பாதிகம், நிலவேம்பு; ground neem, the - chronic diarrhoea.

வேம்பாதிகம், நிலவேம்பு, ground neem, the creat - Andrographis paniculata.

வேம்பின்மேல் புல்லுருவி, ஓர் கற்ப மூலிகை, 108 கற்ப மூலிகைகளுள் ஒன்று. a parasitic plant.

வேம்பு, வேப்பமரம், 20 அடி உயரம்; பூவின் புறவிதழ் 5 வகுப்பு; இதழ் 5. பூமுகிழ் லிங்கத்தின் அடியில் 10 இலைகள் இறகைப் போல்வன; சிற்றிலைகள் கோழி முட்டை வடிவமாயும் நுனி ஈட்டியைப் போலவும் பூக்கள் சிறியனவும், வெண்மையாயும் காய்கள் பழுத்தால் மஞ்சளாயும் 1 அறையில் 1 விரை யுடையதாயுமிருக்கும். சித்திரை முதல் ஆனி வரையில் பூக்கும்; எங்கும் கிடைக்கும். பார்வைக்கு

அழகு; இதன் பட்டை ரொம்பவும் உபயோகம். முறை சுரம், கை கால் பிடிப்பு இவைகளுக்கு கஷாயமாய்க் கொடுக்கலாம். இதன் சருகு கட்டிகளுக்கு கட்டு மருந்தாக உபயோகப்படும். சுளுக்கு, எலும்பு முறிவு இவைகளுக்கு இதன் கஷாயத்துடன் கற்பூ சத்தையும் சேர்த்துப் போடுவதுண்டு. காது, கண், பல இவைகளைத்தாக்கிய வாயுவுக்கு நல்லது; இதன் விரையில் இருந்து எடுக்கும் எண்ணெய் குஷ்டத்திற்கு கெட்ட புண்களுக்கும் தலைவலி, சூலை வாயுவுக்கும் கொடுக்கலாம். விளக்கெரிக்கலாம். இவ்வெண்ணெயை வெளியூர்களுக்கு அனுப்புவதுண்டு. இதினின்று கள் இறக்கலாம். மருந்துக்கு உபயோகப்படுவதுமாம், Neem tree. Margosa tree - Melia indica alias - Azadirachta indica; the tender leaves, the mird rib, bark, flowers. fruits, seeds and oil are all used as medicine.

வேம்பு வகை, வேப்ப மரம், margosa tree - Neem tree - Azadirachta indica alias Melia indica.

1.சிவனார் வேம்பு, Shiva's neem - indigofera asphalathoides.

2. மதகிரி வேம்பு, Bischopia javanica.

3. கருவேம்பு, black neem - Garuga pinnata

4. மலை வேம்பு, நாய்வேம்பு, Melia azadirachta.

5. சர்க்கரை வேம்பு

6. நில வேம்பு, Indian chiretta - andrographis paniculata.

7. கறிவேம்பு, curry leaf - Murraya koenegii.

8. நீர் வேம்பு, pteris genus.

9. துருக்க வேம்பு, Melia composita.

10. சன்னத் துருக்க வேம்பு,

11. வடிவேம்பு, Cippadessa fruiticosa.

12. சந்தன வேம்பு, Cedrela tonna.

13. பெரு வேம்பு,

14. சிறு வேம்பு

வேம்பு கற்பம், the method of usin it as Karpam is given below; வேப்பிலையை தினந்தோறும் சிறிய அளவில் தின்னுவதற்கு ஆரம்பித்து நாளுக்கு நாள் அதிகப்படுத்தியுண்பது. பெரும்பிணி வராது. விஷமேறாது. இக்கற்பங்கொள்ள பல நோய்கள் தீரும். 1 மாதம் கொண்டால் 18 குட்டம் தீரும்; பூத பிரேத பிசாசு சொல்லாமல் பயந்து மாண்டு போம்; இதன் கொழுந்தை பொடி செய்து வெருகடி தேனில் அரை வருஷம் கொள்ள நரை மாறும்; வாலிபனாய் 300 வயது இருப்பான்.

இவ்விருட்சத்தில் துளைத்து மேல் நோக்கி, சிலாகை தாக்கி இருப்பாணியாகும்; மற்றொன்று ஆகாது; இதின் கீழே பழகினதோர் பாண்டம் வைத்து தெரியாமல் வாய் மூடி நன்றாய் வைத்து மண்டலந்தான் சென்ற பின்பு விருப்பமுடன் தைலம் அங்கே இறங்கும் பாரு; மறுபடியும் அவ்விடம் மீண்டும் போய் தயிலமதை எடுத்துக் கொள்; இத் தைலத்தை 3 கழஞ்சியிடையில் தேன் கூட்டித் தின்பாயாகில் (அமிர்த யோகம் சுபதினத்தில்) ஒரு மண்டலம் தீர்க்கமாகக் கொண்டால் திரையுமில்லை நரையுமில்லை செப்பக்கேளு. எடுத்த கருமமெல்லாம் அஞ்சியே கொள்வாய் நீ இன்ப மனோதரனாகியிருப்பாய்; 1/2 வருஷம் கொண்டால் வயது. பதினாறே; வயிர நெஞ்சு உமிழ் நீர் வேதை ஆகாச கபால சித்தி கலைக்கியானம் காணச் செய்வான்; 1 வருஷம் கொள்ள சொல்லக் கூடாத பலன்கள் உண்டாம்.

வேம்புக் கொட்டை, வேப்பம் விரை, seed of margosa.

வேம்பு சிமிழ், வேப்பங் கட்டையினால் செய்த பருந்து வைக்கும் பரணை, a small box made of margosa wood for preserving medicines.

வேயரிசி, மூங்கிலரிசி, seeds of bamboo.

வேயல், வேயில், மூங்கில், bamboo - Bamboosa arundinacea.

வேயாம், இலந்தை, a thorny tree - Zizypus jujuba.

வேயி காரம், வெண்காரம், borax.

வேயிலை, மூங்கிலிலை, leaf of bamboo; it is an emmenagogue.

வேய், மூங்கில், bamboo.

வேய்ங் குழல், மூங்கிற் குழாய், cylinderical box made of bamboo.

வேரகம், கற்பூரம், camphor; 2. கற்பூரவல்லி, a creeper - Camphor plant thick leaved lavender.

வேரடம், இலந்தைப் பழம், jujuba fruit. See வேயாம்.

வேரம், உடம்பு, body; 2. மஞ்சள் turmeric - Curcuma longa, 3. சேம்பு, which see.

வேரல், see, வேய்.

வேரறப் பிடுங்கல், வேரோடு பறித்தல், to weed out; 2. முழுதும் குணமாக்கல், to root out as in disease.

வேரற்கு, சீந்தில், moon creeper - Tinospermum cordifolia.

வேரி, கள், palmyra toddy; 2. பூந்தேன், honey in flowers; 3. பழச்சாறு, juice of fruits; 4. வாசனை, fragrance; 5. வெட்டிவேர், fragrant yellow root - khus khus - Vetiveria zizianioides alias Andropogon aromaticus.

வேரிச் சுமம், வெள்ளெருக்கு, Madar plant bearing whtie flowers - Calotropis gigantea (albiflora)

வேசச்சூரி, நத்தைச் சூரி, which see.

வேரிணக்கி, ஓர் கொடி, see பைதிரிதி.

வேரி பீதகம், இருவேலி, khus khus root; see வேரி.

வேரில்லாக் கொத்தான், ஓர் வகை கொத்தான் கொடி, a variety of கொத்தான் moss creeper - Cassytha americana.

வேரில்லாத தாளி, Sita's knot.

வேருக்குள் பாஷாண சித்தி, உரோம விருட்சம், a kind of tree.

வேரூன்றல், வேர்பற்றல், taking root.

வேரூன்று கட்டி, அடிகனத்த கட்டி, thick based abscess - deep rooted abscess.

வேரையாட்டு பயிர், இலவங்கப் பட்டை, cinnamon bark - Cinnamomum zeylanicum.

வேரோடழிதல், வேருடன் கெடுதல், being ruined totally.

வேர், புல், பூண்டு மரம் முதலியவைகளின்படியில் ஆதாரமாக பூமியில் பரவியிருக்கும் கொம்புகள், root; வகைகள்; ஆணிவேர், tap root; 2. பக்கவேர், side root; 3. விழுது வேர், adventitious root.

வேர், திப்பிலி மூலம், root of Piper longum; 2. வியர்த்தல், sweating.

வேர்க்கடலை, நிலக்கடலை, ground nut; tille from pod maturing under ground, Manilla nut; Monkey nut. Seeds are eaten, oil is extracted from them and used for cooking - Archis hypogaea.

வேர்க்கடலைப்பருப்பு, நிலக்கடலை விதை, ground nut kernel.

வேர்க்கடலை பிண்ணாக்கு, ground nut cake - used as manure and food for cattle.

வேர்க்கடலை யெண்ணெய், வேர்க்கடலை பருப்பிலிருந்து எடுக்கும் எண்ணெய், ground nut oil used for cooking.

வேர்க் கஷாயம், வேர்களைக் கொண்டு இறக்குங் கஷாயம், a decoction prepared from roots e.g., தசமூல கஷாயம்.

வேர்க்கட்டை, வசம்பு, sweet flag - a drug - Acorus calamus.

வேர்க் காந்தி, விஷ்ணு காந்தி, a prostate plant with blue flowers used for fevers - Sphoeranthes indicus.

வேர்க் கியாழம், see வேர்க்கஷாயம்.

வேர்க் கிரியாத்து, see கிரியாத்து, which means நிலவேம்பு.

வேர்க்கிழங்கு, வேரிலுள்ள கிழங்கு, tuber, rhizome.

வேர்க்கிறது, வியர்க்கிறது, to be perspiring; 2. கோபமாயிருக்கிறது, to be angry.

வேர்க்குச்சு, ஓர் குச்சுப்புல், a kind of grass.

வேர்க்குரு, வெயிலாதி இறுக்கத்தால் உடம்பில் வியர்வை கொண்டு சிறுத்தும், பருத்தும் அணுக்களைப் போல் உடம்பில் பல விடங்களிலுண்டாகும் குரு, small mustard sized vesicles forming in several parts of the body due to the deposit of sweet on the surface of the body in summer - Heat rash - Prickly heat.

வேர்க்கு மருந்து, வியர்வையை யுண்டாக்கு மருந்து, Sudorific.

வேர்க்கொம்பு, இஞ்சி, green ginger - Zingiber officinale; 2. சுக்கு, dried ginger.

வேர்க் கொழுந்து, வேலங் கொழுந்து, tender leaves of Acacia arabica. Used of eye diseases.

வேர்ச் சாற்றில் செம்பு சுத்தி, பேய்க்கும் மட்டி, bitter apple - Cucumis colocynthis.

வேர்ச்சாற்றில் நவலோக சுத்தி, காட்டுக் கொள், a plant wild gram - Rynchosia.

வேர்ச்சாற்றில் நாகங்கட்டி, விருத்தி a plant, which see.

வேர்த்தல், வியர்த்தல், perspiring; sweating; 2. கோபம், anger.

வேர்த்தோலி, வேர்த்தோல், வேர்ப்பட்டை, bark of the root.

வேர்ப்படலம், ஓர் கண்ணோய், an eye disease.

வேர்ப்பலா, வேரில் அல்லது அடி மரத்தில் காய்க்கும் முதிர்ந்த பலா மரம். An aged jack tree which bears fruit on the trunk - artocarpus integrifolia alias A. hiterophyllus.

வேர்ப்பார், கோபமாயிருக்கிறவர், one who is angry.

வேர்ப்பிடுங்கல், நோய் குணப்படுவதற்கு மந்திரம் செபித்து செடியின் வேரைப் பிடுங்கல், plucking the root as a sign of curing diseases.

வேர்ப்புண்,

வேர்ப்பு, வியர்வு, sweat; 2. கோபம், anger; indignation.

வேர்ப்பூலா,

வேர்ப் பேலகம், காட்டேலம் wild cardamum.

வேர் வெட்டு, ஓர் வகைப் பல் நோய், a disease of the tooth.

வேர்வை, வியர்வை, sweat.

வேர்வை தட்டல், வியர்வை யுண்டாதல், perspiring.

வேர்வை சுரம், வேர்வைக் காய்ச்சல், sweating fever; a contagious malignant fever marked by dark coloured sweat - Ephemera maligna - Anglicus sudor.

வேர்வையுண்டாக்கி, வியர்வையுண்டாக்கு மருந்து, a medicine or drug which promotes sweating - Diaphoretics.

வேர்வை வாங்கி,

வேலங்குச்சி, கருவேலங் குச்சி; பல்லுக்குறுதி; "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" a twig of Acacia arabica 8 inches long and of finger's thickness is used as tooth-brushs is strengthens the teeth.

வேலந் தண்ணீர், water soaked with the root or bark of the Acacia arabica.

வேலமரம், ஓர் மரம், a thorny tree - Acacia arabica அல்லது கருவேல மரம்.

வேலம், ஓர் மரம், a thorny tree - Acacia genus.

வேலம் பட்டை, வேலமரத்தின் பட்டை, bark of Acacia arabica which is astringent.

வேலம் பட்டைச் சாராயம், போதையும் பித்த கோபமும் உண்டாக்கும், arrack prepared from the bark of Acacia.

வேலம்பாசி, ஓர் பூண்டு, a herb - Vallisneria spiralis.

வேலம்பிசின், வேல மரத்தின் பிசின், gummi acacia.

வேலன், வேலம், which see.

வேலம் பூச்சி,

வேலா, கருவேல், Acacia arabica.

வேலா மேற் புல்லுருவி, parasitic plant growing on the acacia tree.

வேலா முற்றாழை, see கடற்றழை.

வேலாயுத மான், சிம்பம், lion.

வேலாரை, கடலாரை which see.

வேலாவலயம், கடல், sea; 2. பூமி, earth; see வேலை.

வேலி, உத்தாமணி அல்லது வேலிப் பருத்தி, a twiner - Daemai extensa; 2. கொடிவேலி, plumbago; 3. கரும்பு, sugar-cane.

வேலிகம், கற்றாழை, aloe; 2. ஓர் வகை மலக்கிருமி ரோகம், a disease due to worms in the intestines.

வேலிக் கள்ளி, spurge growing on the hidge.

வேலிக்காரம், வெண்காரம், borax.

வேலிக் கொடி, வேலிப்பருத்தி, see வேலி.

வேலிக் கொவ்டை, கோவை, a climbing plant - Bryonia grandis.

வேலிதம், கட்டு, bandage.

வேலி நாயகம், காட்டா மணக்கு, wild castor plant - jatropha carcas.1

வேலி நோய், ஓர் வகை நோய், a kind of disease.

வேலிப்பருத்தி, உத்தாமணி; உத்தமதாளி; அச்சாணி மூலி, a twiner title being a hedge plant bearing fruit with cottony fibres inside. Dog's bane; withlow plant - Daemia extensa. The whole plant is emetic and expectorant and used mostly in children's disease.

வேலிப்பாகல், கொல்லம் பாகல், - Bryonia garcina.

வேலிப்பாசி, பழம்பாசி, (hedge+moss) diffuse hairy plant found on hedges; wound leaf - Sida humilis.

வேலி முரண்டி, unidentified.

வேலிமுள், கருவேல் முள், thorn of Acacia arabica.

வேலி மூங்கில் ஓர் செடி, a plant - justicia betonica.

வேலின் மேற்புல்லுருவி, see வேலா மேற்புல்லுருவி.

வேலை, கடல், sea; 2. கடற்கரை, sea shore; 3. காலம், time; 4. நிகழ்காலம், present time; 5. நோய், disease; 6. பனி, dew; 7. see வேளை.

வேலைக் கந்தகம், கடற்பாசி, seea weeds; 2. ஓர் உபரசச்சரக்கு, one of the 120 natural substances.

வேலை நீர், கல்லுப்பு, rock salt.

வேலைமுலை மாதர், தூதுவளை, a thorny climper, three lobed night shade - Solanum trilobatum.

வேலைருசிவஞ்சி, சித்தாமுட்டி, a drug - Pavonia zeylanica.

வேல், ஓர் மரம், a thorny tree; வேலம், or வேலா, acacia arabica.

2. பச்சை வேல், Acacia genus.
3. சீமை வேல், Acacia dealbata.
4. பரங்கி வேல்.
5. பீ வேல், Acacia farniciana
6. நல்லவேல்
7. வெள்வேல், Acacia leucophalaca (white babool)
8. கருவேல், Acacia arabica
9. சீமைச் சிறுவேல், common wattlle - Acacia decurrenus.
10. கடிவேல், Acacia melanoxylon.
11. கஸ்தூரி வேல், Acacia farniciana.
12. உடைவேல், arrow thorn tree - Acacia planifrons alias. A. eburnea.
13. குடைவேல், umbrella thorn babool - Acacia tomentosa.
14. பீக் கருவேல், Acacia eburnea
15. கந்தர் வேல், jungle nail - Acacia tomentosa.
16. சீமை வெள்வேல், Acacia ferruginea.
17. வெள்ளை முள்வேல், same as No.18,
18. முள் வேல், rubber thorn - Acacia latronum
19. பேய் வேல், Acacia farniciana.
20. கூந்தல் வேல், Acacia tomentosa.

வேல் கந்தி, சிறு புள்ளடி, a plant - Hedysarum.

வேல் சங்கு, முட் சங்கு, a conch with rhorny edges; 2. உபரசச் சரக்கு, a mineral body.

வேல் முகம், கல்லாரை, a creeper.

வேல் லஜம், மிளகு, pepper - piper nigrum.

வேல்லி, கொடி, a creeper.

வேல் விழி மாது, கண்டங்கத்திரி, a thorny shrub - Solanum xanthocarpum.

வேல் விழியால், கஸ்தூரி மஞ்சள், a kind of turmeric - Curcuma aromatica.

வேவி, வேக வைத்தல், boiling.

வேவித்தல், வேகவைத்தல், boiling.

வேழகம், பீர்க்கு, Loofa - Ribbed gourd - Luffa acutangula.

வேழக் கரும்பு, நாணற் கரும்பு, which see.

வேழக் கைலாதி, see மதனப்பூ.

வேழதி, மூங்கில், bamboo.

வேழம், கரும்பு, sugar cane; 2. நாணல், reeds; 3. மூங்கில், bamboo; 4. பீர்க்கு, ridged gourd; 5. யானை, elephant.

வேழாகிகம், பூவந்திக் கொட்டை, soap nut; 2. பூவந்திக் கொடி, a creeper.

வேழ், கரும்பு, sugar cane - Saccharum officinarum.

வேளா, ஓர் மீன், a large fish.

வேளாச்சுறா, a large cetaceous - fish - Grampus.

வேளாண்மை, மெய், truth.

வேளா தரம், ஓர் வகைப் புரசமரம், a tree; வைம்புரசு, butea frondosa.

வேளிருகைச் சீலை, கரும்பு, sugar cane - Saccharum officinarum.

வேளுகி, வேம்பாடம்பட்டை, which see.

வேளுங்கி, வேம்பாடல், which see.

வேளுசி, அகிற்கட்டை, eagle-wood.

வேளை, ஓர் பூண்டு, தென் இந்தியாவில் விசேஷம்; இதன் இலைகளைப் பச்சையாகவே உபயோகப்படுத்தலாம், . இதினின்று ஒரு வித காரமான எண்ணெய் எடுக்கலாம். அது சீக்கிரத்தில் ஆவியாய்ப் போகக் கூடியது; இதற்கு வெள்ளுள்ளி அல்லது கடுகெண்ணெயின் குணமுண்டு; இதன் இலையின் சாற்றைப் பிழிந்து காதுகளில் விட சீல் வடிதலும் காது வலியும் குணப்படும்; அன்றியும், குடலேற்றம் நீங்கிப் போம்; விரைகள் கிருமிப் பூச்சிகளைக் கொல்லும்; இதன் சூரணம் குழந்தைகளுக்குக் கொடுப்பதுண்டு; வெள்ளைப் பூண்டுடன் கஷாயமாகக் காய்ச்சி அதினின்று தைல மெடுத்து குஷ்ட முதலாகிய சர்ம வியாதிகளுக்கு கொடுக்கலாம்.

இதில அனேக வகைகள் உண்டு; இதிலிருந்து தைலமிறக்கித் தலை முழுக சீதளம் வாத சிலேட்டுமம்,

தோஷம், வாயு இவைகள் போம்; நல்லவேளை வேர் பல் விளக்க உதவும், வசீகரம் உண்டாம். a medicinal plant. Cleome pentaphylla; Its leaves are edible and used as greens. Its root is used as tooth brush, and it causes brightness of the face. Its juice along with that of garlic is used to consolidate vermilion. That vermilion is very useful for fevers (by C.D.) 2. மூளையின் மாமிசம், cerebrum or cerebellum.

வேளையின் பூவினால் மார்ச்சளி, கணமாந்தம் வாத கோபம், சலதோஷம் நீங்கும், வேளைச்சாறு சூதத்தைக் கட்டும், its juice is said to consolidate mercury.

வேளை, (வகைகள்) the varieties are;

1. தை வேளை, a plant - Cleome felina.
2. நல்ல வேளை
3. நாய் வேளை, a plant - Gleome viscosa.
4. முக்கா வேளை Galega spinosa.
5. கொள்ளுக்காய் வேளைTephrosia purpurea alias T.villosa.

வேளை வேர், root of Cleome pentaphylla its juice along with that of garlic is said to bind cinnabar.

வேள், ஆண் மகன், male; 2. செப்பு நெருஞ்சில், a prostate plant - Indigofera enneophylla.

வேள்விமலை, திவ்விய மருந்து மூலிகைகளையுடைய ஓர் மலை, mountain containing many extra ordinary drugs.

வேறினக்கி, கற்பவுற்பத்தி, conception of the womb.

வேறு மருந்து, ஒரு வைத்தியரிடம் மருந்து சாப்பிடுங்காலத்தில் அதை விட்டு மற்றொருவரிடம் வாங்கி சாப்பிடு மருந்து, to take medicine from another physician while taking from one.

வேற் கழலி, உடம்பின் நரம்பு, nerves of the body.

வேற் குஞ்சரன், தேவாங்கு, an animal; sloth.

வேற்றம், capillary - attraction.

வேற்றுக் குரல், மாறு குரல், change of voice; 2. தொண்டைக் கம்மல், hoarse voice.

வேற்றுடம்பு, மாறான வுடம்பு, change in the appearance of body - through diseases.

வேற்று முகம், முன் அறியாத முகம், a new face.

வேற்றுரு, உருக்குலைதல், disfiguration of the body.

வேனல், கானல், glare.

வேனிகா, கஸ்தூரி, musk.

வேனில், வெயிற் காலம், summer season; 2. எச்சிலுமிழ் நீர்; saliva - sputum.

வேனில் நீர், எச்சில், spit; 2. உமிழ் நீர், saliva.

வேனிற்காலம், வெயிற்காலம், hot season; summer.

வேனிற் பச்சை, தேட் கொடுக்கி, which see.

வேனீற்று, see வேனிற் பச்சை.

வை, வைக்கோல், straw; 2. வையகம், world; 3. புல், grass; 4. அகாத ரோகம், severe disease; 5. வையென்னேவல், put.

வைகசரம், இலவங்கப் பத்திரி, cinnamon leaf.

வைகமூலி, சல்விக் கொடி, navel cord.

வைகரி, உள்ளடங்கிய ஓசை, internal sound.

வைகல்லியம், சூனியம், witch - craft.

வைகறை, விடிவதற்கு 10 நாழிகை முற்பொழுது, a period of four hours before day break; 2. வசிக்குமிடம், residential place.

வைகாசம், விடியற் பொழுது, day break.

வைகாலம், சாயுங்காலம், after noon.

வைக்கிராந்த துருதி, வைகிராந்தக் கல்லை மூலிகை முதலியவைகளில் போட்டுக் கரைந்த பின் மறுபடியும் கட்டுதல், a fortified crystallised stone formed from the solution of வைகிராந்தம் in some medicinal drugs.

வைகிராந்த சத்து.

வைகிராந்த பற்பம், வைகிராந்தக் கல்லை குதிரை மூத்திரத்தில் ஊற வைத்துச் சுத்தி செய்து எடுத்து உலைக்கடத்தில் வைத்து ஊத பற்பமாகும். This semi precious stone is soaked in the urine of female horse and then subjected to the fire of a furnace. It becomes calcified.

வைகிராந்தம், உலோகங்களைப் பேதிக்குங்குணமுடைய ஓர் வகை இரத்தினம்; இதனால் ஆயுசு விருத்தி, தாதுபுஷ்டி, பசியுண்டாம்; இது பற்பல வர்ணங்களினால் எட்டு வகையுள்ளது; இது விந்திய பர்வதத்தின் வடக்கில் அகப்படும்; இதை ஓர் அரக்கனது இரத்தமென்பர்; இராச வர்த்தம்; இக்கல் 8 வகை வர்ணங்களால் எட்டுவித மெனப்படும்; இது மகிஷாசுரனை சாமுண்டீஸ்வரி கொன்ற காலத்தில் அவனது இரத்தம் என்று சொல்வதுண்டு. a precious stone. This is the one of the two inberior varieties; the other is இராச வர்த்தனம்.

வைகிராந்தகம், ஓர் வகைப் பாஷாணம், a kind of mineral poison. குமுத பாஷாணம்; படிகம் போன்ற ஓர் விதக் கல்; க்ஷயம் காசம் கிராணி முதலியவைகள் போம்; நீலம் அல்லது செந்நிறமுடையது. It cures consumption, chronic diarrhoea and asthma.

வைக்கிராத்திதம், கிரந்தி நாயகம், a plant - an unknown plant.

வைகுண்டம், தும்பை, a flowering plant - Leucas aspera or Diosphyros glutinosa; 2. கருந்துளசி, black variety of holy basil - Ocimum sanctum.

வைகுரா, தும்பா, a plant - Leucas aspera.

வைக்கோல், காய்ந்த பயிர்ப்புல், straw.

வைக்கோல் மெத்தை, நோயாளிகள் படுப்பதற்காக ஆஸ்பத்திரிகளில் அமைக்கும் ஓர் வித அமளி, straw bed - Lectus Stramineus.

வைசந்தி, முன்னை மரம், a tree. Its root is used in medicine; leaves edible - Premana integrifolia.

வைசயந்தி, வாதமடக்கி, a medicinal shrub. Used for rheumatism - Cleodendron phlomoides. (தழுதாழை).

வைசயாதி, தழுதாழை, a tree - Cleodendron phlomodies.

வைசனனம், பிள்ளை பெறுமாதம், the month due for delivery.

வைசனி, ஆமிரம், mango tree; 2. புளியமரம், tamarind tree.

வைசாரிணம், மீன், a fish.

வைசிகம், உயிருடன் கூடிய உடலை அறுத்து அறிவது, to learn by cutting the living organism; 2. உடலையும் உயிரையும் பிரித்து அறியும் வல்லமை, a supuernatural power of separating body from the soul; 3. தளிர், tender leaf.

வைசியக் குலக்கரு, மூன்று மாதத்திற்கு மேற்பட்டு 5 மாதத்திற்குள்பட்ட குழந்தை

பிண்டத்தின் கரு. 3 to 5 month's old foetus.

வைசியப் பாம்பு, மலைகளில் வாசம் செய்யும் பாம்பு, mountainous snake.

வைசினி, பீசிம்; ஆண் குறியின் விரை. testis.

வைசூரி, அம்மை, small pox-variola.

வைசூரிக்காய்ச்சல், அம்மையினாலுண்டாகுங் காய்ச்சல், varicolous fever.

வைசூரி சுரம், அம்மைக் காய்ச்சல், variolous fever.

வைசூரித் தடிப்பு, red spots preseiding the pustulation in small-pox.

வைசூரிப்பால், அம்மைப்பால், cow-pox vaccine - Virus of cow-pox.

வைசேசிகன், materialist.

வைச்சிரம், வச்சிரம், which see.

வைச்சிர வணாலயம், ஆலமரம், banyan tree - Ficus bengalensis.

வைடாலம், பூனை, cat; 2. மாயாசாலம், magic.

வைடூரியம், நவமணிகளில் ஒன்று, one of nine gems. Cat's eye - Lapis lazuli.

வைணவம், வைஷ்ணவம், மூங்கிலரிசி, bamboo seed.

வைணவி, மூங்கிற் குழாய், bamboo tube.

வைஷ்ணவி, சுழிமுனை நாடி, Suzhumunai Nadi; 2. பிரம்மரந்திரம், Brahmaranthiram.

வைஷ்ண வீரசம், எல்லாவித சுரங்களுக்கும் தன் வந்திரியால் சொல்லப்பட்ட ஆயுள் வேத மருந்து. an Ayurevedic medicine for all fevers, mentioned by Dhanvantri.

வைதகி, வைதேகி, திப்பிலி, long peper - Piper longum.

வைதகிகம், திப்பிலி, long pepper Piper longum.

வைதர்ப்பம், தந்தமூல ரோகம், disease of the root of tooth.

வைதளாலம், காரல் கத்திரி, a plant.

வைதீகப்படி, கடைப்படி; 16 பலம் கொண்ட அளவு, a measure of 16 palams.

வைதூரியம், வைடூரியம், one of nine gems cat's eye - Lapis lazuli.

வைதேகிகம், திப்பிலி, long pepper - Piper longum.

வைதேகி சிலந்தி, a kind of spider.

வைத்தங்கி, கற்றாழை, aloe.

வைத்திய, மருத்துவ, medical.

வைத்தியகம், வைத்திய நூல், medical science.

வைத்திய காவியம், தேரையர், தன்வந்திரி, திருமூலர், அகஸ்தியர் இவர்கள் பாட்டுகளாகச் செய்த பெருங்காப்பியத் தமிழ் வைத்திய நூல்கள், Tamil medicial treatises written individually by various siddhars such as Agastiar, Thirumoolar, Dhanvnathri, Theran.

வைத்திய கிரந்தம், கிரந்த பாஷையில் எழுதிய ஆயுள் வேத நூல், Ayureveda science in Grantha script.

வைத்தியக் கண்ணாடி, அகஸ்தியர் செய்ததாகச் சொல்லும் ஓர் வைத்திய நூல், a treatise on medicine said to be written by the sage Agastya.

வைத்தியக்குறவர், one who is well versed in medicine.

வைத்திய சங்கம், வைத்திய விஷயமாகக் கூடும் இடம். Academy of medicines.

வைத்திய சமாஜம், see வைத்திய சங்கம்.

வைத்திய சாட்சி, வைத்திய விவகாரத்தைப் பற்றி சாட்சியம் சொல்வோன், medical witness.

வைத்திய சாஸ்திரம், வைத்திய நூல், medical science.

வைத்திய சிகாமணி, one well versed in medicine.

வைத்திய சிந்தாமணி, அகஸ்தியர், விஸ்வாமித்திரர், யூகிமுனியாகிய இவர்கள் செய்த தமிழ் வைத்திய நூல், a treatise on medicine done individually by Agastya, Visvamithra and Yugi.

வைத்திய சுமார்த்த, வைத்திய நியாயங்களைக் குறித்த, medico legal.

வைத்திய சுமார்த்த விசாரணை, வததயி விஷயமாய் ஏற்பட்ட நியாய விசாரணை, Medico legal enquiry.

வைத்திய சுருக்கம், concised medical treatise.

வைத்திய சூத்திரம், போகர், கொங்கணவர், அகஸ்தியர் இவர்கள் தங்கள் தமிழில் பாடிய வைத்திய பெரு நூலாகிய முதனூலிலிருக்கும்

பொருள்களை சுருக்கிச் சூத்திரங்களாகப் பாடிய வழி நூற்கள். some Tamil medical works complied and edited by various authors.

வைத்தியத் திரட்டு, சுந்தரானந்தர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a Tamil medicial treatise by Sundarananadar.

வைத்தியத்துக் கடுத்த, மருத்துவ சம்பந்தமான, medicinal.

வைத்திய நூல், மருத்துவ நூல், medicine.

வைத்திய பள்ளு நாடகம், தேரையர் செய்த ஓர் வைத்திய நூல், a Tamil medical book in the form drama written by Theriyar a renowned scholar and physician.

வைத்தியபாகம், மருத்துவம் செய்யும் முறை, portion that is given out by the physician according to his method.

வைத்திய பூரணம், மருத்துவ விஷயமாக எல்லாப் பொருட்களும் அடங்கும்படி அகத்தியர் திரட்டிப்பாடிய ஓர் தமிழ் வைத்திய நூல், a Tamil medicla work by Agasthiar.

வைத்திய போதினி, மருத்துவம் கற்பார்க்கு வைத்திய முறைகளை விளங்க விவரிக்கும் மருத்துவ நூல், a medical book in Tamil for those who learn Tamil medicine.

வைத்தியமப்பியாசித்தல், மருந்தில் பழகுதல், to practise medicine.

வைத்திய மாதா, ஆடாதோடை, a shrub Adhathoda vasica.

வைத்திய முப்பு; இதற்குக் குருச்சுண்ணம் என்றும் பெயர்; சுத்தி செய்த பூநீறு 1 பங்கு, தாளிக்காத கற்சுண்ணாம்பு 1 பங்கு, பனி சலம் அல்லது சுத்த சலம் 4 பங்கு; ஒரு மண்பாண்டத்தில் முன்னர் பூ நீற்றைப் போட்டு பிறகு கற்சுண்ணத்தைப் போட்டு 1 பங்கு சலத்தை விட்டு மூடி வைத்து பத்து நிமிஷம் கழித்து மற்ற 3 பங்கு சலத்தையும் விட்டு நன்றாகக் கலக்கி அடுப்பின் மீது ஏற்றி சிறு தீயாய் எரித்து இரண்டு கொதி வருகிற வரையில் கொதிக்க வைத்து எப்போதும் வெயில் படும்படியான இடத்தி வைத்து மூங்கில் தட்டால் மூடி வைக்க வேண்டும்; 3 நாள் வரையில் இதனைப் பிரதி தினமும் காலையில் இரண்டொரு தடவை மூங்கிற் குச்சியால் கலக்கி வரவேண்டும்; பிறகு கலக்க வேண்டியதில்லை; 4ஆம் நாள் சாயந்திரம் பார்த்தால் அந்த சலத்தின் மீது நுரையைப் போல் ஒரு வித சத்துப் படிந்திருக்கும்; அதனை சாக்கிரதையாக பனைபோலைத் துண்டினால் அல்லது தந்தப் பலகையால் வழித்து வேறொரு பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்; இவ்விதம் ஒரு வாரம் அல்லது ஒரு பத்து நாள் வரையில் அல்லது அதில் சத்து பூத்துக் கொண்டிருக்கிற வரையில் முன் போல் வழித்தெடுத்து உலர்த்திக் கொள்ள வேண்டும்; இது தான் வைத்தியமுப்பு; இதன் உபயோகம்; இந்தச் சுண்ணத்தை அதனதன் பிரமாணத்திற்குத் தகுந்த அளவு வேறு லேகியங்கள் சூரணங்கள் தைலங்கள் ஆகிய இவைகளிற் கலந்து உபயோகிப்பதால் அந்தந்த அவுஷதங்களிற் சொல்லிய குணத்தைத் தரும்: அன்றியும் இதன் மூலமாக பாஷாணம் வீரம் பூரம் முதலிய சரக்குகளை ஓடாமல் நிறுத்தி நீற்றுக் கொள்ளலாம், the preparation of Vaidya muppu and its uses are given above which see.

வைத்தயி முறை, see, வைத்திய பாகம்; விசுவாமித்திர் செய்த ஓர் தமிழ வைத்திய நூல், a medical book written by Viswamithirar.

வைத்திய முறையாய், medically.

வைத்தியம், வை+து+ கியம்; வையகத்தாருக்கு வேண்டப்படும் நுகர்ச்சிப் பொருள்களை அவரவர் உடம்பு நிலைக்குத் தக்கபடி கூறும் நூல்; இந்நூல் ஆராய்ச்சியில் வல்ல வருக்கே வைத்தியர் எனப் பெயராகும். physician must possess thorough knowledge of the drugs and the body and be able to select the drugs to said the patient.

வைத்தியம், நோயாளிக்குச் செய்யும் பரிகாரம், the art of medicine - Therapeutics.

வைத்தியம் பண்ணல், வைத்தியம் பார்த்தல், சிகிச்சை செய்தல், to practise medicine to cure diseases.

வைத்திய ரசாயன நூல், latro chemistry.

வைத்திய ரத்னாகரம், தமிழில் அகத்தியர் செய்த ஓர் வைத்திய நூல், a medicial work by Agasthiar.

வைத்தியராதாரம், வைத்தியர்களுக்குண்டான உரிமைகள், medical privileges.

வைத்திய வல்லாதி, a medical work by Agasthiar.

வைத்திய வாதி, வைத்தியத்திலும் வாதத்திலும் தேர்ந்தவன், one experienced both as physician and alchemist - latro chemist; life is regarded as a collection of chemical changes and compared the body

NOTE: J.B. Van is the founder of the latro chemical school.

வைத்திய விவகாரம், வைத்திய சம்பந்தமான வழக்குகளில் நியாயங்கள், Medical Jurisprudence.

வைத்தியன், வைத்திய நூற்களைச் சந்தேகமறக் கற்றுப் பழகி உடம்பின் கூற்றுக்குத்தக்கவாறு அப்பொழுதே பலனைக் கொடுக்கக் கூடிய மருந்துகளை உபயோகித்து நோயாளியின் நோயைப் போக்கடித்து, சுகமென்னும் ஆரோக்கியத்தை அடையும் படியும் சீவனை சரீர முழுமையும் பரவச் செய்யவும் வல்லமை வாய்ந்தவன், physician. He should be capable of curing the diseases and restore good health to his patients.

வைத்தியன், நோயைக் குணப்படுத்துவோன் one who cures diseases - Physician.

வைத்தியன் இலட்சணம்; The qualifications of a physician.

1. should possess a thorough knowledge medicine and allied science.

2. should have previous experience - practical experience - in the treatment.

3. Should be clever and intelligent in his practice.

4. Should possess mild temper with much patience.

5. Should possess a strong heart and should not fear at seeing the worst symptoms of the disease.

6. Should be free from jealousy and partiality.

7. Should have clear organs of sense without defect.

8. Should be sympathetic and kind to wards others, specially patients.

9. Should be conversant with the states and conditions of disease & health.

10. His morality should be good and fair.

11. should have analytical knowledge in diagnosis.

12. should be familar with all technical terms.

வைத்தியாங்கம், கோரக்கச் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a medical work in Tamil by Korakkar.

வைத்தியா சாரம், வைத்திய சம்பந்தமான ஒழுக்கங்கள், medical etiquette.

வைத்தியாயப் பியாசி, நோய்களுக்காக மருந்துகளை புகட்டப் பயில்வோன், medical practitioner.

வைத்திரி, கிறுக்கு, insane.

வைத்தி ரேயம், கானல்மா, a tree.

வைநாகணத்தி, காக்கட்டான், a twiner plant - Clitoria ternatea (typica)

வைநாகதம், கறியுப்பு, common salt.

வைநாக போளம், சூரிய போளம்.

வைநாகப்பூ, சிறுநாகப்பூ, which see.

வைநாகமல்லி, see நாக மல்லிகை.

வைநாக மாலி, காஞ்சிரை, nux-vomica.

வைநாக முட்டி, விஷமுட்டி, nux-vomica.

வைந்தவம், குதிரை, horse.

வைபோகச் சாதி வலம், இலவங்க பத்திரி, cinnamon leaf.

வைபோக நாதி, கம்மாறு வெற்றிலை, black-betel which has stron pungent taste.

வைப்பரி தாரம், தயாரித்த அரிதாரம், prepared orpiment.

வைப்பரி பாஷாணம், தயாரித்த ஓர் வகை அரிதாரம், prepared realgar.

வைப்பிலக்கணம், ஏமசிங்கி, கெந்தி பச்சைக் கற்பூரம் பாஷாண வகைகள் முதலான சரக்குகளில் வைப்பு முறையைக் கூறும் மச்சமுனி கலைக்கியானம் எண்ணூற்றின் ஐந்து கண்டங்களிலோர் காண்டம், processes of preparing various drugs. They are given in one of five parts of Machamuni Kalaignanam.

வைப்பு, மருந்துகளை வைத்திய முறைப்படி தயாரித்தல், preparation of medicines according to the rules prescribed in the medical science.

வைப்புச் சரக்கு, வைத்திய முறைப்படி தயாரித்த மருந்துச் சரக்கு, prepared drugs as opposed to பிறவி சரக்கு. natural drugs. பாஷாண வைப்பு, சிவப்பு சவ்வீர வைப்பு. வீரவைப்பு, இந்துப்பு, சூடன் இரச கற்பூரம், பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, அபினி, பளிங்கு கற்பூர வைப்பு, பெருங்காய வைப்பு, வைர வைப்பு, செம்பு வைப்பு, நாற்பச்சை வைப்பு (in mantric science) to put certain articles in the house or compound of the enemy to do him farm; (in medicine) artifical substitutes or prepared substititues for natural substances.

வைப்பு பாஷாணம், தமிழ் வைத்திய நூலில் சொல்லிய முறைப்படி தயாரித்த 32 பாஷாண வகைகள்; விவரங்களுக்கு தொகை

அகராதியைப் பார்க்கவும், artificial arsenics prepared according to text; for details see தொகை அகராதி.

வைமரை, தேக வலியைப் போக்கும் ஓர் மரம், a tree useful in removing bodily pain - chloroxylon swietenia.

வைப்புப்பு, செய்தவுப்பு, prepared or artificial salt; 2. கடல் நீரைக் கொண்டு காய்ச்சியெடுத்த வுப்பு, manufactured sea salt.

வைப்பு முறை, மருந்துகளைத் தயாரிக்க, சுத்தி, ஈடு, கூட்டு, முதலாகிய விதிகள், rules of preparing in several courses.

வைம்புரசு, கரும்புரசு, the sation wood - Chloroxylon swietenia. see வைமரை.

வையகம், வைகிராந்த பாஷாணம், see வைக்கிராந்தம்.

வையங்காரை, see, காரை.

வையங்கி யோமம், see வியங்கி யோமம்.

வைய மளந்தோன் சயனம், நாகம், zinc; 2. பாம்பு, snake.

வையவித்து, கடுக்காய், gall-nut-myrobalam.

வையாரிகம், லிலியூரற்பட்டை, a fragrant drug.

வையிஞ்சி, நிலப்பனை, ground palm - Curculigo orchioides.

வைர கவசம், பல்லின் வைரபாகத்தைச் சுற்றிலும் மூடிக் கொண்டிருக்கும் சவ்வு, cuticle of the enamel.

வைரங் கொள்ளல், பலப்படுத்தல், to be hardened.

வைரபாகம், the hard solid portion of the trunk of a tree.

வைரமணி, Siva's mineral - dull red or reddish white Chalcedony - Cornelian - one of the many varieties of quartz kind.

வைரமணி, ஓர் வகை ரத்தினம், one of the nine gems; diamond.

வைர மரம், வைரம் பாய்ந்த மரம், hardwood tree.

வைரமான, உறுதியான, solid.

வைர முள், வளையலுப்பு; salt prepared from fuller's earth and used to make bangles.

வைரம், வயிரம், diamond - hard substance; diamond of all the nine precious stones, coral, pearl and

diamonds are used in medicines - Coral and pearl are much used. The rest are not to useful and so rarely used or not used at all.

It is purified by being enclosed with in a lemon and boiled in the juice of the leaves of Agathi - Sesbania grandiflora. It is roasted into a powder and prescribed for strengthening, the body and improving genereal health. It is an alterative tonic.

வைரவம்,

வைரவன் பூசை,

வைர வுடம்பு, hardened body.

வைராக்கியம், ஆசையின்மை, மனவடக்கம்.

வைரக்கூச்சு,

வைரப் பகுதி, வைரம் பாய்ந்த அல்லது கடினமான பாகம், solid part of a timber.

வைரப் பொருள், கடினமான வஸ்து, very hard solid substance.

வைர வனத்தி, நாயெலும்பு, bone rid of solt parts.

வைரவன், சிறு நீரை, a vegetable green - Amaranthus.

வைராக்கியம், ஆசையின்மை, absences 0 desire; dispassion.

வைராடம், இந்திர கோபம், an insect - Cochinceal insect.

வைராந்தகன், ஆத்து மருந்து, which see.

வைரிதை, வீரம், corrosive sublimate - king of all medicines.

வைரியத் தானம், பெருங்குறிஞ்சி, an edible and medicinal plant of the big species- vomiting swallow wort - Asciepias vomitoria.

வைரூப்பிய நூல், சீவ வர்க்கத்திலும் தாவர வர்க்கத்திலும் விகார ரூபங்கள்; குணங்கள் ஏற்படுவதைப் பற்றிக் கூறும் ஓர் வகை நூல், The science of mal formations in the vegetable and animal kingdoms.

வைரூப்பியம், சீவர தாவர வர்க்கங்களில் ஏற்படும் மாறுபாடுகள் அல்லது விகாரங்கள், mal formations or other changes formed in vegetable as well as in animal kingdoms.

வைரோசனன், வைசோனி, சூரியன், sun.

வைலவம், வில்வம், a sacred tree; bael tree - Crataeva religosa alias Aegle marmelos.

வைவச் சுதம், மஞ்சள், turmeric - Curcuma longa.

வைனதேய மாத்திரை, வெங்காரம், துத்தம், துரிசு, நிமிளை சாதிலிங்கம் இவைகளைத் தனித்தனிச் சாற்றிலரைத்து விஷப் பாம்பு கடிகளுக்குத் தகுந்த அனுபானத்தில் கொடுக்கத் தீரும் மாத்திரை.

- வெள சாலகம், மல்லைப்பூடு, which see.

வெளசாலி, தேற்றாங் கொட்டை, clearing - nut - Strychnos potatorum.

வெளசிகம், தாமரை, lotus.

வெளசிகா, நீர் முள்ளி, a weed - Hygorphila auriculata alias Asteracantha longifolia.

வெளசிகி, மருக்கொழுந்து, maid's love - Artmesia abrotanum.

வெள சேகம், முயற்புல், grass eaten by rabbit the dub grass or devil's grass - Cynodon dactylon.

வெளசேதிகம், எட்டி, nux-vomica - Strychnous nux-vomica.

வெளவம் தாமரை, the lotus; 2. வெண்டாமரை, a white flowered lotus.

வெளவாலுறைந்த மரம், "ஓடும் வெளவால் உறைந்த மரத்தடி, தேடுஞ் சக்கையெடுத்தரைத்தேயதை" (தேரையர்-வா)

வெளவாலொட்டி.

வெளவால், பற்களுடைய ஓர் விதப்பறவை, bat - Scotophilus coromandelianus.

வெளவால் மீன், ஓர் விதக் கடல் மீன்; பத்தியத்திற்குதவும்; இது இரண்டு பக்கமும் சப்பையா யிருக்கும்; ஆகாரத்திற்குதவும்; இது மூன்று வகை; வெள்ளை, வெள்ளி, கறுப்பு, a kind of flat sea fish - Pomfret. It is of three varieties; white, silvery and black - black is not good for health; it increases vatham.

வெளவாவியம், மாமரம், mango tree - Mangifera indica.

வெளவி, மான், an animal - deer.

வெளவியாத் தாழை, மஞ்சள் தாழை, yellow coloured screw pine Pandanus odoratum.

வெளவுதமம், மலை வாழை, hill plantain.

வெளவுதம், வனமல்லிகை, wild Jasmine.

வெளவுதவி, மாமரம், mango tree.

க்ஷ

க்ஷணம் சணம்; நெடி; moment.

க்ஷயம், ஓர் வகை மிருத்திய ரோகம், உடம்பின் தாதுக்களை நாளுக்கு நாள் ஒன்றன் பின் ஒன்றாக க்ஷயிக்கச் செய்யும் காரணம் பற்றி இப்பெயர்; இதற்குப் பல காரணங்களுண்டு.
இளம்பிராயத்தில் காணும் காணச் சூட்டைத் தக்கபடி கவனியாதிருத்தலாலும் சிற்றின்பத்தில் மிதமிஞ்சி ஆழ்வதினாலும் அகால போசனம் ஆறாத் துயரம் ஆகிய பல காரணங்களினால் ஓஜஸ் என்னும் பிராணதாரச்சத்து நஷ்டமடைந்து, ஜடராக்கினி மந்தப்பட்டு, சிறு சுவாசக் குழல்கள் அடைபட்டு சப்த தாதுக்களின் உஷ்ணம் குறைவுபட்டு இரச தாது, இரத்தமாக மாறாமல், மற்ற தாதுக்களுக்கு போஷனையற்று அதனால் காலளவில் மாமிசதாது குறைந்து தாபித முண்டாகி உடம்பை நாசப்படுத்தும் ஓர் நோய், ஓர் வகைக் கிருமியானது சுவாசக் குழையின் வழியாக நுரையீரலிற் சென்று தாபிதத்தை யுண்டு பண்ணும் என்பது ஆங்கில நூற்றுணிவு. This is considered to be a fatal disease. It is a wasting disease and hence this name 'க்ஷயம்'. Congenital heat, excessive sexual enjoyment, untimely meals, severe distress are some of the causes of this diseases, small air passages of the lungs get blocked, general heat decreases, and vitiates all the seven tissues which unable to absorb their nutrition get wasted in long run. The modern science considers this disease is causes by bacteria.

க்ஷயரோகம், See க்ஷயம்.

க்ஷாரம் சாம்பலைக் கரைத்து எடுத்த வுப்பு, salt extracted from ashes

க்ஷீ

க்ஷீணம், ஈனம், குறைவு defect.

க்ஷீணித்தல், கெட்டுப் போதல், get destroyed.

க்ஷுத் பாதை, பசி வருத்தம் hunger pain.

க்ஷீரநீரம், நீரும் பாலும் கலந்த mixture of milk and water.

க்ஷீரம், பால், milk.

க்ஷீரான்னம், பாலும் சோறும், cooked rice and milk.

ஷ

ஷடாதாரம், see ஆறாதாரம்; see சுவாதிட்டானம்.

ஷட்பதம் வண்டு; அறுகால் வண்டு beetle with six legs.

ஷட்ரசம் அறுசுவை six tastes.

ஷட்வர்க்கம், அறுபகை, காமம் முதலியன six hostilities, lust etc.

ஷண்முகி, பஞ்ச முத்திரைகளிலொன்று, one of five poses of hand.

ஸ்

ஸ்கந்தம், கந்தம், smell; fragrance.

ஸ்கலனம் பெரும்பாடு menorrhagia.

ஸ்கலிதம், விந்து வீழ்கை, loss of semen.

ஸ்காந்தம், காந்தம் magnet.

ஸ்தம்பனம், தம்பனம்; அதாவது தடுத்தல், அல்லது நிறுத்தச் செய்யுமோர் வித்தை, the art of preventing and sustaining a thing.

ஸ்தன கோளம், mammary gland.

ஸ்தனம், தனம்; முலை, woman's breast.

ஸ்தன வழலை, mammary sarcoma.

ஸ்தன வழற்சி, mammary inflammation or irritation.

ஸ்திரி, பெண் woman.

ஸ்நானம், முழுக்கு bath பெண்களைக் குறிக்கும் பொது, வீட்டு விளக்கம் ஆகும்; if applied to females it means menses.

ஸ்படிகம், படிகம், crystal.

ஸ்பரிசம், தொடுதலையறியும் உணர்ச்சி; இது ஐம்புலனில் ஒன்று, tactile sensation - sense of touch.

ஸ்போடகம், கொப்புளம், boil.

ஸ்மசானம், சுடுகாடு, cremation ground.

ஸ்மரித்தல், மரித்தல்; சாதல், to die.

ஸ்வர்ணம் பொன் gold.

ஸ்வர்ணயூலி, செம்பு மல்லிகை a kind of jasmine.

ஸ்வஸ்தம், சுகம்; சௌக்கியம் healthy condition.

ஜ

ஜகதாமத்தி, see தகரை; 2. See கஸ்தூரி மஞ்சள்.

ஜகநாயகன், காந்தம் magnet.

ஜசுதம், See தார்.

ஜடலம், உடம்பு, body.

ஜடாமாசி see சடாமாஞ்சில்.

ஜட்வாரிக் கிழங்கு, ஓர் வகை நாபி, a kind of aconite.

ஜண்ட மாருதம், பெருங்காற்று, voilent wind, tempest.

ஜதசம், See தார்.

ஜதரம், வயிற்றிற் பக்கம் அல்லது குறுக்காக காணும் கழலை, a tumour in the abdomen.

ஜமதக்கினி, ஓர் இருடி, இவர் பரத்துவாச ரிஷியின் பேரன் என்றும், அநுலோமன் பெற்ற பிள்ளை யென்றும் சொல்வர். உலகத்தில் கீர்த்தியோடு இருந்த சித்தருமாவர். யோகியென்ற நூல் 10,000 மும் கூறியவர், an hermit; he is said to be the grand son of Barthwajrishi and son of Anul[...] He is a famous Siddhar, and a[...] of Yoghi 10,000.

ஜமால் கொட்டை, See [...] கொட்டை.

ஜமேக்கா மிளகு, ஜமேக்கா [...] விளையும் ஓர் வித மிளகு, p[...] grown in jamica island.

ஜம்பு, நீர் water.

ஜம்பு நாவல், see சம்பு நாவல்.

ஜம், கொய்யா guava.

ஜல கர்ப்பிணி, நீரட்டை leach.

ஜல காக்காய், நீர் காக்காய் சலகாக்காய்.

ஜலக் கடுப்பு, சிறுநீர் கழியும் [...] தோன்றும் கடுப்பு நோய், dysu[...]

ஜலக் கழிச்சல், தண்ணீரா[...] பேதியாதல், watery motions Watery diarrhoea.

ஜலசம், தாமரை lotus.

ஜல சரக்குழி, நீர்த் தாமரை lotus.

ஜல சன்னம், தாமரை lotus.

ஜல சிலேட்டுமம்.

ஜல செந்து, மீன் fish.

ஜலச் சிராவம், பெண் குறியிலிருந்து நீர் போன்ற திரவம் வடியும் ஓர் நோய், a disease of woman characterised by oozing of a colourless liquid through vagina.

ஜலஞ்சலம், See சங்கு conch.

ஜல தலம், See அரசமரம் peepul tree.

ஜல தோஷம் நீர் கொள்ளல் cold.

ஜல நீலி, see வேலம்பாசி; see சலநீலி.

ஜல பத்திரம் see ஜலதலம்.

ஜல பாதை, see சலபாதை.

ஜல பிப்பிலி, நீர்த்திப்பிலி a species of long pepper - Commelina salicifolia.

ஜலப் புஷ்பம், மீன் fish.

ஜலப்பு, பேதிக் கிழங்கு jalap.

ஜலப் பிரளயம் பெரு வெள்ளம் great flood, deluge.

ஜலப் பொடி, பேதி மருந்து jalap powder.

ஜல மடைப்பு, சிறுநீர் அடைப்பு, obstruction of urine.

ஜல மண்டலி, ஒரு விஷ சந்து, a spider - like insect which is very poisionous.

ஜல மேகம், ஓர் வகை மூத்திர நோய், a veneral disease.

ஜலம், நீர் water.

ஜல ரோகம், நீரிழிவு, diabetes.

ஜல வாதை, see சலவாதை.

ஜலில தாபனீயம் ஜல தத்துவ நூல் book on aqua.

ஜலுப்பு, நீர்த் தோஷம் cold.

ஜல்லரி, see சல்லரி.

ஜல்லி, சல்லடையால் பெரும் பொருள்களையும் சிறு பொருள்களையும் பிரித்தல், to sieve.

ஜவந்தி, see செவ்வந்தி.

ஜனப நார், see சனப்பை.

ஜனன மாலி, see சதகுப்பை.

ஜனனம், பிறப்பு, birth.

ஜனனா சூசம், பிரசவத் தீட்டு, pollution due to delivery of child - the period between the delivery of the child and the first bath taken by the mother.

ஜனனேந்திரியம், see ஜன்மேந்திரியம்.

ஜன்மம், பிறப்பு birth.

ஜன்மேந்திரியம், பிறவிக்குக் காரணமான உறுப்புகள்; ஆண்குறி, பெண் குறி genitals.

ஜன்னி, சன்னி, apoplexy.

ஜன்னிபாத சுரம், see சன்னிபாத சுரம்.

ஜா

ஜாடி ஒரு வகை மண் பாத்திரம் jar.

ஜாடு, மலையாடு, four horned antelope see சௌசிங்கம்.

ஜாதகம், பிறந்த நேரத்தில் நவக்கிரகங்கள் நின்ற நிலையைக் காட்டும் குறிப்பு, Horoscope.

ஜாதி, see சாதி; 2. See சாதிக்காய்.

ஜாதிகை, ஓர் வகை குயில், a kind of cuckoo.

ஜாதிக்காய், சாதிக்காய், nut meg. which see.

ஜாதிப் பத்திரி சாதிப்பத்திரி, mace which see.

ஜாதி லிங்கம் சாதி லிங்கம் cinnabar which see.

ஜாப்பர் விதை see குரங்கு மஞ்சள் விதை which see.

ஜாலம், see சாலவித்தை; செப்படி வித்தை, magic.

ஜி

ஜிக்வா கண்டரோகம், ஓர்வகை தொண்டையையும் நாக்கையும் பற்றிய நோய் diseases of the throat and tongue. See சிகுவாகண்ட ரோகம்.

ஜிக்வா ரோகம், நாக்கு ரோகம், disease of the tongue.

ஜித்து, மாயவித்தை display of super natural powers; See சித்து.

ஜிமிக்கைப் பூ, சிமிக்கிப்பூ, which see.

ஜிமிக்கி, சிமிக்கி, which see.

ஜின்னு, நீர்நாய் விதை testis of water dog; 2. சவ்வாது, which see.

ஜீ

ஜீரங்கி, மரத்தைத் துளைக்கும் வண்டு, a beetle boring the stem of a tree.

ஜீரணம், சீரணம் which see.

ஜீவன், உயிர், soul.

ஜீவன் முத்தன், சீவன் முக்தன், which see.

ஜீவி, உயிரோடிருப்பவன், one that is living; 2. அழிஞ்சில், which see; சீவி, which see.

ஜீவோற்பத்தி, கருக்கொள்ளுங்காலம், period of gestation.

ஜுரம், சுரம் which see.

ஜெ

ஜெயநீர், செயநீர், which see.

ஜெயபாளம், நேர் வாளம் which see, Croton seed.

ஜெந்து, பிராணி, see செந்து.

ஜென்மம், பிறப்பு birth, see சென்மம்.

ஜொ

ஜொள்ளு, சொள்ளு, which see.

ஜொள்ளு வாயன், சொள்ளு வடிந்தபடியாக வுள்ள வாயை யுடையவன், one whose mouth driples with saliva.

ஜோ

ஜோதி, சோதி, which see, astral or devine light.

ஜோதி மயம், வாலுளுவை which see.

ஜோலி வேலை work; appointment.

ஜோவி, அத்தி இனத்தைச் சேர்ந்த செடி, ficus infectoria.